# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-17 Issue-11 நவம்பர்-2024 ரப்யுஸானி-ஜமாதிலவ்வல் 1446




பாலஸ்தீன மீட்புப் போர்..

## வீரமகன் யஹ்யா சின்வரின் வெற்றிகள்!

## கஷ்மீர் மக்களின் துயரமும் எதிர்ப்பும்?



சா. பீட்டர் அல்போன்ஸ்

## ஸாரி; மை லார்ட்ஸ்!

நீதிபதி சந்திரசூட் அவர்களின் நீதிபரிபாலனம்


# வைகறை வெளிச்சம்

நவம்பர்-2024 ■ ரப்யுஸானி-ஜமாதிலவ்வல் 1446

■ தனிஇதழ் - ரூ. 40

■ ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480


■ வெளிநாடு - ரூ. 5000


மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!




பாலஸ்தீன மீட்புப் போர்..
வீரமகன் யஹ்யா சின்வரின் வெற்றிகள்! 4


கஷ்மீர் மக்களின் துயரமும் எதிர்ப்பும்? 27





21
ஸாரி; மை லார்ட்ஸ்!
சா. பீட்டர் அல்போன்ஸ்

யஹ்யா சின்வர் ஷஹீத் அவர்களுக்குப் பின் ஹமாஸ் - 9

மக்களுக்கு பயங்கரவாத சட்டமும் பொருளாதார மீறல்களுக்கு மயிலிறகு சட்டங்களும் - 13

நெல்சன் மண்டேலா பேரன் மண்ட்லா மண்டேலா பிரிட்டனுக்குச் செல்ல விசா மறுப்பு... - 34

சிலுவைப் போர் 2.0 - 36

இந்தியாவில் முஸ்லிம்கள் - 40

ஃபாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு - 45

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 50

குழந்தை வளர்ப்பு - 54


மருத்துவம் - 57

தலையங்கம் - 60

கருத்தரங்கம் - 62



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only



பாலஸ்தீன மீட்புப் போர்..

# வீரமகன் யஹ்யா சின்வரின் வெற்றிகள்!

**ஹமாஸ் இயக்க தலைவர் யஹ்யா சின்வார் அவர்கள் இஸ்ரேலுக்கு எதிரான போரில் கொல்லப்பட்டுள்ளார். நெஞ்சை நிமிர்த்தி தன் இன்னுயிரை அல்லாஹ்வுடைய பாதையில் ஈந்துள்ளார்.**

கொல்லப்படுவதற்கு முன்னரே அவர் அளித்துள்ள பேட்டிகளில், “என்னை எதிரிகள் கொன்றுவிடப்போவதாக மிரட்டுகிறார்கள். நான் சாதாரணமாக படுக்கையிலோ, கொரோனா தொற்றுநோயாலோ அல்லது மாரடைப்பாலோ அல்லது சாலை விபத்துகளிலோ மரணிக்க விரும்பவில்லை. அல்லாஹ்வுடைய பாதையில் போரிட்டு கொல்லப்படுவதையே விரும்புகிறேன். அது என் வாழ்நாளை ஒரு வினாடிக் கூட குறைத்துவிடாது.” என்ற அவருடைய நேர்காணல்கள் தற்போது இணைய தளத்தில் உலா வருவதை நம்மால் காண முடிகிறது.

இவருடைய மரணமும் இன்னும் இவர் போன்ற ஹமாஸ் இயக்க தலைவர்களின் மரணங்களும் நமக்கு ஒன்றை சுட்டிக்காட்டுகின்றன. அதாவது இவர்கள் பதுங்கு குழிகளில் பத்திரமாக அமர்ந்து கொண்டு தங்களுடைய தொண்டர்களின் உயிர்களை களத்தில் பலிகடாக்களாக ஆக்குவது இல்லை. மாறாக களத்தில் அவர்களுக்கு முன்பதாக முன் நின்று போர் செய்து தங்களுடைய இன்னுயிர்களை அல்லாஹ்வுடைய பாதையில் ஈந்து இஸ்லாமிய வழிகாட்டுதலுக்கு ஏற்பவே வாழ்ந்து காட்டியுள்ளனர்.

இவர்கள் வாய் சவடாலுக்காகவோ அல்லது வெற்று பெருமைகளுக்காகவோ எங்கள் உயிரை அல்லாஹ்வுடைய பாதையில் தர தயாராக உள்ளோம் என்று அனைவருக்கும் முன்னிலையிலும் சபதம் செய்து சொல்லுவதில்லை. உண்மையிலேயே அந்த எண்ணம் கொண்டவர்களாகவே வாழ்கின்றனர். அதை களத்திலும் செய்து காட்டுகின்றனர்.


vaigarai velicham official

இப்பேற்பட்ட தியாகிகளின் தியாகங்களுக்காகவே சில இறை வசனங்கள் இறக்கப்பட்டுள்ளன. அந்த வசனங்களை மெய்ப்பிப்பதாகவே இவர்களுடைய வாழ்வியல் அமைந்துள்ளது.

> **முஃமின்களில் நின்றுமுள்ள மனிதர்கள் அல்லாஹ்விடம் அவர்கள் செய்துள்ள வாக்குறுதியில் உண்மையாக நடந்து கொண்டார்கள்; அவர்களில் சிலர் (ஷஹீதாக வேண்டும் என்ற) தம் இலட்சியத்தையும் அடைந்தார்கள்; வேறு சிலர் (ஆர்வத்துடன் அதை) எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் - (எந்த நிலைமையிலும்) அவர்கள் தங்கள் வாக்குறுதியிலிருந்து சிறிதும் மாறுபடவில்லை.**
> 33:23

மேற்சொன்ன இந்த வசனம் அனஸ் பின் நள்ர் (ரலி) அவர்களுடைய விஷயத்தில் இறங்கிய வசனம்.

இது குறித்து பின்வரும் ஹதீஸ் விளக்குகிறது.

*3861.* அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது:

எனக்கு யாருடைய பெயர் சூட்டப் பெற்றுள்ளதோ அந்த என் தந்தையின் சகோதரர் (அனஸ் பின் அந்நள்ர் -ரலி) அவர்கள் பத்ருப் போரில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் கலந்துகொள்ளவில்லை. அது அவர்களுக்கு மனவேதனையை அளித்தது.

“அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கலந்துகொண்ட முதல் போரில் கலந்து கொள்ளாமல் எங்கோ சென்றுவிட்டேனே! இனிவரும் காலத்தில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் களம் காணும் ஒரு வாய்ப்பை அல்லாஹ் எனக்குத் தந்தால் நான் செய்யப்போவதை (என் வீரத்தையும் தியாகத்தையும்) அல்லாஹ் பார்த்துக்கொள்வான்” என்று கூறினார். (இதைத் தவிர விளக்கமாக வேறெதையும் அவர் கூறவில்லை.) இதைத் தவிர வேறெதையும் சொல்ல அவர் அஞ்சினார். (சொல்லிவிட்டுச் செய்ய முடியாமற் போய்விட்டால் என்னாவது என்ற பயமே அதற்குக் காரணம்.)

பின்னர் அவர் உஹுதுப் போரில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்



டார். (போர்க்களத்தை நோக்கி அவர் சென்றபோது) எதிரில் சஅத் பின் முஆத் (ரலி) அவர்கள் (பின்வாங்கி) வர(க் கண்டு), “அபூஅம்ரே! எங்கே (செல்கிறீர்)?” என்று கேட்டுவிட்டு, “இதோ! சொர்க்கத்தின் நறுமணத்தை உஹுத் மலையிலிருந்து நான் பெறுகிறேன்” என்று கூறினார்.

பிறகு எதிரிகளுடன் போரிட்டு அனஸ் பின் அந்நள்ர் (ரலி) அவர்கள் வீர மரணமடைந்தார்கள். அவரது உடலில் வாளால் வெட்டப்பட்டும், ஈட்டியால் குத்தப்பட்டும், அம்பால் துளைக்கப் பட்டும் எண்பதுக்கும் மேற்பட்ட காயங்கள் காணப்பட்டன. அவர்களுடைய சகோதரியும் என்னுடைய அத்தையுமான ருபய்யிஉ பின்த் அந்நள்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: என்னுடைய சகோதரரை, நான் அவருடைய விரல் (நுனி)களை வைத்தே என்னால் அடையாளம் காண முடிந்தது. (அந்த அளவுக்கு அவரது உடல் எதிரிகளால் சிதைக்கப்பட்டிருந்தது.)

“அல்லாஹ்விடம் எதைப் பற்றி உறுதிமொழி எடுத்தார்களோ அதை உண்மைப்படுத்தியோரும் இறைநம்பிக்கை கொண்டோரில் உள்ளனர். அவர்களில் சிலர் (இறந்து “வீர மரணம்“ எனும்) தமது இலட்சியத்தை அடைந்து விட்டனர். (அதை) எதிர்பார்த்துக் கொண்டிருப்போரும் அவர்களில் உள்ளனர். அவர்கள் சிறிதளவும் (வாக்கை) மாற்றிக்கொள்ளவில்லை” *(33:23)* எனும் இந்த வசனம் அனஸ் பின் அந்நள்ர் (ரலி) அவர்கள் விஷயத்திலும் அவர்களுடைய தோழர்களின் விஷயத்திலுமே அருளப்பெற்றது என்றே மக்கள் கருதிவந்தனர்.

அத்தியாயம் : 33

இதே சம்பவம் புகாரி ஹதீஸ் கிரந்தத்திலும் 2805வது செய்தியாக பதிவாகியுள்ளது.




ஹமாஸ் தலைவர்கள் அல்லாஹ்வின் மீது சத்தியம் இட்டு வெற்றி அல்லது அல்லாஹ் வுடைய பாதையில் வீர மரணம் என்ற இலக்கோடு மஸ்ஜிதுல் அக்ஸாவை காப்பாற்ற வேண்டும் என்ற ஒட்டுமொத்த முஸ்லிம்களின் பொறுப்பையும் தங்களின் தோள்களில் சுமந்து கொண்டு அல்லாஹ்வுடைய பாதையில் போர் செய்கிறார்கள். ஷஹீத் என்ற உயர்ந்த அந்தஸ்தை அடைகிறார்கள்.

இவர்கள் குறித்து பின்வரும் திருக்குர்ஆனில் வசனம் இவ்வாறு கூறுகிறது

(நபியே!) நீர் கூறுவீராக:

**"(வெற்றி அல்லது வீரமரணம் ஆகிய) இரு அழகிய நன்மைகளில் ஒன்றைத் தவிர வேறு எதையும் நீங்கள் எங்களுக் காக எதிர்பார்க்க முடியுமா?" ஆனால் உங்களுக்கோ அல்லாஹ் தன்னிடத்தி லிருந்தோ அல்லது எங்கள் கைகளி னாலோ வேதனையை அளிப்பான் என்று நாங்கள் எதிர்ப்பார்க்கிறோம் – ஆகவே நீங்கள் எதிர்பார்த்திருங்கள், நாங்களும் உங்களோடு எதிர்பார்த்திருக்கின்றோம்"**
9:52.

இப்போது முஸ்லிம்களில் சிலருக்கு உளவியல் பிரச்சனை. அது என்னவென்றால் இப்படி களத்தில் முன் வரும் ஹமாஸ் இயக்க தலைவர்கள் எல்லாம் கொல்லபட்டு விடுகிறார்கள்? இந்த தலைவர்கள் எல்லாம் தங்களை பாதுகாப்பாக வைத்துக் கொண்டால் இந்த தலைவர்கள் எல்லாம் கொல்லப்படாமல் இருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்று கருதுகிறார்கள்.

ஆனால் இது சரியான மனோநிலை அல்ல. இஸ்லாம் நமக்கு காட்டித் தந்த வழிமுறையும் இதுஅல்ல. இதனை நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் நடந்த பின்வரும் சம்பவம் சட்டிக் காட்டுகிறது.

ஒரு முறை மதீனாவில் பகைவர்கள் படை யெடுத்து வருவதாக வதந்தி மக்களிடையே பரவி பெரும் பீதி ஏற்பட்டது. தற்போது நபி (ஸல்)அவர்கள் அபூதல்ஹா (ரலி) அவர்களிடம் இருந்து உடனடியாக ஒரு போர் குதிரையை இரவல் வாங்கிக் கொண்டார்கள். அந்த குதிரையின் பெயர் மன்தூப். எதிரிகள் நெருங்கி விட்டதாக வதந்தி. வேகமாக சென்று செய்தியை உறுதி செய்தாக வேண்டிய கட்டாயம். எனவே நபியவர்கள் அந்த குதிரையின் மீது உடனடியாக ஏறினார்கள். திறமையான பயிற்சியுடையவர்கள் அன்றி வேறு யாரும் போர்க்குதிரைகளை எளிதாக செலுத்திவிட முடியாது. அதுவும் தங்களுடைய சொந்த குதிரைகளின்மீது தான் பொதுவாக போர் வீரர்கள் ஏறி பயணிப் பார்கள்.

ஏனெனில் குதிரைகள் அந்தந்த குதிரை களின் உரிமையாளர்களுக்கு தான் கட்டுப்படும். இது பொதுவான நியதி. ஆனால் நபி (ஸல்) அவர்கள் அபூதல்ஹாவிடம் அவருடைய குதிரையைப் பெற்று அதன்மீது ஏறி அமர்ந்து


vaigarai velicham official

விட்டார்கள். ஆனால் அந்த குதிரைக்கு கடிவாளமோ சேணமோ போடப்படவில்லை.

ஆனாலும் நபி (ஸல்) அவர்கள் அதைப் பற்றி எல்லாம் கவலைப்பட்டதாக தெரியவில்லை. தன்னுடைய தோழர்களுக்கு எந்த பாதிப்பும் வந்து விடக்கூடாது என்பதிலேயே அவர்களுடைய முழு கவனமும் இருந்தது. பொதுவாக கடிவாளம் போடப்பட்ட குதிரையை செலுத்துவதே சிரமம். ஆனால் தற்போது நபியவர்கள் வெற்றுடலான அந்த குதிரையின் மீது ஏறி அமர்ந்து அந்த போர் குதிரையை செலுத்தி சென்று பார்த்துவிட்டு அந்த செய்தி பொய் என்பதை கண்டறிந்து திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அப்போதுதான் மதினா வாசிகளில் சிலர் உண்மை நிலை அறிய அந்த திசையை நோக்கி நடக்க ஆரம்பித்து கொண்டு இருந்தனர். ஆனால் அதற்குள்ளாக நபி (ஸல்) அவர்கள் சென்று பார்த்துவிட்டு திரும்பி வந்து "பீதி அடையாதீர்கள். அச்சமூட்டும் எதனையும் நாம் காணவில்லை" என்று கூறி அந்த மக்களை ஆசுவாசப்படுத்தினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம் 4620,4621 அத்தியாயம் 43 நபிமார்களின் சிறப்புகள் ஸஹீஹ் புகாரி 2627 அத்தியாயம் 51 அன்பளிப்பும் அதன் சிறப்பும்)

இந்த செய்தி நமக்கு பல உண்மைகளை எடுத்து காட்டுகிறது. இருந்தது ஒரே நபி. நபி (ஸல்) அவர்கள் நினைத்திருந்தால் தங்கள் தோழர்களில் ஒருவரை அனுப்பி நிலவரம் என்ன என்பதை பார்த்து வர அனுப்பி இருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாமல் தன்னுடைய உயிரை பணயம் வைத்து கடினமான அந்த போர் குதிரையில் சவாரி செய்து உண்மையை கண்டறிந்து வந்து மக்களுக்கு சொன்னார்கள் என்றால் இதுதான் இஸ்லாமிய தலைமைத்துவ பண்பு.

இதையேத் தான் ஹமாஸ் இயக்க தலைவர்களும் பின்பற்றுகிறார்கள். யஹ்யா சின்வார் அவர்களும் இதையேத் தான் பின்பற்றி இருக்கிறார். ஹமாஸ் இயக்கத்தவருக்கு இது முதல் மரணம் அல்ல. அவர்களுடைய தலைவர்களை குறிவைத்து கொல்வது இஸ்ரேலுக்கு வழமையான ஒன்று. ஆனாலும் அவர்கள் துவள்வதில்லை. அவர்கள் போர்களத்தில் முன்நிற்கிறார்கள். புதிய புதிய தலைவர்கள் வந்து கொண்டே இருக்கிறார்கள். நாளுக்கு நாள் அந்த இயக்கம் வலுவடைந்துக் கொண்டே இருக்கிறது. அதனால் தான் இஸ்ரேலிய பத்திரிகைகள் ஹமாஸ் என்பது ஒரு சித்தாந்தம். தனி நபர்களை கொல்வதின் மூலம் அந்த சித்தாந்தத்தை ஒழிக்க இயலாது என்று வெளிப்படையாகவே எழுதுகின்றனர்.

சின்வார் அவர்களின் நேர்காணலும் இதையே தான் சொல்கிறது. "நான் இதோ

## யஹ்யா சின்வர் அவர்களைப் பற்றி இஸ்ரேலியப் பத்திரிகைகள்?

யஹ்யா சின்வர் களத்தில் சமருக்கு நின்றே சாய்ந்தார். அவர் தன்னுடைய சக தோழர்களுடன் ஒரு சிப்பாயைப்போல் சண்டையிட்டார். அவருடைய வீர மரணம் உலகின் வரலாற்றைப் புரட்டிப் போட்டிடும்.

**இஸ்ரேலிய எழுத்தாளர் அலோன் மிஸ்ராகி - Alon Mzrahi இஸ்ரேலிய பத்திரிகையில் எழுதியது**

"ஓர் அகதி, இஸ்ரேலிய சிறையில் 22 ஆண்டுகள் சித்திரவதைகளை அனுபவித்தவர். அக்டோபர்-7 2023-ஐ அழகிய முறையில் திட்டமிட்டவர். அது உலக வரலாற்றை திருப்பிப் போட்டுக் கொண்டிருக்கின்றது. அது இப்போதுதான் தொடங்கப்பட்டுள்ளது."

**அல் அஸ்ஹர் பல்கலைக் கழகம், எகிப்து**

"அல்லாஹ்வின் பாதையில், பாலஸ்தீன போராளிகளின் தலைவர் தன்னை தந்திருக்கின்றார். அவர்களைக் கண்டு எதிரிகள் பீதியடைந்தார்கள். அவருடைய அச்சத்தாலேயே நாளையும் பொழுதையும் கழித்தார்கள், துடித்தார்கள். எதிரிகளின் இதயங்களில் திகிலைப் பாய்ச்சினார்கள். அல்அஸ்கர் அவருடைய மரணத்திற்கு இரங்கலைத் தெரிவிக்கின்றது.

**இஸ்ரேலின் பூர்வீகப் பத்திரிகை "ஹரஸ்"**

"வீரமகன், யஹ்யா சின்வர் பிணைக் கைதிகளுடன் ஒளிந்திருக்கவில்லை. தன் தோழர்களுடன் பூமிக்குமேலே எதிரிகளுக்கு எதிராக போர் செய்து கொண்டிருந்தார்." ■



பேசிக்கொண்டிருக்கிறேன். இதன்பிறகு அலுவலகத்திற்கு சென்று என் வேலைகளை பார்க்கப்போகிறேன். என்னுடைய புதிய வீட்டிற்கு செல்லப்போகிறேன். வேண்டு மானால் அவர்கள் என்னை கொலை செய்து கொள்ளட்டும். நான் அவர்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறேன். என்னை கொலை செய்து எதிரிகள் அதனை வெற்றியாக கொண்டாடக் கூடும் என என்னுடைய சகோதரர்கள் என்னிடம் கூறுகிறார்கள். இந்தப்போர் இத்துடன் முடிவடைந்து விட்டது. நாங்கள் சின்வாரை கொன்றுவிட்டோம் என்று அவர்கள் கூறக் கூடும். அவர்களுக்கு இந்த வெற்றி புகைப்படம் தேவை. நான் தயார். இது அதற்கான சரியான தருணம்தான். இப்போது இந்த நேர்காணல் பத்து நிமிடங்களாக நடந்து கொண்டிருக்கிறது.

எதிரிகளும் இதனை பார்த்துக் கொண்டிருக் கிறார்கள். நான் இன்னும் பத்து நிமிடங்களை தருகிறேன். நான் என் கண்களை மூடவில்லை. வேண்டியதை செய்து கொள்ளுங்கள். எங்களு டைய சிறுவயதில் ஷேக் அஹமது யாசீன் அவர்கள் சொல்லிக்கொடுத்த பாடங்களை நான் மனனம் செய்து வைத்திருக்கிறேன். இமாம் அலி (ரலி) அவர்கள் சொல்லிக்கொடுத் பாடங்களையும் நான் மனனம் செய்து வைத் திருக்கிறேன். எந்த நாளை விட்டு நான் விரண்டு ஓட வேண்டும். ஒன்று எனக்காக விதிக்கப்படாத நாள். மற்றொன்று எனக்காக விதிக்கப்பட்ட நாள். எனக்காக விதிக்கப்படாத நாளை கண்டு நான் அஞ்ச வேண்டியதில்லை.

ஏனெனில் எனக்காக விதிக்கப்படாத நாளில் இந்த உலகில் உள்ள யாரும் என்னை கொல்ல இயலாது. எனக்காக விதிக்கப்பட்ட நாளில் இந்த உலகின் அடியில் ஆயிரம் மைலுக்கு கீழே இருந்தாலும் என்னையாரும் காப்பாற்ற இயலாது.

உறுதியான கோட்டையில் இருந்தாலும் யாராலும் என்னை காப்பாற்ற இயலாது. எனக்கு தெரியும் என்னுடைய உயிர் என்னை படைத் தவன் கைகளில் உள்ளது. எனவே, அவர்களு டைய மிரட்டல்கள், அவர்களுடைய விமா னங்கள் என்னுடைய வாழ்நாளில் ஒரு நாளைக் கூட குறைத்து விடாது. எனவே, என்னுடைய சகோதரர்கள் மேற்கொள்ளக்கூடிய இந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் என்னுடைய வாழ்நாளை ஒருநாள் கூட அதிகரிக்காது. நான் இதில் உறுதியாக இருக்கிறேன்.“

எனவே, இந்த தலைவர்களின் மரணங்கள் வீணாகப் போய்விடாது. இவர்களின் தியா கங்கள் ஹமாஸ் இயக்கத்தினரை உறுதிபடுத்தி யுள்ளதே தவிர பலவீனப்படுத்தவில்லை. அதே மனநிலையில் தான் மற்ற முஸ்லிம்களும் இருக்க வேண்டும். இந்த தலைவர்களின் உயிர் தியாகங்கள் முஸ்லிம்களை பலப்படுத்த வேண்டுமே தவிர பலவீனப்படுத்தக்கூடாது.

(நபியே!) நீர் கூறும்:

**“அல்லாஹ் நாடியதைத் தவிர எனக்கு எவ்விதத் தீமையோ, நன்மையோ, எனக்கே செய்துகொள்ள, நான் எவ்வித அதிகாரமும் பெற்றிருக் கவில்லை; ஒவ்வொரு சமூகத்தின ருக்கும் ஒரு (குறிப்பட்ட காலத்) தவணையுண்டு; அவர்களது தவணை வந்துவிட்டால் ஒரு நாழிகை பிந்தவும் மாட்டார்கள் முந்தவும் மாட்டார்கள்.” 10:49.**



யஹ்யா சின்வர் அவர்களின் கடைசி நிமிடம். ஒரு பதிவுக்காக!



# யஹ்யா சின்வர் ஷஹீத் அவர்களுக்குப் பின் ஹமாஸ்

## கேள்வி - கரன் தாப்பூர்,
## பதில் - ஈரான் பேராசிரியர் முஹம்மது மரண்டி

**யஹ்யா சின்வர் அவர்களைப் பற்றி உங்கள் கருத்துகள்?**

முதன் முதலில் ஒருவருடமாக முயற்சி செய்தும் இஸ்ரவேலர்களால், அதாவது யூதர்களின் - இஸ்ரவேலர்களின் உளவுத்துறையாலும், அமெரிக்கர்களின் உளவுத்துறையாலும் ஜெர்மனி, பிரான்ஸ் இவர்களின் உளவுத்துறையாலும் யஹ்யா சின்வர் அவர்களைக் கண்டு பிடிக்க இயலவில்லை.

ஆக, யஹ்யா சின்வர் அவர்களால் உளவுத் துறைகளை ஒரு வருடம் ஏமாற்றிட முடிந்தது. அக்டோபர்-7, 2023 தாக்குதலை அவர்தான் ஏற்பாடு செய்தார். அன்றும் அவர் இஸ்ரேலின் உளவுத்துறையை முற்றாக முறியடித்தார். அப்போதும் அமெரிக்க உளவுத்துறையும் இஸ்ரேலுக்காக வேவு பார்த்துக் கொண்டுதான் இருந்தது. அதுவும் வெற்றிகொள்ளப்பட்டது. அந்த நாளில்...

ஆக ஷஹீத் யஹ்யா சின்வரை கடைசிவரை அமெரிக்காவின் அதிபயங்கர உளவுத்துறையும் இஸ்ரேலின் உளவுத்துறையும் பெரிதாக வெற்றி கொண்டிட முடிந்தது.

இதில் அவருடைய வெற்றி என்னவென்றால் ஏறத்தாழ 20 ஆண்டுகளாக - உலகமகா உளவுத் துறைகளெல்லாம் தேடியும், அவரைக் கண்டு தாக்கிட இயலவில்லை.

கடந்த ஓராண்டு காலமாக அதாவது, அக்டோபர்-7,2023 முதல் அவரேதான் குறி என அலைகின்றது இஸ்ரேல் ஆனாலும் அவரைக் கண்டுபிடிக்க இயலவில்லை.

காரணம், அவர் ஹமாஸின் உலக அதிசயமான "Tunnels" என்ற சுரங்கத்திற்குள் ஒளிந்திருப்பதாக கதைகளைக் கட்டவிழ்த்துக் கொண்டிருந்து.

ஏன் ஓர் வீடியோவையே வெளியிட்டது. அதில் யஹ்யா சின்வர் சுரங்கப்பாதைக்குள் ஒளிந்திருக்கும் வீட்டைக் கண்டுபிடித்து விட்ட தாகவும், நிறைய பணம் மற்றும் ஆடம்பர பொருள்கள் அதிலிருப்பதாகவும் அந்த வீடியோ படம் போட்டுக் காட்டியது. அந்த இடம் சுரங்கத்திற்குள் இருக்கும் சொர்க்கம் எனச் சித்தரித்தது.

அந்த சுரங்கப்பாதைக்குள் யஹ்யா சின்வர் தன் மனைவி மக்களோடு நுழைகின்ற ஒரு வீடியோவையும் வெளியிட்டது.

இப்படி பல வீடியோக்கள். இந்த வீடியோக்கள் வழி நித்தமும் பல அப்பாவிகளை காஸாவில் இஸ்ரேலின் விமானங்களுக்கு பலியாக்கிவிட்டு, அவர் சொகுசாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார் எனக் காட்டிட முயற்சி செய்தது.

இந்த வீடியோக்களைப் பார்க்கின்ற காஸா மக்களும், உலக அரங்கில் பாலஸ்தீனுக்காகப் போராடும் மக்களும் ஒன்றுபோல் ஷஹீத் யஹ்யா சின்வரையும், அவர் தலைமை தாங்கிய ஹமாஸ், இறைவழி போராளிகளையும் சுகவாசிகள் என நினைப்பார்கள். அதனால் அந்த மக்கள் ஹமாஸ் போராளிகளை வெறுக்க




வேண்டும், எதிர்க்க வேண்டும் என்பது சதி!

அடுத்து இன்னொரு பொய்யை விலைதந்து உலக ஊடகங்கள் வழி இஸ்ரேல் பரப்பியது, அது ஷஹீத் யஹ்யா சின்வர் அவர்கள் Hostages என்ற அழைத்துச் செல்லப்பட்ட இஸ்ரேலியர் களுடன் விரவி வாழுகின்றார். இதனால் இஸ்ரேல் அவரைக் கண்டுபிடித்தாலும் இஸ்ரேல் தாக்கிடாது. காரணம் இஸ்ரேல் அதன் மக்களை கொலை செய்ய வேண்டியது வரும் என்பதே!

தொடக்க காலத்தில் வெளிநாடுகளில் ஐந்து நட்சத்திர விடுதிகளில் உல்லாச உலா வருகின் றார் என்ற செய்தியையும் பரப்பியது.

ஆனால் இஸ்ரேலின் பொய்ப்பிரச்சாரங் களைப் பாடிய உலக ஊடகங்கள் அனைத் திற்கும் செருப்படியைத் தந்து போர்க்களத்தில் வீர மரணத்தைச் சந்தித்தார்.

எப்படி எல்லா உளவுத்துறைகளையும் அக்டோபர்-7 2023 அன்று முட்டாள்களாக ஆக்கினாரோ அதேபோல்தான், மரணத்திலும் இஸ்ரேலின் பொய்களுக்கு மரண அடியைத் தந்துவிட்டு ஷஹீதானார்.

அவருடைய மரணத்தைப் பற்றி இஸ்ரேலிய இராணுவ நோக்கர் ஒருவர் இப்படிக் கூறினார். தினமும் தனது சக போராளிகளுடன் பூமிக்கு மேலே எதிரிகளோடு களமாடிய ஒருவரை பூமிக்குக் கீழே தேடிய பேடிகள்தாம் “நத்யான்ஹூவும், அவருடைய உளவுத்துறை யினரும்”.

இந்தியாவின் கரன் தாப்பூர் யஹ்யா சின்வர் அவர்களின் கடைசிநேர வீரத்தைப் பற்றி இப்படிக் குறிப்பிட்டார்.

"Died a Martyr ; Hero, but not as a coward" அவர் வீர மகனாகவே மரணித்தார். ஒரு பெரும் நாயகனாக மடிந்தார். கோழையாக மரணிக்க வில்லை.

இந்தக் கரன் தாப்பூர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் சொன்ன ஈரான் பேராசிரியர் முஹம்மத் மரண்டி இப்படிப் பதில் சொன்னார். “அவருடைய வாழ்கைதான் இஸ்ரேலில் வாழுகின்ற ஒவ்வொரு முஸ்லிமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.”

அதாவது, அகதிகள் முகாம்களில் அகதிகள் பெற்றோருக்குப் பிறப்பது.

பூர்வ வீடுகளையும் தோட்டந் துறவுகளையும் துறந்து, சொந்த நாட்டிலேயே அலைக்கழிவது, பின்னர் அநாதையாக வாழ்வது, சண்டையிடா மல் கோழைகளாக மடிந்தவர்கோடி. தன்னால் இயன்றவரை கிடைத்தவற்றைக் கொண்டு போரிட்டு வீரமரணத்தை தழுவியர்கள் பலகோடி. இவர்களில் ஒருவர்தான் யஹ்யா சின்வரும்.

இந்த சராசரி பாலஸ்தீனர்களின் வாழ்க்கை யைத்தான் அவர் வாழ்ந்து கொண்டிருந்தார்.

இதுஒரு வரலாறு அல்ல. 1914 முதல் 114 ஆண்டுகளாக, நடந்து கொண்டிருப்பதன் தொடர்ச்சி.

பலமுறை எதிர்த்துப் போர் புரிந்து ஆயிரக் கணக்கான வீரர்கள் மடிந்துவிட்டார்கள். ஒரு கட்டம் வரைக்கும் பிரிட்டன் என்ற ஆங்கில நாடும், அதன்பின் ஆங்கில நாட்டுடன் அமெரிக் காவும் பின்னர் பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி நாடுகளும், இப்போது மொத்த ஐரோப்பிய நாடுகளும், இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு, இனப்படு கொலை, குழந்தை கொலை, பெண்கள் கொலை அனைத்தையும் நடத்துகின்றன. கோடிக்கணக் கில் பணம், ஆயுதம், ஆட்கள் என இஸ்ரேலுக்கு அள்ளிக் கொட்டுகின்றன இந்த நாடுகள்.

இந்த லட்சணத்தில் கவைக்குதவாத ஐக்கிய நாடுகள் சபை. அதில் ஐந்து நிரந்தர உறுப்பினர்கள். அதில் மூன்று நாடுகள் பிரிட்டன், அதாவது ஆங்கில நாடு. அமெரிக்கா, பிரான்ஸ் இவை இந்த இனப்படுகொலை - கொடூரக் கொலை இவற்றிற்கு நிரந்தரமாக பணம், ஆயுதம் ஆள் அனைத்தையும் தருபவை. இதை 100 வருடங் களாகச் செய்து கொண்டிருக்கின்றன.

இவைதான் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை. நிரந்தர உறுப்பினர்கள். வீட்டோ என்ற தடை செய்யும் அதிகாரத்துடன்.

இன்று ஒன்றுமில்லாமலாக்கிவிட்டார்கள். ஐக்கிய நாடு சபையை!

கரன் தாப்பூர் கேட்ட இன்னொரு கேள்வி?

**யஹ்யா சின்வர் மடிந்துவிட்டதால் ஹமாஸ்-இன் வேகம் குறையுமா?**

பதில் - இல்லை.

ஹமாஸ் போன்ற இயக்கங்கள் ஒரு மனிதரை நம்பி இருப்பதில்லை. அதில் இருப்பது Collective Leadership அதாவது அங்கே இருப்பது ஒரு கூட்டுத்தலைமை. ஆகவே அங்கே ஒரு தனி போராளி இறந்துவிட்டார் என்பதால் எதுவும் நின்றுவிடாது. அவர்கள் ஒருவருக்குப் பின் ஒருவர் என ஏற்கெனவே, தலைமையை அணிவகுத்து வைத்திருப்பார்கள் என்றார்.

தனிமனிதர்களைக் குறிவைத்துக் கொலை செய்வது என்பது இஸ்ரேல் 1914-1917 முதல் இன்றளவும் நிறைவேற்றிவரும் ஒரு செயல். அதில் இஸ்ரேல் பெற்றுவரும் தோல்விகளி லிருந்து அதுபாடம் படித்ததாகத் தெரிய வில்லை என்றார் மத்திய கிழக்கு மற்றும் இஸ்ரேல் பற்றிய அய்வுகளில் தேர்ச்சிப் பெற்ற பேராசிரியர் முஹம்மத் மரண்டி.



கரன் தாப்பூரின் இன்னொரு கேள்வி?

**யஹ்யா சின்வர் இவ்வளவு தெளிவாக இஸ்ரேலுக்கு எதிராகத் திட்டங்களைத் தீட்டியிருக்கின்றார். அவருடைய கூர்மையான திட்டங்களின் பின்னனி என்ன?**

பதில் - அவர் 22 ஆண்டுகளாக இஸ்ரேலின் சிறைகளில் இருந்திருக்கின்றார். அதில் ஜியோ னிஸ்டுகளின் ஒவ்வொரு நகர்வையும் கூர்ந்து கவனித்து வந்திருக்கின்றார். சிறுவயது முதலே ஜியோனிஸ்ட்டுகள் என்ற யூதத் தீவிரவாதி களின் கொடுமைகளை நேரில் கண்டிருக் கின்றார். அகதிகளாய்தங்கள்பூர்வீகபூமியிலேயே அலைந்திருக்கின்றார். எதிர்த்து போராடி இருக் கின்றார். அதனால் ஜியோனிஸ்ட்டுகளின் முந்தையத் திட்டங்கள் - இன்றைய திட்டங்கள், நாளைய நகர்வுகள், அனைத்தையும் அறிந்திருக் கின்றார். அறிந்திட முடிந்திருக்கின்றது. ஆகவே அவர் போட்டத் திட்டங்கள் ஜியோனிஸ்ட் டுகளை மிகவும் எளிதாக முட்டாள்களாக ஆக்கியிருக்கின்றன. பல தீர்க்கமான வெற்றி களையும் தந்திருக்கின்றன.

2018இல் அவர் யூதர்களைக் கைது செய்து

வைத்திருந்தார். தொடர்ந்து நடந்த சண்டையில் நத்யான்ஹூ தோல்வியை ஒத்துக்கொண்டு சமாதானம் செய்திட வைத்தார். அதில், ஜியோனிஸ்ட்டுகள் பிடித்து வைத்திருந்த பல பாலஸ்தீன போராளிகளை விடுவிக்க முடிந்தது. இப்படி பல தீர்க்கமான வெற்றிகளையும் குவித்திருக்கின்றார்.

இன்னொரு கேள்வி

**போர் மட்டுந்தான் இதற்குத் தீர்வா?**

போர் அல்லாத எல்லா வழிகளையும் "ஹமாஸ்" முயற்சி செய்து பார்த்துவிட்டது, 78 ஆண்டுகளாக. ஆனால், பேச்சு வார்த்தைகள், ஜனநாயக வழிமுறைகள், இவை எதுவும் உதவி செய்யவில்லை. மாறாக இஸ்ரேல், பாலஸ்தீன பூர்வீக குடிகளை முற்றாகத் துடைத் தெரியும் திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டே இருந்தது. 2023 அக்டோபர்-7 தாக்குதலுக்கு முன்வரை அதாவது 9 மாதங்களில் 23,000 பாலஸ்தீனர்கள் - முஸ்லிம்கள் ஜியோனிஸ்ட் வந்தேறிகளால் கொலை செய்யப்பட்டிருந் தார்கள். ஆயிரக்கணக்கானோர் சிறைபிடிக்கப் பட்டிருந்தார்கள்.

இதைத்தான், ஐக்கிய நாடுகளின் சபையின் பொதுச் செயலாளர், அட்டோனியோகுட்ரஸ் அவர்கள் Suffacting Occupation மூச்சுத் திணறும், ஆக்கிரமிப்பு என்றார். என்பதைக் கவனிக்க வேண்டும்.

**யஹ்யா சின்வரின் மரணத்தால் ஹமாஸ் போராளிகள் உற்சாகம் குன்றும், இது இஸ்ரேலுக்கு பெரும் வெற்றியாகும் என்ற எண்ணங்கள் மிகைத்து நிற்கின்றனவே, அதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

இரண்டுமே உண்மையல்ல. ஹமாஸ் நன்றாக ஒருங்கிணைக்கப்பட்ட ஓர் இயக்கம். அவர்களின் இயக்கக் கட்டமைப்பு தனி மனிதர் களால் ஆனாது. ஆனால், எந்த தனிமனிதரையும் முற்றாகச் சார்ந்ததன்று. அதனால் ஒரு தனி மனிதன் மரணித்தவுடன் முற்றாக வீழ்ந்து விடாது. இந்த கட்டமைப்பு விவகாரம் ஹமாஸ் தொடங்கப்பட்ட நாளிலிருந்து இன்றளவும் நீடித்து வருகின்றது. காலம் வைத்த சோதனைகள் அனைத்திலும் அது வென்றே வந்திருக்கின்றது. ஒவ்வொரு தலைவரும் குறிவைத்துக் கொலை செய்யப்படும்போதும், அது புத்துயிர் பெற்று புது உத்வேகத்துடன் இன்னும் அதிக சக்தியுடன் களம் கண்டிருக்கின்றது. அந்த வீரமகன்களின் பட்டியல், இஸ்ஸத்தின் அல்ஹாஸம் அவர்களி லிருந்து தொடக்கம்.

**இஸ்ஸத்தின் அல்ஹாசம்**

அபூ ஜிஹாத், அபூ அலீ முஸ்தபா ஷேஹ் அஹ்மத் யாசீன், அப்துல் அஜிஸ் ரென்திசி, சாலிஹ் அல் அரோரி, இஸ்மாயீல் ஹனையா (இன்னும் 1000 பேர் என இப்படி ஷஹீதுகளை சந்திருக்கின்றார்கள்.) இடம் பெறுகின்றார்கள்.

இந்த மரணங்களால் சோர்ந்துவிடவில்லை. மாறாக, பலத்தை பெருக்கிக் கொண்டு தீர்க்கமுடன் போராடுகின்றார்கள்.

**இனிமேலாவது ஹமாஸ் - இயக்கத்திற்கு ஒரு மிதவாதி தலைவராக வருவாரா?**

இப்படி கேள்வியைக் கேட்கும்போது இன்ற ளவும் வீர மரணத்தைத் தழுவியவர்களெல்லாம் தீவிரவாதிகள் என பொருள் கொள்ளவேண்டுமா? என்று கேட்டார் முஹம்மது மரண்டி.

படுகொலை குரூர கொலைகள், ஆக்கிர மிப்புகள், பறிபோன நிலங்கள் இவற்றை மீட்கப் போராடுபவர்கள். அவர்களின் பூர்வீக நிலங்களைப் பிடுங்கிக் கொண்டு அவற்றைத் தங்களதாக்கிக் கொண்டவர்களுக்கு எதிராக போர் செய்பவர்கள்.

இதிலும், அதேபோல் இஸ்லாத்திலும், மிதவாதம் - தீவிரவாதம் என்றெல்லாம் இல்லை. எல்லோருமே அநியாயத்திற்கு எதிரானவர்கள். இந்தப் பூமியில், அநியாயங்களும், ஆக்கிரமிப்பு களும் இருக்கும் வரை இந்த போர்களும் குழுக்களுமிருக்கவேச் செய்யும்.

யஹ்யா சின்வர் வாழ்க்கை ஏனைய காஸாப் பகுதி மக்களின் வாழ்க்கையாகவே இருந்தது.

இப்போது போர்க்களத்தில் நிற்பவர்கள் இதற்கு முன் குரூரமான தாக்குதல்களால் அநாதையாக்கப்பட்டவர்கள் என்பதை எல்லோரும் அறிந்திட வேண்டும். உணர்ந்திட வேண்டும்.

**ஆக்கம் - கரன்தாப்பூர்**
**பேராசிரியர் முஹம்மத் மரண்டி**
**தமிழில் வடிவம் : MGM**



vaigarai velicham official




# மக்களுக்கு பயங்கரவாத சட்டமும் பொருளாதார மீறல்களுக்கு மயிலிறகு சட்டங்களும்

**2023ஆம்** ஆண்டில் இந்திய ஒன்றிய அரசால் கொண்டுவரப்பெற்ற முப்பெரும் சட்டங்கள் குறித்த விவாதங்கள் நாடெங்கிலும் நடக்கின்றன. பிஎன்எஸ், பிஎன்எஸ்எஸ் ஆகிய இருசட்டங்களான குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் தண்டனை சட்டம் ஆகிய வற்றில் மாறுதல்கள் உள்ளன. ஆனால் சான்றியல் சட்டமான பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏதுவுமே இல்லை. சாட்சிய சட்டத்தில் ஒப்பனை அளவிலான மாற்றங்கள் கூட இல்லை.

புதிய சட்டங்கள் பிஎன்எஸ், பிஎன்எஸ்எஸ் சட்டங்களில் நீக்கப்பட்ட பிரிவுகள், சேர்க்கப் பட்ட பிரிவுகள், திருத்தப்பட்ட பிரிவுகள் என மூன்றாக வகைப்படுத்த முடியும்.

காலனிய நீக்கம் செய்ய போவதாக கூறிய சட்டப் பிரிவுகளில் முதன்மையானது 124(A) ராஜதுரோகம் என்ற இக்குற்றம் தண்டனை பிரிவிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே குற்றம் முன்பை விட கடுமையாக மாற்றப்பட்டு 113வது பிஎன்எஸ் சட்டப்பிரிவில் பயங்கரவாத செயல் என்ற பெயரில் இடம்பெற்றுள்ளது.

இந்திய பொருளாதார பாதுகாப்புக்கு எதிராகவோ, ஒற்றுமைக்கு ஏதிராகவோ, இறையாண்மைக்கு எதிராகவோ, ஆயுதங் களையோ, குண்டுகளையோ, தீப்பற்றக் கூடிய பொருள்களையோ, பயன்படுத்தி யாருக்கேனும் மரணத்தையோ, சொத்துக்களுக்கு சேதத்தையோ, சேவைகளுக்கு இடையூறோ, சரக்குகள் எடுத்து செல்வதை தடுத்தோ, இந்தியாவின் பொருளாதார அடிப்படைத் தன்மைக்கு ஊறு விளைவிக்கவோ, போலி பணம் அச்சடித்தோ, பயங்கரவாத குற்றத்திற்கு உடந்தையாகவோ இக்குற்றத்தை செய்ய முயற்சி செய்வதோ, அக்குற்றத்திற்கு ஆதரவாகவோ, அக்குற்றத்திற்காக, ஆட்களை திரட்டுவதோ, பயங்கரவாத குற்றமாக கருதப்படுகிறது.

மாவட்ட கண்காணிப்பாளர் பதவிக்கு குறையாத அதிகாரிகள் ஒருவர் இந்த சட்ட பிரிவின் வழக்குளை பதிவு செய்வதா? அல்லது யூஏபிஏ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்வதா? என்பதை முடிவு செய்யும் அதிகாரம் படைத் தவரென இச்சட்டம் கூறுகிறது. இப்பிரிவை உற்றுநோக்கும்போது முன்பைவிட பயங்கர மானதாக பழைய 124யு இந்த சட்டம் மாற்றப்பட்டுள்ளதை உணரமுடியும்.

பாரதிய நாகரிக் சுக்ஷா சன்ஹிதா 2023 என்ற சட்டத்தை இந்திய மக்கள் காப்புக் கோவை என்றும் பாரதிய நியாய சன்ஹிதா 2023 என்றச் சட்டத்தை இந்திய நியாய சட்டம் 2023 எனவும், பாரதிய சாக்ஷிய அதிநியம், 2023 என்ற சட்டத்தை இந்திய சான்றியல் சட்டம்

2023 எனவும் நாம் பொருள் கொள்ள முடியும். இவற்றில் பிஎன்எஸ் என்ற சொல்ல கூடிய நியாய சட்டம் இந்திய தண்டனை சட்டத்தின் இடத்தில் அமர்ந்துள்ளது.

இச்சட்டத்தில் சில ஆங்கிலேய கால குற்றங்கள் நீக்கப்பட்டுள்ளன. குறிப்பாக காளி தெய்வ வழிபாட்டு குழுவால் நிகழ்த்தப்படும் கூட்டு படுகொலைகள் செய்பவர்களை 'தக்' (Thug) என்ற பெயரில் அழைப்பர். 20ஆம் நூற்றாண்டின் தொடக்க கால முதல் வட இந்தியாவில் மிக அதிகமாக நிகழ்ந்த இந்த படுகொலையில் காளி வழிபாடு செய்யும் கொலைகார 'தக்' கூட்டத்தினர் வணிக குழுவையோ அல்லது புனித பயணம் செய்பவர் களையோ அல்லது திருமண குழுவினரையோ பின் தொடர்ந்து செல்வர். இந்து மத வழிபாட்டாளர்கள் போல இசை குழுவுடன் செல்லும் இக்கூட்டத்தினர் தாங்கள் தேர்ந் தெடுத்த குழுவினருடன் பயணித்து அவர்களின் நம்பிக்கையை பெற்று தங்கள் தலைவன் கட்டளைப்படி சொன்னதும் ஒரே நேரத்தில் எல்லா பயணிகளையும் தாங்கள் வைத்திருக்கும் நாணயத்தை பொதிந்து முடிச்சிட்ட நீளக் கைக்குட்டைகளை கொண்டு கொலை செய்து தடையமில்லாமல் உடல்களை அழித்து விட்டு அவ்விடத்தை விட்டு அகல்பவர்களுக்கு தக் என்ற பெயருண்டு.

'தக்' கூட்டத்தில் இருப்பதே ஆயுள் தண்டனைக்கு உள்ளாக்கப்படும் குற்றமாக கருதப்பட்டது. இந்திய தண்டனை சட்டம் 311ஆவது பிரிவு தக் கூட்டத்தில் உறுப்பினராக இருப்பதை ஆயுள் தண்டனை உரிய குற்றமாக்குகிறது. புதிய பிஎன்எஸ் சட்டத்தில் பிரிவு 310,311 என தக் குறித்த பழைய இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் நீக்கப்பட்டுள்ளன.

பழைய இந்திய தண்டனை சட்டத்தில் 2013ம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்களான 354(4) என்ற பாலின துன்புறுத் துதல், 354(B) என்ற பெண்கள் ஆடைகளைக் களையச் செய்யும் குற்றம், 354(C) என்ற பெண்களை காட்சிப் பொருளாக்கும் வாயுரிசம் என்ற குற்றம், 354(D) என்ற பெண்களை ரகசிய மாக பின் தொடருதல் ஆகியன எவ்வித மாற்றங்களுமின்றி புதிய பிஎன்எஸ் சட்டத்தில் பிரிவு 77 முதல் பிரிவு 78 வரை ஏற்கப்பட் டுள்ளன. அதேபோன்று சட்டப்படி பிரிந்து வாழும் மனைவியை வன்புணர்ச்சி செய்வது இரு வருடங்களிலிருந்து ஏழு வருடம் வரை தண்டனைக்குரிய சட்டம் என்ற பழைய பிரிவானது பிரிவு57 என்று பிஎன்எஸ் சட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறாக ஏராளமான சட்டங்கள் புதிய பிஎன்எஸ் சட்டத்தில் மறுசுழற்சி செய்யப்பட் டுள்ளன. சட்ட வல்லுனர்களுக்கும் வழக்கறி ஞர்களுக்கும் பரிச்சயமான பழைய இ.த.ச. பிரிவுகள் 299 மற்றும் 300 ஆகியன கொலைக்கும், கொலையல்லாத மரணம் விளைக்கும் குற்றத்திற்கும் உள்ள மெல்லிய வேறுபாட்டை விளக்கும்.

சட்ட பேராசிரியருக்கும் இள வழக்கறி ஞருக்கும் ஏராளமான சந்தேகங்களை ஏற்படுத்தும் மேற்சொன்னப் பிரிவுகளின் விளக்கங்களை பல ஆண்டுகள் பயிற்சிக்குப் பின்னரே கண்டுகொள்ள முடியும். புதிய பிஎன்எஸ் சட்டத்தில் அப்பிரிவுகள் எவ்வித மாற்றமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஒரு புள்ளியையோ காற் புள்ளியையோ கூட மாற்றாமல் அப்பிரிவுகள் 100 மற்றும் 101 என புதிய சட்டங்களில் இடம் பெற்றுள்ளன.

இச்சட்டம் குறித்து உரையாடிய மூத்த வழக்கறிஞர்கள் கபில் சிபில் மற்றும் சிதம்பரம் ஆகியோர் இப்புதிய சட்டம் காலனியச் சட்டத்தை மாற்றப் போவதாக கூறியதற்குப் பதிலாக காலனிய சட்டங்களுக்கு கௌரவம் செய்துள்ளது என்று கூறுவது மிகையல்ல. புதிய பிஎன்எஸ் சட்டத்தில் 103ஆவது பிரிவில் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் குழுவாக இயங்கி இனம், சாதி, பால், பிறந்த ஊர், மொழி, தனிப்பட்ட நம்பிக்கைகள் ஆகியன காரணமாக கொலை நிகழ்ந்தால் அக்கூட்டத்தில் அல்லது குழுவில் பங்கு பெற்ற அனைவருக்கும் மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்க இயலும் என அப்பிரிவு கூறுகிறது. மாட்டுக்கறி கொலைகள், மதவெறி கொலைகள், சாதிய கொலைகள், இன கொலைகள் ஆகியன இப் பிரிவில் அடங்கும். பட்டியல் சமூகத்தினரை கொலை செய்தல் இப்பிரிவில் மட்டுமின்றி வன்கொடுமை சட்டத்தின் கீழும் குற்றமாக கருத முடியும். ஏனென்றால் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தில் அக்குற்றத்திற்கு இழப்பீடுகள் மற்றும் குற்ற அனுமானங்கள் ஆகியன விரிவாக சொல்லப்பட்டுள்ளது. மேற்சொன்ன பிரிவில்


vaigarai velicham official

சொல்லப்பட்ட Common Concert என்ற ஆங்கிலச் சொற்கள் எதிர்காலத்தில் அணுவைப் பிளக்கும் விளக்கங்கள் கொண்ட ஏராளமான தீர்ப்புகளில் இடம்பெறப் போகின்றன.

கவன குறைவாக மரணத்தை ஏற்படுத்துவது முந்தைய இந்திய சட்டத்தில் 2வருட தண்டனைக்குரிய குற்றமாக சொல்லப்பட்டு இருந்தது. புதிய பிஎன்எஸ் சட்டத்தில் 106ம் பிரிவில் இடம் பெறும் இக்குற்றம் ஐந்து வருடம் வரை தண்டனைக்குரிய குற்றமாகும்.

கவனக்குறைவு மரணத்தை ஏற்படுத்தியது மருத்துவராக இருந்தால் இரு வருடம் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படுகிறது.

கவனக்குறைவு மரணம் வாகனம் ஓட்டிச் செல்லும்போது நடந்தால் உடனடியாக நடுவருக்கோ, காவல்துறை அதிகாரிக்கோ தெரிவிக்காமல் தப்பிச்சென்றால் அக்குற்றத் திற்கு 10 வருட தண்டனை வழங்க முடியும் என்று 106 பிரிவு பிஎன்எஸ் சட்டம் கூறுகிறது.

நடுவர் என்ற சொல்லே 105 ஆவது பிரிவில் பயன்படுத்தப்பட்டு இருப்பதால் குற்றவியல் நடுவர் மட்டுமின்றி நிர்வாக நடுவர்களிடமும் விபத்து குறித்து தெரிவிக்க முடியுமென பொருள் கொள்ள முடியும்.

பிஎன்எஸ் சட்டத்தில் புதிய பிரிவாக பயங்கரவாதச் செயல் சேர்க்கப்பட்டுள்ளது. அக்குற்றம் அரசுக்கு எதிரான குற்றங்கள் வகைப்பாடு செய்யப்பட்ட ஏழாவது அத்தியா யத்தில் இடம் பெறுவதற்கு பதிலாக மனித உடலுக்கு எதிரான குற்றங்களில் அத்தியாயம் ஆறில் வகைப்பாடு செய்யபட்டு இருப்பது சட்டமுரணாகவே உள்ளது. ஒருவேளை அரசின் முன் அனுமதி பெற்று குற்றபத்திரிக்கை தாக்கல் செய்வதை தவிர்க்க அவ்வாறாக செய்யப் பட்டிருக்கலாம்.

பழைய சட்டங்களிலுள்ள 153(AA) எந்த வொரு ஊர்வலத்திலோ அல்லது கூட்டு பயிற்சி யிலோ பொது இடங்களில் ஆயுதங்களுடன் ஈடுபட்டால். 6 மாத தண்டனைக்குரிய குற்ற மாகும் என்ற சட்டப்பிரிவு நீக்கப்பட்டுள்ளது.

கள்ளநாணய ஏற்றுமதி குறித்த மூன்று பிரிவுகள் நீக்கப்பட்டுள்ளன.

போலி எடை மற்றும் எடைக் கருவிகள் குறித்த நான்கு பிரிவுகள் நீக்கப்பட்டன. 377 என்ற இயற்கைக்கு முரணான புணர்ச்சி குற்றம் நீக்கப்பட்டுள்ளது. அதுபோன்றே பயணத்தில் ஏற்படும் ஒப்பந்த முறிவு குற்றம் நீக்கப்பட் டுள்ளது. அப்பிரிவும் ஏற்கனவே பழைய சட்டத்தில் நீக்கப்பட்டுள்ளது.



மூத்த வழக்கறிஞர் லஜபதி ராய்

ஆனால் முக்கியமாக காலனிய கால தெய்வ நிந்தனை குற்றம் முந்திய பிரிவு 508இல் இடம் பெற்றிருந்தது, அதே பிரிவு புதிய சட்டத்திலும் 354ஆம் பிரிவில் அதே தெய்வ நிந்தனை குற்றம் அதே ஒரு வருட தண்டனைக்குரிய குற்றமாக உள்ளது. தர்ணா மற்றும் போராட்டங்களை சட்ட விரோதமாக்கும் அப்பிரிவு காலனிய சட்டத்தின் எச்சமே.

பொது இடங்களில் குடித்து விட்டு வரும் குற்றத்திற்கு 24மணி நேர சிறை தண்டனையும் 1000 ரூபாய் அபராதமும் விதிக்கப்படலாம். இதுதவிர அக்குடிகார நபருக்கு சமூக சேவை தண்டனையும் பிஎன்எஸ் 355 பிரிவின்கீழ் வழங்க முடியும். சமூக சேவை போன்ற கூலி அல்லாத வேலைகளை செய்ய நிர்பந்தம் செய்வது அரசியலமைப்பு சட்டத்திற்கு முற்பட்ட காலத்தில் விளிம்பு நிலை மக்களின் மீது திணிக்கப்பட்டது இந்தியா முழுவதும் அரசர்கள் ஆட்சியில் அவ்வாறான நிலையே இருந்தது. 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் 1855ஆம் ஆண்டில் தெற்கு திருவிதாங்கூரில் ஊழியம் என்ற சம்பளமற்ற வேலை ஒழிக்கப் பட்டது.

ஊழியம், வெட்டி, விறுதி என்ற பெயர்களில் வழங்கப்பட்ட சம்பளமற்ற வேலை மறுபடியும் சட்ட வடிவில் வருவது காலனிக்கு முந்தைய அடிமைக்கால வடிவமே.

பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, ஆங்கிலேய ஆட்சியின் சில பிற்போக்கு சட்டங்களை விட மேலும் பிற்போக்கானதாக உருவாக்கப்பட்டு இருப்பது நம்மை ஆச்சிரியப் படுத்தும். உதாரணமாக கைவிலங்கிடும் உரிமை நீதிமன்றங்களிலிருந்து காவல்துறைக்கு கைமாறியுள்ளது. தனிமைச் சிறைக்கும் சட்ட அந்தஸ்து கிடைத்துள்ளது,

முந்திய இந்திய தண்டனைச் சட்டம், 1860 பாரதிய நியாய சன்ஹிதா (BNS) என்ற பெயரில் உருமாற்றம் பெற்றது. ஏறத்தாழ 95 விழுக்காடு சட்டங்கள் முந்தய வடிவத்திலேயே உள்ளன. புதிய மந்தையில் பழைய கள்ளு என்ற அடிப்படையிலேயே இச்சட்டமும் அமைந்துள்ளது.

சாமானிய மனிதர்களுக்காக இச்சட்டம் கொண்டு வரப்பட்டதாக கூறப்பட்டது.

இச்சட்டத்தின் பிரிவு 11 தனிமைச் சிறையே தண்டனையாக கூறுகிறது. ஏற்கனவே உச்சநீதி மன்றம் சுனில் பத்ரா எதிர் டில்லி நிர்வாகம் என்ற வழக்கில் தனிமை சிறைவாசியின் மனதை வருத்தி மனிதனை விலங்கின் நிலைக்கு கொண்டு செல்கிறது என கூறியது. பின்னர் உன்னி கிருஷ்ணன் எதிர் ஆந்திர பிரதேசம் என்ற வழக்கில் அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டுமே ஒருவர் தனிமைச் சிறையில் வைக்கப்பட வேண்டும் எனக் கூறியது உச்சநீதிமன்றம்

அரிதினும் அரிதான வழக்குகள் என்று கூறாமலேயே 1 முதல் 3 மாதங்கள் வரை தனிமைச் சிறையில் வைக்க முடியும் என்ற சட்டம் அரசியலமைப்புச் சட்டம் 21 க்கு எதிரானதாகும். எனவே முதற்கோணல் முற்றிலும் கோணல் என்ற பழமொழியை புதிய சட்டத்தின் இப்பிரிவு நினைவூட்டுகிறது.

பாரதிய சாக்ஷிய அதிநியம் என்ற சான்றியியல் சட்டத்தில் பழைய 1872ஆம் ஆண்டு சான்றியல் சட்டத்தின் அனைத்து பிரிவுகளுமே அவ்வாறே உள்ளன. ஆனால் வீடியோ மூலம் சாட்சியம் சொல்லும் முறை மட்டுமே புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. பழைய சட்டத்திலுள்ள 157 பிரிவுகளும் புதிய சட்டத்திலும் இடம் பெற்றுள்ளன. 170வது பிரிவு முந்தைய சட்டம் ரத்து செய்யப்பட்டதாக கூறுகிறது. சான்றியல் சட்டத்தை கைவைப்பது இந்திய சட்ட அமைப்பின் அஸ்திவாரத்தை கலைத்துபோடும் என உணர்ந்த ஒன்றிய அரசு எவ்வித கலந்துரையாடலுமின்றி 140 பாராளுமன்ற எதிர்கட்சி உறுப்பினர்களை இடைநீக்கம் செய்யப்பட்ட நிலையில் சட்ட ஆணையத்தின் அறிக்கை இல்லாமல் வல்லுனர் குழுவில் சிறந்த வழக்கறிஞர்கள், ஓய்வு பெற்ற நிதிபதிகள், பொதுமக்கள் பங்களிப்பின்றி பழைய சட்டங்களை குதறி கிழித்துபோட்டு புதிய பெயர் சூட்டப்பட்டது. ஆனால் இப்புதிய சட்டைகள் (சட்டங்கள்) சர்க்கஸ் கோமாளியின் ஒட்டுப் போட்ட சட்டையை நினைவூட்டுகிறது.

பாரதிய சாக்ஷிய அதிநியம் என்ற இந்திய சான்றியல் சட்டம் 1872ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்த Evidence Act என்ற சான்றியல் சட்டத்தை மாற்றி புதிய சட்டத்தை ஏற்படுத்துகின்றது. முந்தைய சான்றியல் சட்டத்தில் 167 பிரிவுகள் இருந்தன. புதிய சான்றியல் சட்டத்தில் 170 பிரிவுகள் உள்ளன. 2023ஆம் ஆண்டு இயற்றப்பட்ட புதிய சட்டத்தின்படி அச்சட்டம் நீதிமன்ற நடவடிக்கைகளும் ராணுவ நீதிமன்றங்களிலும் பயன்படும் என்று கூறும் முதல் பிரிவு இந்தியா முழுமைக்கும் இது பொருந்தும் என்ற பழைய சட்டத்திலுள்ள வாசகங்கள் இச்சட்டத்தில் இடம் பெறவில்லை.

இந்தியா என்ற சொல் இச்சட்டத்தில் அரசு (State) என மாறுதல் செய்யப்பட்டது கவனத்திற்குரியது. இந்தியா என்ற சொல் இச்சட்டத்தை ஏற்படுத்தியவர்களுக்கு ஒவ்வாமை ஏற்படுத்துவதை புரிந்துகொள்ள முடியும். ஆனால் காலனிய சட்டங்களை மாற்றப்போவதாக கூறி தொடங்கப்பட்ட அரைகுறை பணிகள் இச்சட்டத்தின் பெயரில் மட்டுமே மாற்றம் உள்ளன என்பதை காட்டும்.

பழைய இந்திய சாட்சியம் சட்டத்தில் பிரிவு 5 புதிய சட்டத்தின் 3காகவும், பழைய சட்டம் பிரிவு 5 புதிய சட்டத்தில் 4காகவும், பழைய சட்டம் பிரிவு 7 புதிய சட்டத்தில் 5காகவும், பழைய சட்டம் பிரிவு 8 புதிய சட்டத்தில் 9காகவும், பழைய சட்டம் பிரிவு 9 புதிய சட்டத்தில் 7காகவும், பழைய சட்டம் பிரிவு 10 புதிய சட்டத்தில் கோகவும் உருமாறின. விசித்திரிமாக பழைய 10யாவது பிரிவில்


vaigarai velicham official

சொல்லப்பட்ட முதலாவது விளக்கத்தில் இந்திய அரசுக்கு எதிராக போர் தெடுப்பது என்ற சொற்றொடரில் இந்திய அரசு என்ற வாசகம் நீக்கப்பட்டு அரசுக்கு எதிரான போர் என புதிய சட்டம் கூறுகிறது.

இந்தியா என்ற சொல் நீக்கப்பட்டதை தவிர அந்த பிரிவில் எவ்வித மாற்றமில்லை. பழைய சட்டம் பிரிவு11வது புதிய சட்டத்தில் ஒன்பதாகவும், பழைய சட்டம் பிரிவு12வது புதிய சட்டத்தில் 10காகவும், பழைய சட்டம் பிரிவு13வது புதிய சட்டத்தில் 11காகவும், பழைய சட்டம் பிரிவு14வது புதிய சட்டத்தில் 12காகவும் மறுசுழற்சி செய்யப்பட்டுள்ளன.

பழைய 14வது பிரிவில் 15 விளக்கங்கள் ஆங்கில எழுத்து 'a' முதல் 'p' வரை இடம் பெற்றுள்ளன. அதே விளக்கங்கள் முற்றுப்புள்ளி', கமா, அரைக்காற்; புள்ளி, மேற்கோள் இவற்றில் எந்த மாற்றமுன்றி புதிய பிரிவிலும் எடுத்தாளப் பட்டன. பழைய சட்ட பிரிவு 14லில் சொல்லப் பட்ட நாய்கடி உதாரணம், அதே மிரட்டல் கடிதம் உதாரணம், அதே துப்பாக்கி சுடும் உதாரணங்கள் புதிய சட்டங்களிலும் வரி மாறாமல் கையாளப்பட்டுள்ளன.

இதுபோன்றே பழைய சட்ட பிரிவு 15வது புதிய சட்ட பிரிவு 13யாகவும், பழைய சட்ட பிரிவு 15வது புதிய சட்ட பிரிவு 14யாகவும், பழைய சட்ட பிரிவு 17வது புதிய சட்ட பிரிவு 15யாகவும், பழைய சட்ட பிரிவு 18வது புதிய சட்ட பிரிவு 15யாகவும் தொடர்கிறது. பழைய சட்ட 18வது பிரிவிலுள்ள Suitor என்ற சொல் மட்டுமே புதிய சட்ட 16வது பிரிவில் இடம் பெறவில்லை. இது போன்றே பழைய சட்ட பிரிவு 17 முதல் 21 வரை உள்ள புதிய சட்ட பிரிவுகள் பழைய 19 முதல் 23 வரையுள்ள, பழைய சட்ட பிரிவுகளின் நகல் எடுத்துள்ளனர். அவற்றில் எந்த மாற்றமில்லை.

மிக முக்கியமான குற்ற ஒப்புதல் தொடர் பான படைய சட்ட 24வது பிரிவு புதிய சட்டத்தில் 22 பிரிவு என எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புதிய சட்டம் 22வது பிரிவில் பழைய சட்ட பிரிவு 24,28,29 ஆகிய மூன்று பிரிவுகளையும் இணைத்து ஒட்டி ஒரே பிரிவாக ஆக்கப்பட்டுள்ளது. இதுபோன்றே போலீஸ் அதிகாரிகளிடம் கொடுக்கும் ஒப்பந்தம் வாக்குமூலம் பழைய சட்ட பிரிவு 25வது சட்ட பிரிவு புதிய சட்டத்தில் 23யாக மாறியது. இதுமட்டுமின்றி பிரிவு 25,26,27 ஆகிய மூன்று சட்டத்தின் பிரிவுகள் ஒட்டப் பட்டு புதிய சட்ட பிரிவு 23வது சட்டமாக மாறியது.

புதிய சட்டத்தின் பிரிவுகள் 24,25,26 ஆகியன பழைய சட்டத்தின் பிரிவுகள் 30, 31, 32 ஆகியவற்றின் மறுவடிவமே. நகைப்பூட்டும் விதமாக பழைய சட்ட பிரிவு முக்கிய பிரிவு 32வது பிரிவின்படி இறந்துபோன அல்லது காணமல் போன நபர் கூறிய அல்லது சொன்ன விசயங்கள் வழக்கிற்கு தொடர்புடையவை என்ற சட்ட விதி சாதாரண மொழியில் மரண வாக்குமூலம் என வழங்கப்படுகிறது. அந்த பழைய பிரிவு 32வது சட்டபிரிவு புதிய சட்ட பிரிவு 25 என உருமாறியுள்ளது. பழைய சட்ட பிரிவில் 8 உதாரணங்கள் 1 முதல் 8 வரை எண்களில் குறிப்பிடப்பட்டு இருக்கும். பதிய சட்டத்தில் அவை ஆங்கில 'a' முதல் 'h' வரை மாற்றப்பட்டுள்ளது. பழைய சட்டம் 32வது பிரிவில் 14 விளக்கங்கள் ஆங்கில 'a' முதல் 'n' வரை சொல்லப்பட்டு இருக்கும். இப்பிரிவில் உதாரணங்கள் விளக்கங்களும் ஆங்கிலய சிறிய எழுத்துகளிலுள்ளதால் உதாரண எண்களிலும் விளக்கங்கள் ஆங்கிலத்திலும் கொடுக்கப்பட்டு இருக்கும். வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் முன்னி லையாகும் போது 25(சி) என குறிப்பிட்டால் அது உதாரணமா அல்லது விளக்கமா என அறிவது கடினம். ஆனால் பழைய சட்டத்தில் உதாரணங்கள் எண்களிலும் விளக்கங்கள் ஆங்கில எழுத்துகளிலும் இருப்பதன் காரணத்தை கூட புதிய சட்டமிற்றிய வல்லுனர்கள் பகுத்தாய முடியவில்லை.

கபில் சிபில் குழுவினர் தங்களது கலந்துரை யாடலில் குறிப்பிட்டதுபோல் இச்சட்ட மாற்றத்தில் நீதிமன்றத்தில் அன்றாடம் பயிற்சி செய்யும் வழக்கறிஞர்கள் இல்லாமல் சட்ட ஆசிரியர்களால் சட்ட மாற்றங்கள் ஏற்பட்டது இதற்கு காரணம் என்ற கருத்து உண்மையென காண முடியும்.

இதுபோன்றே பழைய சட்ட பிரிவு 33 முதல் 37 வரை உள்ள பிரிவுகள் புதிய சட்டத்தின் பிரிவு 27 லிருந்து 31யாக இடம் பெறுகிறது. பழைய சட்டம் 37லில் இடம் பெற்ற United Kingdom என்ற வாசகம் புதிய சட்டம் 31வது பிரிவில் இடம் பெறவில்லை என்பதை தவிர வேற எந்த மாற்றமில்லை.




பழைய சட்டத்தின் பிரிவுகள் 38 முதல் 43 வரை உள்ள பிரிவுகுள் புதிய சட்டத்தின் 32 முதல் 37 வரை எவ்வித மாற்றமின்றி இடம்பெற்றுள்ளன. பழைய சட்ட பிரிவு 43லில் விளக்கம் 'b'லில் சொல்லப்பட்ட அடல்டரி தொடர்பான விளக்கம் மட்டும் புதிய பிரிவு 37ல் நீக்கப்பட்டுள்ளது. ஏன்னென்றால் புதிய சட்டத்தில் பாரதிய நியாய சன்ஹிதா படி அடல்டரி குற்றமாக அல்லது (Section 497 IPC) ஆக கருதப்படாததால் அவ்விளக்கம் நீக்கப் பட்டுள்ளது

பழைய சட்ட பிரிவு 44 முதல் புதிய சட்டம் 38 யாக மாறியுள்ளது. மிக முக்கிய பிரிவான வல்லுனர்களது கருத்துரை பழைய சட்ட பிரிவு 45இல் கூறப்பட்ட அதே பிரிவு அதே விளக்கங்களுடன் வரி மாறாமல் புதிய சட்டம் பிரிவு 39இல் இடம் பெற்றுள்ளது.

பழைய சட்டத்தின் பிரிவு 45வது பிரிவு புதிய சட்டத்தின் 40வது பிரிவாக எவ்வித மாற்றங்களுமின்றி இடம் பெற்றுள்ளது. பழைய சட்டத்தின் பிரிவு 47 புதிய சட்டத்தின்

பிரிவு 41ஆகவும், பழைய சட்டத்தின் 48 புதிய சட்ட பிரிவு 42ஆகவும், பழைய சட்டத்தின் 49 புதிய சட்ட பிரிவு 43 ஆகவும், பழைய சட்டத்தின் 50 புதிய சட்ட பிரிவு 44ஆகவும், பழைய சட்டத்தின் 51 புதிய சட்ட பிரிவு 45ஆகவும், பழைய சட்டத்தின் 42 புதிய சட்ட பிரிவு 46ஆகவும், பழைய சட்டத்தின் 53 புதிய சட்ட பிரிவு 47ஆகவும், பழைய சட்டத்தின் 53(a) புதிய சட்ட பிரிவு 48ஆகவும், பழைய சட்டத்தின் 54 புதிய சட்ட பிரிவு 49ஆகவும், பழைய சட்டத்தின் 55 புதிய சட்ட பிரிவு 50ஆகவும் சிறிதளவும் மாற்றமின்றி தொடர்கின்றது.

பழைய சட்ட பிரிவு 53(a) பாலிய வன்முறை தொடர்பான வழக்குகளில் பாதிக்கப்பட்டவர் களுக்கு ஏற்கனவே பாலியல் அனுபவம் உள்ளதா என்ற கேள்வி வழக்கிற்கு தொடர்பற்றது என்ற கோட்பாட்டை கொண்டுள்ளது. அதே பிரிவு எண்கள் மாற்றமே கொண்டு புதிய சட்டம் 48வது பிரிவில் இடம் பெற்றுள்ளது.

புதிய சட்டத்தின் அத்தியாயம் 4 வாய்மொழி சாட்சியம் குறித்து கூறுகிறது. அது பழைய சட்டம் பிரிவுகள் 59, 60 ஆகியவற்றை பின்பற்றுகிறது. அவ்வத்தியாயத்தில் எந்த மாற்றமும் இல்லை.

புதிய சட்டத்தின் அத்தியாயம் 5 ஆவண சாட்சியத்தை பற்றி கூறுகிறது. புதிய சட்டத்தின் 56 முதல் 60 வரையுள்ள பிரிவுகளின் மாற்றங்கள் இல்லை. அவை பழைய சட்டத்தின் பிரிவு 51 முதல் 55யை முற்றிலும் ஒத்துள்ளன. விதி விலக்காக இரண்டாம் நிலை சாட்சியம் குறித்து கூறும் புதிய சட்டத்தில் 58வது பிரிவில் வாய்மூல ஒப்புதல்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளன. அது புதிய சட்டத்தை மேம்படுத்துவதற்கு பதிலாக ஏராளமான குழப்பங்களை ஏற்படுத்தவல்லது.

பழைய சட்டத்தின் மிக முக்கிய பிரிவான 55(b) மின்னணு ஆவண சாட்சியங்களை ஏற்றுக் கொள்ளுவது குறித்து கூறுகிறது. அது பிரிவு 63ஆவது பிரிவாக இடம் பெற்றுள்ளது. மிக நுண்ணிய மாற்றங்கள் மட்டுமே அதில் செய்யப்பட்டுள்ளது. ஆனால் பழைய பிரிவில் அரிதில் பெரும்பான்மை அம்சங்கள் புதிய பிரிவிலும் பிரதி எடுக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தின் 62 முதல் 93 வரை பழைய சட்டத்தின் பிரிவுகள் 65(ய)லிருந்து 90(6) வரையிலான பிரிவுகள் எவ்வித மாற்றமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பழைய சட்டத்தின் 88வது பிரிவான டெலிகிராம்; மெசேஜ் குறித்த அனுமானம் பிரிவு தற்போது டெலிகிராம் இல்லாததால் பழைய சட்டம் 88வது பிரிவு புதிய சட்டத்தில் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

அத்தியாயம் 5ல் ஆவண சாட்சியம் இருக்கும்போது வாய்மொழி சாட்சியத்தை மறுக்கும் அந்த அத்தியாயத்தில் பழைய பிரிவுகள் 91 முதல் 100 வரை உள்ள அதே பிரிவுகள் புதிய சட்டத்தின் பிரிவுகள் 94 முதல் 108 வரை எவ்வித மாற்றமில்லாமல், விளக்கங்கள் உள்பட வரிமாறாமல் இடம் பெற்றுள்ளது.



vaigarai velicham official

அத்தியாயம் 7வது புகழ்பெற்ற பிரிவான நிரூபிக்கும் கடமையான Burden of Proof பழைய சட்டத்தில் பிரிவுகள் 101 முதல் 1144 வரை இடம்பெற்றுள்ளது. அதே பிரிவுகள் புதிய சட்டத்தின் பிரிவு 104 முதல் 120 வரை இடம் பெற்றுள்ளன. Presumption அல்லது அனுமானம் என்ற பழைய சட்ட பிரிவு 114 பிரிவு விளக்கங்களுடன் 8 முதல் i வரை ஒரு புள்ளி கூட மாறாமல் இடம் பெற்றுள்ளது.

தற்கொலைக்கு தூண்டியதாக கருதும் அனுமானம், வரதட்சணை என்ற அனுமானம் ஆகியன பழைய சட்ட பிரிவு 1134 முதல் 1138 ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளன. புதிய சட்டம் பிரிவு 117 மற்றும் 118 ஆகிய பிரிவுகள் மேற் சொன்ன அனுமானங்கள் இடம் பெற்றுள்ளன.

அத்தியாயம் 8 முரண்தடை என்ற பழைய சட்ட பிரிவு 115 முதல் 117 உள்ளிட்ட மூன்று பிரிவுகளை கொண்டதாக உள்ளது. புதிய சட்டத்தின் பிரிவு 121 முதல் 123 வரை எவ்வித மாறுதலுமின்றி இடம் பெற்றுள்ளது.

அத்தியாயம் 9 சாட்சியம் யாராக இருக்க வேண்டும் என்ற பிரிவுகள் பழைய சட்டங்கள் பிரிவு 118 முதல் 134 வரை புதிய சட்டங்களி லும் பிரிவு 124 முதல் 139 வரை இடம் பெற் றுள்ளன. சக குற்றவாளிகளின் சாட்சியத்தை எடுத்துக் கொள்ளலாம், சட்ட ஆலோசனை கூறுபவர்களுக்கு கொடுத்த நம்பிக்கைகுரிய தகவல்களை வெளியே கூற வேண்டாம். வழக்கறிஞர்கள் தனக்கு தொழில் ரீதியாக கூறப்படும் தகவல்களை வெளியே சொல்ல வேண்டாம் என்ற பிரிவுகள் புதிய சட்டத்திலும் அதேபோன்று இடம் பெற்றுள்ளன. இதுதவிர சாட்சியங்களின் எண்ணிக்கை முக்கியமில்லை யென்ற பழைய பிரிவு 134வது புதிய சட்டம் 139 பிரிவில் இடம் பெற்றுள்ளது.


அத்தியாயம் 10வது சாட்சிகள் விசாரித்தல் குறித்த பழைய பிரிவுகள் 135 முதல் 165 வரை உள்ள பிரிவுகள் புதிய சட்டத்தின் பிரிவுகள் 140 முதல் 158 வரை இடம் பெற்றுள்ளன. வழி நடத்தும் கேள்வி, இழிவுபடுத்தும் கேள்விகள், கோபமூட்டும் கேள்விகள், சாட்சிகளின் நாணயம் குறித்த கேள்விகள், சாட்சிகளின் தங்கள் ஞாபகத்தை புதுப்பித்து கொள்ளுதல், நீதிபதி கேள்விகேட்கும் அதிகாரம் குறித்த பகுதிகள் ஆகிய வரிக்கு வரி மாறாமல் இடம் பெற்றுள்ளன. பழைய சட்டத்தின் ஜூரிக்கு கேள்வி கேட்கும் அதிகாரம் 155 பிரிவு புதிய சட்டத்தில் நீக்கப்பட்டது.

அத்தியாயம் 11ல் பழைய சட்டத்தின் 167 பிரிவில் ஒழிங்கினமாக சாட்சியத்தை ஏற்றோ அல்லது நீக்கியோ இருந்தால் அதன் காரணமாக புதிய நீதிமன்ற விசாரணை கூடாது என்ற புதிய சட்டத்தின் 169 பிரிவாக இடம் பெற்றுள்ளது.

புதிய சட்ட பிரிவு 170 அத்தியாயம் 12 பழைய சட்டத்தை நீக்குவதற்காக இடம் பெற்றுள்ளது. ஆனால் பழைய சட்டம் புதிய சட்டத்தை ஒப்பிட்டு பார்க்கும்போது புதிய சட்டம் பழைய சட்டத்தின் மறுசுழற்சி செய்யப்பட்ட வடிவமே ஆகும்.

புதிய நடைமுறைகளின் படி குற்ற ஒப்புதல் பெறுவதற்கும் வீடியோ, ஆதாரங்களையும் காவல்துறையினரால் பதிவு செய்யப்படும் காணொலி காட்சிகளையும் ஆதாரமாக மாற்றுகிறது. இந்திய சாட்சிய சட்டம் பாரதிய சாக்ஷிய அதிரியம் என பெயர் மாற்றப்பட்ட போது பழைய சட்டத்தில் சொல்லப்பட்ட 'இந்தியா' என்ற சொல் நீக்கப்பட்டுள்ளது.

புதிய தண்டனை முறைகளும் சட்ட வடிவில் புகுந்துள்ளன. அபூர்வமான தருணங் களில் யாராவது ஒரு நிதிபதி பிணை வழங்கும் போது பிணையில் வெளிவந்தவரை காந்தி



அருங்காட்சியகத்தில் தன்னார்வ பணிபுரியவோ அல்லது சாலைகளை தூய்மைப்படுத்தவோ அல்லது சமூக பணிகளை செய்யவோ உத்தர விடுவது உண்டு.

புதிய பிஎன்எஸ்., சட்டத்தில் சம்பளமற்ற சமூக பணிக்கு சட்ட அந்தஸ்து கிடைத்துள்ளது. அது ஒரு வகை சாதீய அடக்கு முறை வடிவம் என வழக்கறிஞர்கள் சிலர் கருதுகின்றனர்.

சாட்சிய சட்டங்களை பொறுத்தவரை பழைய சாட்சிய சட்டங்களில் உள்ள அதே அத்தியாயங்கள் புதிய சாட்சிய சட்டங்களில் ஒன்று முதல் பனிரெண்டு வரை இடம் பெற்றுள்ளன தொடர்புடைய உண்மைகள், காவல்துறை அதிகாரியிடம் குற்ற ஒப்புதல், குறுக்கு விசாரணை கேள்விகள், வழிகாட்டும் கேள்விகள், முரண்தடை, அனுமானங்கள், வரதட்சணை மரணம் ஆகியன புதிய சாட்சிய சட்டத்தில் எவ்வித மாற்றமுன்றி அதே வடிவிலேயே உள்ளது.

குற்றவியல் நடைமுறை சட்டத்தில் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா என்ற பெயரை தவிர நடைமுறையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. பிஎம்எல்ஏ என்ற பண சலவை தடைச்சட்டத்தின் கீழ் குற்றவழக்கில் தொடர்புடையவர்களின் சொத்துக்களை கையகப்படுத்துவது தொடர்பான நடை முறைகள் தற்போதைய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிஎன்எஸ்எஸ் அத்தியாயம் எட்டில் இடம் பெற்றுள்ளன.

15 நாட்கள் மட்டுமே போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க இயலும். ஆனால் அக்காவல் எடுக்கும் நாட்கள் விசாரணை முதல் 40 நாட் களுக்குள்ளகவோ அல்லது 60 நாட்களுக்குள் ளாகவோ எடுக்க முடியும் என்ற புதிய விதி பிணை கிடைப்பதை மேலும் கடினமாக்குகிறது. அரசுக்கு எதிரான குற்றங்களில் அரசிடம் அனுமதி பெற்றே வழக்கு தொடர வேண்டும் என்ற விதிமுறை பி.என்.எஸ்.எஸ்., சட்டத்தில் 217ம் பிரிவில் கூறப்பட்டிருந்தாலும் அது பயங்கரவாத குற்றத்திற்கு பொருந்தாது. ஏனெனில் பயங்கரவாத குற்றம் பிரிவு 113 (பிஎன்எஸ்) உடலுக்கு எதிரான குற்றங்களின் பட்டியல் சேர்க்கப்பட்டுள்ளதே தவிர அரசுக்கு எதிரான குற்றங்களில் இல்லை

பிஎன்எஸ்எஸ். சட்டத்தின் 530ஆவது பிரிவு அழைப்பாணை வழங்குவது, பிடியாணை வழங்குவது, சாட்சியங்களையும், புகார்தார ரையும் விசாரிப்பது, விசாரணை நடத்துவது, மேல்முறையீட்டை நடத்துவது ஆகியனவற்றை மின்னணு கருவிகள் மூலம் நடத்திக் கொள்ளலாம் எனக் கூறுகிறது

புதிய பிஎன்எஸ்எஸ்., சட்டத்தில் பழைய ராஜதுரோகம் என்ற 124(கி) பிரிவு நீக்கப்பட்டது. ஆனாலும் அதே குற்றங்கள் பயங்கரவாதம் என்ற பெயரில் இடம் பெற்றுள்ளன. அரசு பணியாளர் கையூட்டு பெறுதவதற்கு உண்டான சட்டம் 151 முதல் 155 வரை இருந்த பழைய சட்ட பிரிவுகள், போலி நாணயம் தயாரித்தல் மற்றும் ஏற்றுமதி அளவு மற்றும் எடை கட்டுப்பாடு தொடர்பான குற்றங்கள் புதிய சட்டங்களில் நீக்கப்பட்டுள்ளன. அதற்கென சிறப்பு சட்டங்கள் உள்ளதால் அதற்கான தேவை இல்லாமல் போயிற்று.

மொத்தத்தில் புதிய சட்டங்கள் புதிய மாற்றங்களை செய்வதற்கு பதிலாக கைவிலங்கு போடுதல் தெய்வறிந்தனை, தனிமைச்சிறை என காலனிய காலத்தை மறுபடியும் நமக்கு நினை வூட்டுகிறது. இச்சட்டங்கள் மாநிலங்களின் கூட்டாட்சி உரிமைகளையும் பறிக்கின்றன.

அரசர்கால தண்டனைகளில் சாதிக்கு ஒரு நீதியாக இருந்தது. தற்போது நவீன கால தண்டனைகளில் சாமானிய மக்களுக்கு பயங்கர வாத தண்டனை இருந்தது அதேபோன்று ஜன் விஸ்வாஸ் 2022 என்ற சட்டத்திருத்தங்கள்படி 42 சட்டங்களில், குறிப்பாக கம்பெனி சட்டங்கள், காப்புரிமைச் சட்டங்கள், காப்புறுதி சட்டங்கள், பண மதிப்பிழப்பு சட்டங்கள் ஆகியனவற்றில் தண்டனை நீக்கம் செய்யப் பட்டது, அதே நேரத்தில் புதிய சட்டங்கள் சாமானியர்களை ஒரு தட்டிலும் ஜன் விஸ்வாஸ் சட்ட திருத்தங்கள் உயர் வர்க்கத்தினரை வேறு தட்டிலும் எடை போடுகிறது.

இன்னும் சொல்லப்போனால் மக்களுக்கு பயங்கரவாதச் சட்டங்களை வழங்கிய அதே அரசு மெய்யான பொருளாதார குற்றங்களுக்கு மயிலிறகால் வருடும் மென்மையான சட்டங் களையே வழங்கியுள்ளது.

**– தி.லஜபதிராய்**
*21.09.2024*
மதுரை - 20


vaigarai velicham official

# ஸாரி; மை லார்ட்ஸ்!

## நீதிபதி சந்திரசூட் அவர்களின் நீதிபரிபாலனம்



- சா.பீட்டர் அல்போன்ஸ்

**அடுத்த** சில தினங்களில் நாட்டின் 51ஆவது தலைமை நீதிபதியாக நீதிநாயகம் சஞ்சீவ் கன்னா பதவியேற்க இருக்கிறார். இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இந்தியாவின் தலைமை நீதிபதியாக பணியாற்றிய நீதிநாயகம் தனஞ்சய யஷ்வந்த் சந்திரசூட் வரும் நவம்பர் 11 அன்று ஓய்வு பெறுகிறார். இந்திய அரசியல் சாசனச் சட்டம் தன்னை பாதுகாத்துக்கொள்ள தானே உரு வாக்கி வைத்திருக்கும் ஜனநாயக நிறுவனங் களுள் உச்ச நீதி மன்றமே முதன்மை யானதும் முக்கியமானதும் ஆகும். இந்திய அரசியல் அமைப்பில் சட்டங்களை உருவாக்கும் நாடாளு மன்றத்தையும், அந்த சட்டங்களை நிறை வேற்றும் அரசு நிர்வாக இயந்திரத்தையும் கண்காணித்து, அவைகளின் செயல்பாடுகளை அரசியல் சட்ட வரம்பிற்குள் இருப்பதை உறுதி செய்து, நெறிப்படுத்தி, இந்திய நாட்டின் குடிமக்களது அடிப்படை உரிமைகளைப் பாது காத்து, சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டும் “மகத்தான அதிகாரம்” நமது உச்சநீதிமன்றத்திற்கு மட்டுமே உண்டு. ஒரு புதிய தலைமை நீதிபதி பொறுப்பேற்கும்போதும், இருந்தவர் பணி ஓய்வு பெறும்போதும், உச்சநீதி மன்றத்தின் செயல்பாடுகள் பற்றியும், அங்கே பணியாற் றும் நீதிபதிகளின் நடைமுறைகள் குறித்தும், ஒட்டு மொத்த நீதித்துறையின் எதிர் காலம் குறித்தும் நம்மால் சிந்திக்காமலும், பேசாமலும் இருக்க முடியவில்லை.

**நாம் பாக்கியவான்கள்?**

இந்நாட்களில் வாழும் இந்தியர்கள் உண்மையிலேயே மிகவும் பாக்கியம் செய்த வர்கள்! நமது பிரதமரும், நமது தலைமை நீதிபதியும் தெய்வத்தோடு நேரில் பேசி, தெய்வத்தின் அருள் கடாட்சம் பெற்றபின்னரே தங்களது கடமைகளின் நிமித்தம் செய்ய வேண்டிய பணிகளை செய்கிறார்கள். “நான் உயிரியல் ரீதியாக பிறக்கவில்லை. இறைவனின் திட்டத்தை நிறைவேற்றவே இறைவனால் இங்கு அனுப்பப்பட்டுள்ளேன்” என்று நம் பிரதமர் சொன்னபோது நாமெல்லோரும் மெய்சிலிர்த்துப்போனோமே! அதைப்போல

> “நாடே எதிர்பார்த்து காத்திருந்த பாபர் மசூதி வழக்கில் தீர்ப்பளிக்கும் முன் பகவான் ராமரிடம் “இந்த வழக்கிற்கு தீர்வு ஒன்று சொல்லுங்கள் தெய்வமே!” என்று அவர் மன்றாடினதாகவும் அவ்வாறு பெறப்பட்டது தான் அந்த தீர்ப்பு என்றும் நமது தலைமை நீதிபதி சொன்னபின்னர்தான் நமக்கு பல விஷ யங்கள் புரிந்தது.”

நமது தலைமை நீதிபதியும் மிக முக்கியமான வழக்குகளில் தீர்ப்பளிக்கும் போதெல்லாம் ஸ்ரீராமனின் திருவுருவத்தின் முன் அமர்ந்து, தியானித்து அந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு என்ன அருளப்பட்டதோ அதையே தீர்ப்பாக எழுதுகின்ற தெய்வீக வல்லமை பெற்றவர். நாடே எதிர்பார்த்து காத்திருந்த பாபர் மசூதி வழக்கில் தீர்ப்பளிக்கும் முன் பகவான் ராமரிடம் "இந்த வழக்கிற்கு தீர்வு ஒன்று சொல்லுங்கள் தெய்வமே!" என்று அவர் மன்றாடினதாகவும் அவ்வாறு பெறப்பட்டது தான் அந்த தீர்ப்பு என்றும் நமது தலைமை நீதிபதி சொன்னபின்னர்தான் நமக்கு பல விஷயங்கள் புரிந்தது.

வழக்கமாக உச்ச நீதிமன்றம் பெரும் அமர்வாக அமர்ந்து தீர்ப்பளிக்கும்போது பகரப்பட்ட பெரும்பான்மை தீர்ப்பை எந்த நீதிபதி எழுதினார் என்பதும் அதில் உடன்பட்ட வர்கள் யார் என்பதும், குறிப்பிடப்பட்டு, உடன் படாதவர்கள் தனியாக தங்களது தீர்ப்பினையும் வழங்குவதுதான் உச்ச நீதிமன்றத்தின் நடை முறை. ஆனால் பாபர் மசூதி வழக்கில் வழங்கப் பட்ட தீர்ப்பினை யார் எழுதினார் என்று தெரிவிக்கப்படவே இல்லை. இறைவன் தந்த தீர்ப்பு என்று எழுத முடியாதல்லவா? ஆனால் தில்லி உயர்நீதிமன்றத்தின் மிகச்சிறந்த நீதிபதி என அறியப்பட்ட நீதி அரசியார் சார்மா அவர்கள் தலைமை நீதிபதி சந்திரசூட் அவர் களின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. சட்டப்படியும், நியாயத்தின்படியும் தவறான தீர்ப்பின் பொறுப்பினை ஸ்ரீராமரின் மீது போட்டுவிட முயற்சிக்கும் அவர் அரசியல் சட்டத்தின் மீது தலைமை நீதிபதி ஏற்றுக் கொண்ட உறுதிமொழியை மீறியதோடு மட்டு மல்லாமல் இந்திய நாட்டு மக்களுக்கு எதிராகவும் பெரும் துரோகத்தை இழைத் துள்ளார் என்று சந்திரசூட்டை பகிரங்கமாக கண்டித்தார்.

விடைபெறுகின்ற தலைமை நீதிபதி சந்திர சூட் கடந்த சில நாட்களாக பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தனது பணி காலத்தின் போது தலைமை நீதிபதியாக மற்றும் நீதிபதியாக தனது செயல்பாடுகளைப்பற்றி யும், உச்ச நீதிமன்றத்திற்கு தனது பங்களிப்பு



நீதிபதி சந்திரசூட்

பற்றியும் மிகவும் பெருமிதப்பட்டு தனக்குத் தானே சிலாகித்துக்கொள்கிறார். அந்த உரிமை அவருக்கு உண்டு. அதே நேரத்தில் உச்ச நீதிமன்றத்தின் செயல்பாடுகளை அன்றாடம் உன்னிப்பாக கவனித்துவருகின்ற சட்ட விற்பன் னர்கள், மேனாள் உச்ச நீதி மன்ற - உயர்நீதி மன்றங்களின் நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள், அரசியல் சட்ட நிபுணர்கள், அனுபவம் நிறைந்த ஊடகவியலாளர்கள், பொது நல வழக்குகள் மூலம் நாட்டு மக்களின் உரிமைகளுக்காக போராடுகின்ற சமூக ஆர்வலர்கள், மனித உரிமை போராளிகள், ஆளும் அதிகார வர்க்கத்தின் எதேச்சதிகாரத் துரைத் தனத்தால் பாதிக்கப் பட்ட எதிர்க் கட்சியினர், பெரும் கார்ப்பரேட் முதலாளிகளின் சுயநலச் சுரண்டலால் வாழ்வா தாரங்களை இழந்தவர்கள் இந்த தலைமை நீதிபதியின் பணிக் காலத்தில் அவரது செயல் பாடுகள் குறித்தும், ஒட்டு மொத்த நீதித்துறை யின் செயல்பாடுகள் குறித்தும் என்ன மதிப்பீடுகள் வைத்துள்ளனர் என்பதையும் நாம் பதிவு செய்யவேண்டும் அல்லவா? சென்ற மாதத்தில் விநாயகர் சதுர்த்தி விழாவின்போது, தனது இல்லத்தில் நடந்த விநாயகர் ஆரத்திக்கு தலைமை நீதிபதி பிரதமரை அழைத்தார். நீதிபதியும் அவரது மனைவியும் பிரதமரின் இருபுறமும் நின்று கொண்டு, விநாயகருக்கு பிரதமர் தீப ஆராதனை செய்வதும், நீதிபதியின் மனைவியார் சுலோ கங்கள் சொல்வதும், தலைமை நீதிபதி அந்த பூஜைக்கு மணிய டிப்பதுமான காட்சிகள் தேசிய ஊடகங்கள் அனைத்திலும் ஒளிபரப்பப்பட்டு, சமூக ஊடகங் களிலும் பெரும் வைரலாகி கோடிக்கணக்கான மக்கள் பார்த்தனர். தலைமைநீதிபதியின் வீட்டில் நடந்த அந்த நிகழ்வு குறித்து பெரும்



vaigarai velicham official

விமர்சனங்கள் எழுந்தன. உச்ச நீதி மன்றத்தின் வழக்கறிஞர் சங்கம் உட்பட பல மேனாள் நீதி அரசர்களும், பத்திரிகையாளர்களும் அது நல்ல மரபல்ல என்று சுட்டிக்காட்டினார்கள்.

**ஒளிபரப்ப அவசியம் என்ன?**

நரேந்திர மோடிக்கும், சந்திர சூட் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் தெய்வ நம்பிக் கையும், வழிபாடு செய்யும் உரிமைகளும் இருக்கக் கூடாது என்று யாரும் சொல்ல முடியாது. ஆனால் பிரதமரும், தலைமை நீதிபதியும் தெய்வ வழிபாடு செய்யும்போது நான்கு கேமிராக்கள் சுற்றிநின்று படம் எடுத்து ஒளிபரப்ப வேண்டிய அவசியம் என்ன என்று சிலர் கேட்கும்போது அதில் உள்ள நியாயத்தை நம்மால் மறுக்க முடியவில்லை. அதிலும் அதற்கு அடுத்த வாரம் மகாராஷ்டிராவில் பாஜகவையும், அவர்களது அரசையும் பாதிக்கக் கூடிய சிவசேனா கட்சி வழக்குகள் உட்பட ஒன்றிய அரசு சம்பந்தப்பட்ட பல முக்கியமான வழக்குகளில் தலைமை நீதிபதி தீர்ப்புச் சொல்ல இருந்தபோது, இப்படி பிரதமருடன் ஒரு தனிப் பட்ட சந்திப்பு சரியானதல்ல என்று சிலர் கூறுவதையும் மறுப்பதற்கில்லை.

சில நாட்களுக்கு பின்னர் நடந்த பத்திரிகை யாளர் சந்திப்பில், பிரதமர் தனது இல்லத்திற்கு வந்தபோது இந்த வழக்குகள் சம்பந்தமாக தாங்கள் இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை என்று பரிதாபமாக ஒரு தன்னிலை விளக்கம் கொடுத்தபோது, தலைமை நீதிபதி தனது பதவியின் மாட்சிமை மிக்க கம்பீரத்தை சற்று இழந்து விட்டதாகவே நான் பார்க்கிறேன்.

யாரிடமும் கலந்தாலோசிக்காமல்...



உச்ச நீதிமன்றம் உருவாக்கப்பட்ட நாளிலிருந்து அந்த வளாகத்தில் நீதி தேவதையின் சிலை ஒன்று நிறுவப்பட்டிருந்தது. கிரேக்க, எகிப்திய கலாச்சாரங்களில் நீதியின் தெய்வமாக வணங்கப்பட்ட நீதி தேவதையின் சிலை. உலகம் முழுவதும் நீதி வழுவாத நெறிமுறையின் அடையாளமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. பல நாடுகளின் நீதிமன்றங்களில் அந்த சிலை வைக்கப்பட்டுள்ளது. வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், பெரியவர்கள்-சிறியவர்கள் என்ற வேறு பாடுகளையெல்லாம் பார்க்காமல், நீதி பரிபாலனம் செய்வது மட்டுமே நீதிமன்றங் களின் கடமை என்பதை உணர்த்துகின்ற வகையில் அதன் கண்கள் கருப்புத் துணியால் கட்டப்பட்டிருக்கும். ஒருபால் கோடாத நீதியின் தராசை ஒரு கையிலும், நீதியின் மாண்பையும், மாட்சிமை மிக்க அதன் அதிகாரத்தையும் விளக்குகின்ற வகையில் மற்றொரு கையில் ஓங்கிய வாளுடன் நிற்கும். அந்த சிலையை ஒரே நாளில் சம்பந்தப்பட்ட யாரிடமும் கலந்து ஆலோசிக்காமல் எடுத்துவிட்டு, தனது விருப்பப்படி மற்றொரு சிலையை தலைமை நீதிபதி சந்திர சூட் அங்கே வைத்துவிட்டார். திறந்த கண்களுடன், நெற்றியில் திலகத்து டன், வாள் அகற்றப்பட்ட கையில் சட்டப் புத்தகத் துடனும், பட்டுச் சேலை கட்டிய ஒரு பெண் சிலை தற்போது அங்கே வைக்கப்பட்டுள்ளது. இந்த சிலையின் தத்துவப் பின்னணியும், வரலாற்றுப் பின்புலமும் என்ன என்று யாருக்கும் புரியவில்லை. நமது இதிகாசங்களிலும், கலாச்சாரத்திலும் இந்த தோற்றத்தில் ஒரு நீதி தேவதை இருந்ததாக எந்த இடங்களிலும் இல்லை. எந்த அடிப்படையில் இந்த சிலை உருவாக்கப்பட்டது என்பதையும் அவர் தெரிவிக்கவில்லை. “காலனி ஆதிக்கத்தின் எச்சமாக பழைய சிலை இருந்தது. அதனால் அதை எடுத்துவிட்டு பாரத கலாச்சாரம் கொண்ட ஒரு பெண்ணின் சிலை வைக்கப் பட்டுள்ளது” என்று சொல்லப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

**ஆசிய நாகரிக பண்பாட்டுக் கூறு...**

பழைய சிலை ஆங்கிலேய கலாச்சாரம் சார்ந்ததன்று. அது ஆசிய நாகரிக பண்பாட்டுக் கூற்றை உள்வாங்கியது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பாரபட்சமற்ற நீதிபரிபால

னத்தின் அடையாளமாக உலகெங்கிலும் கொண்டாடப்படுவது. அதனை எடுத்துவிட்டு தனது சொந்த கற்பனையை இந்திய திரு நாட்டின் உச்ச நீதிமன்றத்தின் அடையாளமாக அவர் நிறுவியதை "உள் நோக்கமுடையது" என்றும் நாட்டின் உச்ச கட்ட நீதிபரிபாலன நிறுவனத்திற்கு ஒரு பண் பாட்டுச் சாயம் பூச அவர் முற்படுகிறார் என்றும் உச்ச நீதிமன்றத்தின் வழக்கறிஞர்கள் சங்கம் உட்பட பலர் சொல்வதை உதாசீனப்படுத்த முடியவில்லை.

**என்ன பதில் சொல்வீர்கள்?**

இந்திய நாட்டின் அரசியல் வானில் வகுப்பு வாத மதவெறி எனும் இருள் சூழ்ந்து, அரசியல் சாசனச் சட்டத்தின் விழுமியங்கள் அனைத்தும் நெருக்கடிக் குள்ளாக்கப்பட்டு, சட்டத்தின் ஆட்சியும், மக்களாட்சி தத்துவமும் அழிவின் ஆரம்பப் பாதையில் நிற்கும்போது, அதனை தடுத்து நிறுத்தி, இந்தியா என்று நாம் கொண் டாடும் தத்துவத்தை பாதுகாத்துத் தர பணிக்கப் பட்டிருக்கும் உச்சநீதி மன்றத்தை, நீதிநாயகம் சந்திர சூட் எப்படி வழி நடத்தினார் என்ற கேள்வியை வரும் தலைமுறைகள் கேட்கு மல்லவா? அதற்கு என்ன பதில் சொல்வீர்கள்? தேர்தல் பத்திரங்கள் வழக்கை உடனடியாக விசாரித்து முடிக்காமல், பல்லாயி ரக்கணக்கான கோடிகளை ஆளும் கட்சி வசூல் செய்து முடித்த பின்னர், அது சட்ட விரோதமானது என்று தீர்ப்பளித்த உங்கள் அமர்வு, பத்திரம் மூலம் பெறப்பட்ட பணத்தை திரும்ப வசூலிப்பதற்கோ அல்லது தவறாக, நன்கொடை என்ற பெயரில் வசூல் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் மீது விசாரணை செய்வதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்படாதது ஏன் என்ற கேள்விக்கு என்ன பதில்? சண்டிகர் நகர மேயர் தேர்தலை முறைகேடாக நடத்திய அயோக்கியத்தனமான அதிகாரியை குற்றவாளி என்று அறிவித்துவிட்டு, அவர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லையே என்று விஷயம் தெரிந்தவர்கள் யாரும் கேட்கமாட்டார்களா?

**வரலாற்றுப் பிழை...**

மகாராஷ்டிராவில் அரசியல் சட்டத்திற்கு விரோதமாக, ஷிண்டே,-பட்னா விஸ்,-அஜித் பவார்பாவக்கூட்டணியை ஆட்சியில்அமர்த்திய



நீதிபதி சஞ்சீவ் கன்னா

ஆளுநரின் செயல்கள் அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்று தீர்ப்பளித்துவிட்டு, நடவ டிக்கை எடுக்கும் பொறுப்பை சபாநாய கரிடம் தூக்கிக்கொடுத்துவிட்டு, முறையாக நடவடிக்கை எடுக்காத சபாநாயகர் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல், முறையற்ற அரசை பதவிக் காலம் முழுவதும் ஆட்சியில் இருக்க அனுமதித்தது மாபெரும் வரலாற்றுப் பிழை என்று நாளைய சரித்திரம் சொல்லாதா? மலைவாழ் மக்களின் உரிமைகளுக்காக வாழ்நாள் முழுவதும் போராடிய 84 வயது ஸ்டேன்ஸ் பாதிரியாரை நக்சலைட் தீவிரவாதி என்று பொய்வழக்கில் கைது செய்து விசார ணையே இல்லாமல் சிறையிலடைத்து, சிறையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த வேளையில், "என் மக்கள் மத்தியில் நான் சாக விரும்புகிறேன். அதற்காக என்னை ஜாமீனில் விடுங்கள்" என்று அவர் மன்றாடியபோது உச்சநீதிமன்றம் ஜாமீன் வழங்காமல் அவர் சிறையிலேயே இறந்து போனாரே, அந்த வழக்கு என்ன ஆனது என்று எந்த நீதிநாய கமும் இதுவரை கேட்கவில்லையே?

அது நியாயம்தானா என்று அவரது ஆன்மா கேட்காதா? இந்தியாவின் மிகப்பெரிய பணக்காரரான அதானியும், அவரது நிறுவனங் களும் பங்குச் சந்தையிலும், கம்பெனி சட்ட வாரியத்திலும் மிகப்பெரிய முறைகேடு களில் ஈடுபட்டதாக அமெரிக்காவின் ஹிண்டன்பர்க் நிறுவனம் அறிக்கை அளித்தபோது, அந்த அறிக்கை தவறாக இருந்தால் அமெரிக்காவில் நீதி மன்றங்களில் ஹிண்டன்பர்க் மீது நடவ


vaigarai velicham official

டிக்கை எடுங்கள் என்று அதானியிடம் சொல்லாமல், ஒரு நிபுணர் குழுவை நியமித்து, அந்த குழுவும் எங்களால் முழுமை யாக விசாரித்து உண்மையை கண்டுபிடிக்க முடிய வில்லை என்று சொன்ன பின்னரும், அந்த அறிக்கையையே சாதகமாக்கிக்கொண்டு அதானி நிறுவனத்திற்கு நன்னடத்தை சான்று வழங்கி அளிக்கப்பட்ட தீர்ப்பு முறையானது தானா?

**செவிகளை எட்டியதா?**

கஷ்மீர் மாநிலத்தை மூன்று யூனியன் பிரதேசங்களாக மாற்ற சம்பந்தப்பட்ட மாநிலத் தின் சட்டமன்றத்தின் அனுமதி வேண்டும் என்ற அரசியல் சட்டத்தின் 371 ஆவது பிரிவின் முக்கிய உள்ளடக்கத்தை புறந்தள்ளி, சட்டமன்றம் கலைக்கப்பட்டிருந்த வேளையில், குடியரசு தலைவரே, குடியரசு தலைவரை கலந்து அந்த மாநிலத்தை யூனியன் பிரதேசமாக மாற்றியது செல்லும் என்ற தங்களது தீர்ப்பு மிகவும் விநோதமானது, மற்றும் வேடிக்கையானது என்று அரசியல் சாசன விற்பன்னர்கள் சொல் கிறார்களே, அது உங்கள் செவிகளை எட்டியதா? எந்த விசாரணையும் இல்லாமல், தீர்ப்பும் சொல்லப்படாமல் நான்கு ஆண்டுகளாக உமர் காலித் எனும் ஏழை இஸ்லாமிய இளைஞர் சிறையிலடைக்கப்பட்டுள்ளாரே, அவருக்கு இந்த நாட்டின் குடிமகன் என்ற முறையில் உரிமைகள் ஏதாவது உண்டா? என்று மனித உரிமை ஆர்வலர்கள் கேட்கும் கேள்விகளின் சப்தம் எங்கள் காதுகளை செவிடாக்குகின்ற னவே! உச்ச நீதிமன்றத்தின் காதுகளுக்கு அது எட்ட இன்னும் எத்தனை நாட்கள் ஆகும்?

சாரி !மை லார்ட்... உச்ச நீதி மன்றத்திலும், பல உயர் நீதி மன்றங்களிலும் சில நீதி அரசர்கள் நடந்துகொள்வதும், அவர்கள் பேசுவதும் நீதி பரிபாலனத்தின் எதிர்காலத்தையே கேள்விக் குள்ளாக்குகின்றன. நாங்கள் எல்லோரையும் குறைசொல்லவில்லை. விரல் விட்டு எண்ணக் கூடிய சிலரது செய்கை நீதி பரிபாலனத் தினையே களங்கப்படுத்துவதை தாங்கள் அறிவில்லையா? அப்படிப்பட்டவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உச்ச நீதி மன்றம் தயங்குவது ஏன்? சில நீதிபதிகளின் செயல்பாடுகள்...

**“ஒன்றிய சட்ட அமைச்சரை பார்ப்பதற்காக ஒரு மாநில சட்ட அமைச்சர் சென்றிருந்தபோது அந்த அலுவலகத்தில் அவர் கண்ட காட்சியில் அவர் அதிர்ந்து போனாராம்! அமைச்சரின் பார்வையாளர் அறை முழுவதும் இருக்க இடமில்லாமல் உட்கார்ந்திருந்த அநேகர் உயர்நீதி மன்ற நீதிபதிகளாம்!”**

சமீபத்தில் தனக்கு முன் வாதாடிக்கொண் டிருக்கும் ஒரு பெண் வழக்கறி ஞரைப் பார்த்து ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி கேட்ட கேள்வி எவ்வளவு ஆபாசமானது! அதற்கு ஒரு கண்டனம் மட்டுமே போதுமானதா? அந்த நீதிபதி வருத்தம் தெரிவித்தால் சரியாகிவிடுமா? அவரை நீக்கும் அதிகாரம் தங்களுக்கு இல்லை என்பதை அறிவோம். அந்த நீதிபதி ஆறு மாதங்களுக்கு எந்த வழக்கையும் விசாரிக்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றத்தின் அத்தனை நீதிபதிகளும் ஒரு அமர்வில் அமர்ந்து ஒரு உத்தரவு போடமுடியாதா? தங்களது பள்ளி வாசல்களுக்குள் இஸ்லாமியர்கள் தொழுகை செய்து கொண்டிருக்கும்போது, பாசிச வெறி கொண்ட வன்முறையாளர் கூட்டம் உள்ளே புகுந்து “ஜெய்ஸ்ரீராம்” என்று கோஷம் போடும் போது, சமூக அமைதியைக் கெடுத்தார்கள் என்று அவர்கள்மீது காவல்துறை வழக்கு தொடர்ந்தால், “ஜெய்ஸ்ரீராம்” என்று முழங்குவது சமூக அமைதியைக் கெடுக்காது என்று கூறி, அவர்கள் மீதுபோட்ட வழக்கை ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி ரத்து செய்தாரே அப்படிப் பட்ட தீர்ப்புகளெல்லாம் இந்நாட்டின் சிறுபான்மை மக்களுக்கு சட்டத்தின் ஆட்சி மீதும், நீதி மன்றங்களின் மீதும் இருக்கின்ற நம்பிக்கையை குலைத்து விடாதா? இப்படி தீர்ப்பு எழுதுகின்றவர்களையும் நாங்கள் “நீதி நாயகம்” என்று எத்தனை நாட்கள் அழைக்க வேண்டும்.? இவைகளெல்லாம் ஓய்வு பெறப் போகும் உங்களுக்கான கேள்விகள் மட்டுமல்ல! உங்களை தொடர்ந்து உங்களது ஆசனத்தில் அமர இருக்கின்றவருக் கும், உச்ச நீதிமன்றத்தின்

அனைத்து நீதி அரசர்களுக்கும் வைக்கப்படும் கேள்விகள் மட்டுமல்ல. கோரிக்கைகளும் கூட!

**ஆர்எஸ்எஸ் வழக்கறிஞர் பிரிவு நிகழ்வுகளில்**

சமீப காலமாக, பாஜக மத்தியில் அதிகாரத்திற்கு வந்த பின்னர் ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் வழக்கறிஞர் பிரிவான அகில பாரதீய அதிவக்த பரிஷத் (Akhil Bharatiya Adhivakta Parishad - ABAP) அமைப்பின் ஆளுகையும் செல்வாக் கும் நீதித்துறையில் மிக அதிகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். தில்லியிலும், மாநில தலை நகர்களிலும் அடிக்கடி கூட்டப்படும் இந்த அமைப்பின் கூட்டங்களில் இந்நாள் மற்றும் மேனாள் உச்சநீதி மன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் கலந்துகொண்டு, இந்த அமைப்பின் உறுப்பினர்களுக்கு பாடம் எடுப்பதும், விவாதம் நடத்துவதும் வாடிக்கையாக நடக்கின்றன.

1992ஆம் ஆண்டு டத்தோபந்த் தெங்காடி எனும் ஆர்எஸ்எஸ் தலைவரால் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டு துவங்கப்பட்ட இந்த அமைப்பில் இன்று பதினைந்தாயிரம் உறுப்பினர்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆர்எஸ்எஸ் இயக்கத்தினர் தொடுக்கின்ற வழக்குகளையும், அவர்கள் மீது தொடுக்கப்படுகின்ற வழக்குகளையும் இந்த அமைப்பை சார்ந்த வழக்கறிஞர் கள்தாம் நடத்துகின்றனர். பாஜக ஆளும் மாநிலங்களிலும், ஒன்றிய அரசு நிர்வா கத்திலும் இந்த அமைப்பினர்தாம் அரசு தரப்பு வழக்கறிஞர்களாக பெரும்பாலும் நியமனம் செய்யப்படுகின்றனர். இன்று உச்சநீதி மன்றத்தில் இருக்கும் 33 நீதிபதிகளில் ஒன்பது பேர் இந்த அமைப்பின் நிகழ்ச்சிகளில் முக்கிய விருந்தி னராக கலந்துகொள்கிறார்கள். (பி. ஆர். கவாய், சூரிய காந்த், ஜே.கே.மகேஷ் வரி, பி.வி. நாகரத்னா, பங்கஜ் மித்தல், ராஜேஷ் பிண்டல், கே.வி. விஸ்வநாதன், உஜல் புயான், பி.பி. வராலே). மாநிலங்களில் இந்த அமைப்பினர் நடத்தும் நிகழ்ச்சிகளில் பல உயர்நீதிமன்ற நீதிபதிகள் அடிக்கடி கலந்துகொள்கின்றனர். சமீபத்தில் திண்டுக்கல்லில் இந்த அமைப்பினர் நடத்திய ஒரு நிகழ்ச்சியில் நமது உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரும் முக்கிய விருந்தினராக கலந்து கொண்டார்.

**பார்கவுன்சிலின் தலைவரும்**

இந்த அமைப்பை, தெங்காடியோடு சேர்ந்து உருவாக்கியவர்களின் பெயர்களைக்கேட்டால் ஆச்சரியமாக இருக்கும். மேனாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஈ.எஸ்.வெங்கட ராமையா (இவரது மகள் நாகரத்னா தற்போது உச்ச நீதிமன்ற நீதிபதி), மேனாள் உச்சநீதி மன்ற நீதிபதி பிஸி கன்னா (வரப்போகும் தலைமை நீதிபதியின் தந்தையின் சகோதரர்), மேனாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி உதய் லலித்தின் தந்தை உமேஷ் தலித், பஞ்சாப் ஹரியானா மாநிலத்தின் தலைமை நீதிபதியாக இருந்த ரமாஜாய்ஸ் என்று பல மேனாள் நீதி அர சர்கள் இதன் காப்பாளர்களாக செயல்பட்டு வருகின்றனர். இன்று இந்த அமைப்பை சார்ந்த பல வழக்கறிஞர்கள் பல உயர்நீதி மன்றங்களில் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்திய பார் கவுன்சிலின் தலைவர் மானன் மிஷ்ராவும் இந்த அமைப்பை சார்ந்தவரே. அரசியல் சட்டத்தை மாற்றாமல், தங்களுக்கு அனுசரணையாக செயல்படும் நீதித்துறையின் மூலமே தங்களது அடிப்படைக் கொள்கைகளை நிறை வேற்றிக்கொள்ள முடியும் என்று ஆர்எஸ்எஸ் உறுதியாக இருப்பதாக அவர்களோடு தொடர்பில் இருக்கின்றவர்கள் தெரிவிக்கின்றார்கள். ஒன்றிய சட்ட அமைச்சரை பார்ப்பதற்காக ஒரு மாநில சட்ட அமைச்சர் சென்றிருந்தபோது அந்த அலுவலகத்தில் அவர் கண்ட காட்சியில் அவர் அதிர்ந்து போனாராம்! அமைச்சரின் பார்வையாளர் அறை முழுவதும் இருக்க இடமில்லாமல் உட்கார்ந்திருந்த அநேகர் உயர்நீதி மன்ற நீதிபதிகளாம்! தங்களது பதவி மாறுதல்களுக்காகவும், பதவி உயர்வுக்காகவும் சட்ட அமைச்சரை சந்திக்க வந்திருப்பதாக அங்கிருந்த ஒருவர் சொன்னதாக சொன்னார். சுதந்திரம் பெற்று, ஜனநாயகம் கிடைத்து, நம்மை நாமே சட்டத்தின் ஆட்சி மூலம் ஆளும் அதிகாரம் பெற்று இன்னும் நூறு ஆண்டுகளைக் கூட நிறைவு செய்யவில்லை. அவைகளை தொலைத்துவிடுவோமோ என்று பயமாக இருக்கிறது! சாரி! மை லார்ட்ஸ்!

கட்டுரையாளர் : மேனாள் நாடாளுமன்ற,
சட்டமன்ற உறுப்பினர்.

நன்றி : தீக்கதிர் 3, November 2024



vaigarai velicham official



# கஷ்மீர் மக்களின் துயரமும் எதிர்ப்பும்?

**தமிழில் : குலாம் முஹம்மத்**

**சந்தோஷ் பாரதிய்யா**

கஷ்மீர் ஏரிகளில் உல்லாசப் படகுகளில் ஏறி பயணம் செய்து எதிர்வரும் சுகங்களைக் கொள்ளைக்கொள்ளும் நாள் மீண்டும் எப்போது வருமோ!

அங்குள்ள தோட்டங்கள், தண்மைத் தாவிடும் தளிர்ப்பொழில்களில் உலாவி உடன்வரும் உல்லாசத்தைச் சுவைக்கும் நாள் எந்நாளோ!

கஷ்மீரத்து மழலைகள் உள்ளம் மகிழ வெளியே உலாவி அன்புத்தடாகங்களில் மூழ்கித் திளைக்கும் நாள் எந்நாளோ!

தம்பதியரின் முதலிரவு உல்லாசத்தை உவகைக் கூட்டித் தந்திடும் உல்லாசபுரி கஷ்மீர் இனி களைகட்டி கம்பீரமாய் நிமிரும் நாள் எந்நாளோ!

இன்று கஷ்மீரின் நிலை இதுதான்:-

எந்தப்பக்கத்திலிருந்து குண்டு பொழியுமோ கொடுவாள் பாயுமோ என வினாடிகளைக் கணக்குப்பார்த்துக் கொண்டு நிலைகுலைந்து நிற்கின்றனர் மக்கள்.

இப்போது கஷ்மீரைப்பற்றி ஒரே ஒரு கவலைதான்! அதாவது நிலைமை இப்போது இருப்பதைப்போல் மோசமாகவே நீடிக்குமா? அல்லது இன்னும் (இதைவிட) மோசமாகுமா?

ஆனால், ஒரு விஷயத்தை எல்லோரும் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

இன்று கஷ்மீரிலிருக்கும் பதற்றமும் பரபரப்பும் பொதுவாகப் பேசப்படுவதைப் போல் மூன்றே மாதங்களில் உருவானதல்ல என்பதே! மூன்றே மாதங்களில் நிலைமை இவ்வளவு மோசமாகிடவும் முடியாது. கொழுந்து விட்டெரியும் இன்றைய கஷ்மீர் நிலவரங் களுக்கு ஒரு நாற்பதாண்டு கால பின்னணியே உண்டு.

இன்று சின்னா பின்னமாக ஆக்கப்பட்டி ருக்கும் கஷ்மீர் பள்ளத்தாக்கினை சீர் செய்திட நம்மால் இயன்றவற்றையெல்லாம் செய்திட வேண்டும் என்பது இன்றியமையாதது, அதைவிட இன்றியமையாதது, அங்கு நிலைமை இவ்வளவு மோசமாகிடும் அளவுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பதே! இதைச்

**அன்பார்ந்த வாசகர்களுக்கு...**

அல்லாஹுத்தஆலாவின் அளப்பெரும் கருணையினால் இன்றளவும் 45 ஆண்டு களாக தாஃவா களத்தில் நின்று வருகின் றோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்தப் பெரும் பயணத்தில் முறையாகப் பத்திரிகைகளைத் தொடருவதற்கு முன்பல வெளியீடுகளை வெளியிட்டு வந்தோம்.

அவற்றுள் தலையாயது ஈத் சிறப்பிதழ்கள். வெளிவந்த பல ஈத் சிறப்பிதழ்களில் மக்கள் கவனத்தைப் பெரிதாகக் கவர்ந்த 1994ஆம் ஆண்டு நாங்கள் வெளியிட்ட ஈத் சிறப்பிதழ்.

இந்த ஈத் சிறப்பிதழில் சந்தோஷ் பாரதீயா என்ற அன்றைய பி.ஜே.பி. அனுதாபிகளில் ஒருவர், சிறந்த பத்திரிகை யாளர் எனப் போற்றப்படுபவர். 1993க்குள் வெகு நாள்களுக்கு முன்னர் Illustrated Weekly of India (188-13,Nov.1993) என்ற பத்திரிகையில் எழுதிய ஆங்கில கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கே தந்திருக்கின்றோம். கஷ்மீர் மக்கள் ஏன் போராடுகின்றார்கள்?

கஷ்மீர் மக்களின் அவலங்களையும், அவர்களின் போராட்டங்களின் அடிப்படை காரணங்களையும் பட்டியலிடுகின்றார்.

இந்தக் கட்டுரை அன்றைய கஷ்மீர் நிலையை மட்டுமல்ல, இன்றைய நிலை மைகளின் முன்னுரைபோல் அமைவதால் அதனை இங்கே வைகறை வாசகர்களுக்குத் தருகின்றோம்.

படியுங்கள், பரப்புங்கள்... உண்மையை உலகம் அறியட்டும், உணரட்டும். இனிவரும் அமரன் படங்களின் அடிப்படையாக அமையட்டும். **MGM**

செய்யவில்லை என்றால், கடந்த பல ஆண்டு களாக கஷ்மீர் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை நம்மால் தெரிந்துகொள்ளவே இயலாது.

அதேபோல் இந்த அநீதிகளை அந்த மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டதற்கு யார் யார் காரணம் என்பதையும் கண்டுபிடித்தாக வேண்டும்.

இவற்றையெல்லாம் தெரிந்துகொள்ள வில்லையென்றால் கஷ்மீர் பள்ளத்தாக்கு ஏன் பற்றி எரிகின்றது என்பதையும், அதனை அணைப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ள இயலாது.

கஷ்மீரின் தலைநகராகிய ஸ்ரீநகரில் இருக்கும் இன்ஜினீரிங் கல்லூரி ஆசியாவிலேயே மிகப்பெரிய இன்ஜினீரிங் கல்லூரி! உண்மைதான்.

இந்தக் கல்லூரியில் இடம் கிடைக்க வேண்டும் என்றால். முதல் மாணவன் என்ற தகுதி மட்டும் போதாது; குறைந்தது ஐந்து லட்ச ரூபாயாவது மூட்டை கட்டி வைத்திடும் தகுதியும் வேண்டும்.

கஷ்மீர் பள்ளத்தாக்கில் வாழ்பவர்களில் 95% முஸ்லிம்கள். இவர்களுக்கு ஏன் இந்த இன்ஜினிரிங் கல்லூரிகளில் இடம்கொடுப்பதே இல்லை? இதே நிலைதான் ஸ்ரீநகரிலிருக்கும் மருத்துவக் கல்லூரியிலும்.

இந்த மருத்துவக் கல்லூரியிலும், இன்ஜினீரிங் கல்லூரியிலும் கடந்த 10 முதல் 15 ஆண்டுகளுக்கிடையில் பயின்று பட்டம் பெற்றவர்களில் எத்தனைபேர் கஷ்மீரிகள்?

இதில் யாராவது உண்மையைக் கண்டறிந்து நாட்டுக்கு அறிவிக்க வேண்டும்.

கசப்பான அந்த உண்மை என்னவெனில் இன்றுவரை கஷ்மீர் இன்ஜினீரிங் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் இடம்பிடித்துக் கொண்டவர்கள், பயின்று பட்டம் பெற்ற வர்கள், அத்தனைபேரும் கஷ்மீருக்கு வெளியே உள்ளவர்களே!

இது பட்டவர்த்தனமாக அந்த மக்களுக்கு இழைத்த பாதகமல்லவா?

சுற்றுலாதான் கஷ்மீர் மக்கள் வயிறு பிழைக்க உதவும் முக்கியமான தொழில்.

ஆனால் இதனை பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் அனைத்தும் இன்றுவரை அந்த மக்களுக்கு மறுக்கப்பட்டே வந்திருக்கின்றன. சுற்றுலா காலங்களைப் பயன்படுத்தி தங்கள் வயிற்றையும் சற்றுக் கழுவலாம் என எண்ணி உல்லாசப்பயணிகளை ஏற்றிச் செல்லும்


vaigarai velicham official




ஊர்திகளை வாங்கிட அவர்கள் அரசுக்கோ அங்கிருக்கும் வங்கிகளுக்கோ மனுப் போட்டால், அவை கவனிக்கப்படுவதே இல்லை.

இதனால் அவர்கள் ஓட்டை உடைசலான பழைய ஊர்திகளையே பயன்படுத்திட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். வரும் உல்லாசப் பயணிகள் எவரும் இந்தப் புராதன ஊர்திகளை அண்டுவதே இல்லை.

கஷ்மீர் இளைஞர்களில் யாராவது சிறு தொழில்களைத் துவங்கிட முயற்சி செய்தால் அங்கேயும் அவர்களுக்கு அதிரடிதான். சாதாரணமாக இரண்டு மாதங்களில் வழங்கப்படும் அனுமதிகள் கஷ்மீரிகள் என்றால் குறையாமல் இரண்டு வருடங்கள் கழித்துத்தான் வழங்கப்படுகின்றன.

தொழில்களைத் துவங்குவதற்கு இடங்களும் கஷ்மீரிகளுக்கு அவ்வளவு எளிதாக ஒதுக்கப்படுவதில்லை.

கஷ்மீரில் ஆட்டோ, டாக்சி (Taxi) இவற்றை ஓட்டுபவர்கள் பட்டம் பெற்றவர்கள்தான். காரணம் இவர்களுக்கு வேறு பணிகள் தரப்படுவதில்லை. இதிலும் சாலை அனுமதிகள் (Road Permits) அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

20,000 ரூபாயை விட்டெறியும் வெளியாட்களுக்கே இவை தரப்படுகின்றன. இப்படித் திரும்பும் திசையெல்லாம் அவர்கள் விரக்தியின் விளிம்பிற்கே ஓட்டப்படுகின்றார்கள்.

அவர்களுக்கு அவர்களின் சொந்த மண்ணிலேயே உழைத்து வாழும் உரிமை மறுக்கப்பட்டுவிட்டது.

அவர்கள் வங்கிகளை அணுகினால் அந்த வங்கிகள் அவர்களின் மனுக்களை ஏறெடுத்தும் பார்ப்பதே இல்லை. குறையாமல் 10,000 ரூபாயை மூட்டை கட்டி வங்கி அதிகாரிகளின் முன்னால் வைத்தால்தான் அதிகாரிகளின் கடைக்கண் பார்வை அந்த மனுக்களின் பக்கம் திரும்பும்.

கடந்த 10 அல்லது 15 ஆண்டுகளில் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எத்தனை கஷ்மீரிகளுக்கு தொழில் துவங்க நிதி உதவி செய்திருக்கின்றன?

இந்த உண்மையை - இன்று கஷ்மீரில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கண்டு கண்ணீர் வடிப்பதாக காட்டிக் கொள்வோர் கண்டு பிடித்துச் சொல்லட்டும்.

கஷ்மீர் மக்கள் ஜம்மு-கஷ்மீர் வங்கிகளை மட்டுமே நம்புகின்றார்கள்; தேசிய வங்கிகளை நம்புவதே இல்லை.

இவையெல்லாம் கிடக்கட்டும்;

கடந்த 10 அல்லது 15 ஆண்டுகளில் காஷ்மீரில் சாலைகள் போடுவதற்கு அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு? ஒதுக்கிய தொகையைக் கொண்டுபோட்ட சாலைகள் எத்தனை?

சாலைகள் போடுவதற்கென ஒதுக்கிய தொகை கஜானாவைவிட்டு வெளியே வந்தது என்னவோ உண்மைதான்.

ஆனால் -

அந்தத் தொகை யாருடைய கைகளிலோ சிக்கி எங்கேயோ பதுங்கிக் கொண்டது. இந்த முழுத் தொகையையும் விழுங்கியது யார்?

அமைச்சர்களா? அதிகாரிகளா? இவற்றை யெல்லாம் நாம் இப்போது கணக்குப் பார்த்தாக வேண்டும், கஷ்மீர் பிரச்சனைக்கு நாம் உண்மை யிலேயே தீர்வு தேடுபவர்களாக இருந்தால்,

பஞ்சாபில் வாழ்பவர்கள் தீண்டவே மாட்டோம் என வெறுத்தொதுக்கிய அரிசி யையும் பருப்பையும் கஷ்மீர் மக்கள் தலையில் கட்ட எல்லா முயற்சிகளையும் செய்தோம்.

மனிதர்கள் தொடவே கூசும் முடை நாற்றம் வீசும் அரிசியை அந்த மக்களுக்கு பங்கிட்டுத் தருவதிலாவது நியாயம்செய்தோமா? இல்லை.

இந்தக் கொடுமையை அங்கே கோலோச்ச விட்டதற்கு என்ன காரணம்?

இந்தக் கேள்வியை இன்று கஷ்மீர் பிரச் சனையில் முந்திக்கொண்டு முறையீடுகளைக் கொண்டுவருபவர்கள் எப்போதாவது கேட்ட துண்டா?

பண்டித நேரு, ஷேக் அப்துல்லாஹ் இவர்களின் காலங்களிலிருந்த அதே இடிந்த சுவர்கள்தானே இன்றும் அங்கே கல்லூரிக் கட்டிடங்கள் என்ற பெயரை சுமந்து நிற்கின்றன.

ஏன் நாம் அந்த மாநிலத்தில் புதிய கல்லூரி களை ஆரம்பிப்பதில்லை?

கஷ்மீரிலிருக்கும் பள்ளிகள் வாராந்தர விடுமுறை அறிவிப்பதே இல்லை. மழை பெய்தால் விடுமுறை தானாக வந்துவிடும்.

காரணம், அங்குள்ள பள்ளிகள் பலவற்றுக்கு மேற்கூரையே கிடையாது.

அடிப்படைக் கல்வியும், ஆரம்பக் கல்வியும் அந்த மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்தனவே, ஏன்? ஏன்?? ஏன்???

கஷ்மீரில் பல திட்டங்கள் அடிக்கல் நாட்டப்பட்ட நிலையிலேயே நிற்கின்றன.

நாட்டப்பட்டு ஆங்காங்கே மறக்கப்பட்டு விட்ட அடிக்கல்கள், அங்கெல்லாம் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும் என்பதையும், அவை அந்த மக்களுக்கு மறுக்




vaigarai velicham official

கப்பட்டுக்கொண்டே வருகின்றன என்பதையும் நினைவுபடுத்திக் கொண்டே நிற்கின்றன.

அந்தக் கற்களில் பொறிக்கப்பட்டிருக்கும் தேதிகள் கஷ்மீர் மக்கள் நீண்ட நெடியதொரு காலம் ஏமாற்றப்பட்டு வந்திருக்கின்றார்கள் என்பதைத் துல்லியமாகச் சுட்டிக் காட்டு கின்றன.

கஷ்மீர் மக்களை இப்படியெல்லாம் ஏமாற்றி அவர்களை தொடர்ந்து துன்பங்களிலேயே துவள விட்டவர்கள்தாம் இன்று கஷ்மீரில் நடக்கும் அத்தனை நிகழ்ச்சிகளுக்கும் பொறுப்பு.

மேலே குறிப்பிடப்பட்டவையெல்லாம் மேலெழுந்தவாரியாக எடுத்துக்காட்டப்பட்ட அநீதிகளே!

ஆழமாக அகழ்ந்து பார்த்தால் அந்த மக்கள் மீது பாய்ச்சப்பட்ட எத்தனையோ அநீதிகள் அம்பலமாகும்.

இவற்றிலெல்லாமிருந்து மிகப்பெரியதொரு உண்மை வெளிச்சத்திற்கு வருகின்றது.

இன்று கஷ்மீரில் நடந்து கொண்டிருப்பவை கடந்த 40 ஆண்டுகளாக இழைக்கப்பட்ட அநீதிகளின் விளைவுதான் என்பதே அந்தப் பேருண்மை!

கஷ்மீரில் குடியரசு தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. ஆனால் அந்த மாநிலத்தைச் சார்ந்த எவரும் அதில் கலந்து கொள்ளவில்லை.

விரக்திக்கும், கோபத்திற்கும் ஆளாகும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட அந்த மக்கள் ரேஷன் கடைகளுக்கு எப்போதும் வருவதே இல்லை, நாம் அளந்து கொட்டும் அழுகிய அரிசியையும் புழுத்த பருப்பையும் அள்ளிக் கொண்டு போக.

ஆகவே அவர்கள் இந்தியன் என்ற எழுத்துக் களை எங்கே கண்டாலும் அதனை உடனே மாய்த்து விடுகின்றார்கள். அலுவலகங்களில் பணிபுரியும் உயர்மட்ட அதிகாரியானாலும் சரி கடைநிலை ஊழியனனாலும் சரி அத்தனை பேரும் சுதந்திரம் வேண்டும் என்றே பேசு கின்றார்கள்.

அதிலும் அவர்களுக்கு வாக்களிக்கப் படாதவற்றை அவர்கள் கேட்கவில்லை.

அவர்கள் கேட்பதெல்லாம் பண்டித ஜவஹர்லால் நேரு வாக்களித்த மக்கள் விருப் பத்தைக் கணிக்கும் வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்பதே !

கஷ்மீர் மக்களின் ஆதங்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

ஆண்டாண்டு காலமாக நாம் மேற்கொண்ட அணுகுமுறை - கஷ்மீரில் எங்கும் வியாபித்து நின்ற ஊழல் - இவற்றால் அங்குள்ள ஏழை களுக்கும் சராசரி மனிதர்களுக்கும் உணவு தானியங்களிலிருந்து எதுவுமே கிடைக்காது என்ற நிலை உருவானது. அந்த மக்களுக்கு அனைத்தும் மறுக்கப்பட்டன.

விரக்தியின் விளிம்பில் அந்த மக்கள் நின்று கொண்டிருந்தபோது ஒரு நாள்.... ஓர் இளைஞன் நீட்டிய துப்பாக்கியோடு அதிகாரிகள் முன் தோன்றினான், "முறையாக உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட வில்லையென்றால்..... சுட்டுவிடுவேன்" என மிரட்டினான்...'

ஏழை எளிய மக்களிலிருந்து எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் என்ற நிலை வந்தது.

காலங்காலமாக மக்களின் அழு குரல்கள், கோஷங்கள், உண்ணாவிரத அறப்போராட் டங்கள் ஆகியவை சாதிக் காத்தை ஒரு இளைஞனின் கைத்துப்பாக்கி சாதித்தது.

ஆகவே துப்பாக்கி ஏந்திய வாலிபர்கள் ஏழை எளிய மக்களின் 'இரட்சகர்களாகத்' தோற்றம் தந்தார்கள். அன்று முதல் இந்தத் துப்பாக்கித் தூக்கிகள் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களின் தோழர்கள் ஆனார்கள். ஊக்கமும் உற்சாகமும் பெற்றார்கள்.

இதற்கான முழுப் பொறுப்பும் முன்னாள் அரசு பரிபாலனம் செய்த காங்கிரஸ் கட்சியை யும், தேசிய காங்கிரஸ் கட்சியையுமே சாரும்.

இந்த ஆட்சியாளர்கள்,

ஒருபுறம் கஷ்மீரின் வளங்களையெல்லாம் எந்தத் தங்குதடையுமின்றி உறிஞ்சினார்கள். மறுபுறம் கஷ்மீர் மக்களை எவ்வளவு மோசமாக நடத்த முடியுமோ அவ்வளவு மோசமாக நடத்தினார்கள். எந்த அளவுக்கெனில் அந்த மக்கள் ஜனநாயக முறையில் முழுமையாக

நம்பிக்கை இழக்கும் அளவிற்கு மோசமாக நடத்தினார்கள். அடிமைகளைவிட அசிங்கமாக நடத்தினார்கள்.

இதனால்தான் அந்த மக்கள் இந்தியாவின் பிடியிலிருந்து தங்களுக்கு முழுமையான சுதந்திரம் வேண்டும் என சிந்திக்கவும் செயல்படவும் ஆரம்பித்தார்கள்,

முந்தைய ஆட்சியாளர்கள் இன்னொரு கொடிய குற்றத்தையும் செய்தார்கள்.

அது, கஷ்மீர் மக்கள் எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்ற செய்தியை இந்த நாட்டின், இதர பகுதியில் வாழ்ந்திடும் மக்கள் அறிந்திட முடியாமல் செய்திகளை இருட்டடிப்புச் செய்தார்கள். அத்துடன் இன்னொரு பாதகத்தையும் செய்தார்கள்.

தங்களது கொடுமைகளை மற்றவர்கள் கண்களிலிருந்து மறைத்திட கஷ்மீர் பிரச்னையை ஜக்மோகன் சம்பந்தப்பட்ட பிரச்னை என்றும், அரசியல் நிர்ணயச் சட்டத் தின் பிரிவு '370' சம்பந்தப்பட்ட பிரச்னை என்றும் திசை திருப்பினார்கள். அரசியல் நிர்ணயச்சட்டத்தின் பிரிவு 370ஐ எடுத்து விட்டால் மட்டும் அங்கு என்ன வாழ்ந்துவிடப் போகின்றது.

அல்லது,

ஜக்மோகனை விரட்டிவிட்டு பாரூக் அப்துல்லாஹ்வை அங்கே மீண்டும் கொண்டு வந்துவிட்டால் மட்டும் கஷ்மீர் மக்கள் எந்த அளவிற்கு உறிஞ்சப்பட்டார்கள் என்ற உண்மை தான் வெளியே வந்துவிடப் போகின்றதா?

பாரூக் அப்துல்லாஹ் கஷ்மீரின் நிர்வா கத்தை - கஷ்மீர் மக்கள் பிரிந்துபோக வேண்டும் என்று எண்ணுகின்ற அளவுக்கு கொடுமைகளைக் கட்டவிழ்த்துவிட்ட அதிகாரிகளின் கைகளில் அல்லவா ஒப்படைத்திருந்தார்.

ஒரு சராசரி கஷ்மீர் குடிமகன் ஒருபோதும் பாகிஸ்தான் பக்கம் தலை சாய்த்ததில்லை.

நாட்டின் இதர பகுதியில் 'பாகிஸ்தான் - பாகிஸ்தான்' என்ற பீதியைப் பரப்பிட விரும்பு பவர்களே பாகிஸ்தானுக்காக வாதாடுபவர்கள்.

கஷ்மீர் மக்களுக்குத் மக்களுக்குத் தொடர்ந்து உரிமைகளை மறுக்க வேண்டும் அவர்களைக் காலாகாலமும் உறிஞ்ச வேண்டும், அதேநேரத்தில் நாட்டின் இதர பகுதிகளில் பாகிஸ்தான் என்ற பீதியை பரப்ப வேண்டும் என்ற சதி செய்து சதுரங்கம் ஆடுபவர்களே பட்டவர்த்தனமான பிரிவினைவாதிகள்.

கஷ்மீர் பிரச்னைக்கு உண்மையிலேயே நாம் தீர்வு தேடுவதாக இருந்தால்...

நேர்மையோடும் நெஞ்சுரத்தோடும், கஷ்மீரில் நாம் தொடர்ந்து இழைத்துவந்த அநீதிகளை ஒப்புக்கொள்ள வேண்டும்.

கஷ்மீர் மக்கள் ஜக்மோகனை வேண்டாம் என்று சொன்னால் நாம் அவரை அவர்கள் மீது திணித்திடக்கூடாது. அவரைத் திரும்ப அழைத் துக்கொள்ள வேண்டும்.

கஷ்மீர் மக்கள் விரும்பாததை ஒருபோதும் அவர்கள் மீது திணித்திடக் கூடாது.

அதேபோல்.

கஷ்மீர் பிரச்சினையை இந்து - முஸ்லிம் பிரச்னை எனக்கூறி அதற்கு வகுப்புச் சாயத்தைப் பூசி பரிகாரம் தேடிட முயன்றால் அங்கே நாம் தோல்வி ஒன்றைத்தவிர வேறு எதையும் சந்திக்க மாட்டோம்.

இந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினை யைத் தீர்த்திட முனைந்தததுதான் காங்கிரஸ் கட்சியும் தேசிய மாநாட்டுக் கட்சியும் செய்த மிகப்பெரிய தவறாகும்.

கஷ்மீர் விடுதலை அடைய வேண்டும் எனப் போராடி வருகின்ற பலரோடு நான் நேரடியாகப் பேசினேன். அவர்கள் விடுதலை உணர்வால் உந்தப்பட்டுக் களத்திலே நிற்கின் றார்கள்.

அவர்களிடம் நாம் ராஜீவ் காந்தியின் கொடுங்கோல் ஆட்சிக்கும் V.P. சிங் அவர்களின் ஆட்சிக்கும் இடையேயுள்ள வேற்றுமைகளைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

பீகார், ஒரிசா இன்னும் மலையோரப் பகுதிகள் இங்கெல்லாம் இழைக்கப்பட்ட அதே அநீதிகள்தாம் கஷ்மீரிலும் துர்பாக்கியமாக தொரு சூழ்நிலையில் திணிக்கப்பட்டுவிட்டன


vaigarai velicham official

என்பதை அவர்களுக்கு உணர்த்தியாக வேண்டும்.

இந்தியத் திருநாட்டின் குடிமக்களாகிய நாமனைவரும் இந்த நாட்டின் முன்னேற்றத்தில் எள்ளளவும் அக்கறை இல்லாத ஆட்சியாளர்களின் அடிமைகளாக இருந்துவிட்டோம் என்பதை கஷ்மீர்வாழ் மக்களுக்கு எடுத்து சொல்லியாக வேண்டும்.

சென்றுபோன அந்த ஆட்சியாளர்களெல்லாம் இந்த நாட்டின் முன்னேற்றத்தை விட இந்த நாட்டைச் சுரண்டி வேற்று நாடுகளில் தங்கள் பெயரில் குவிப்பதையல்லவா ஒரே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தார்கள்.

கஷ்மீரில் மட்டுமல்லாமல் நாமெல்லோரும் முன்னேற்றத்தின் பாதையில் ஒட்டு மொத்தமாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதை கஷ்மீர் மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

கஷ்மீரின் நல்வாழ்வுக்கு நாமனைவரும் அமர்ந்து திட்டங்களைத் தீட்டியாக வேண்டும். தீட்டப்படும் திட்டங்களை உடனேயே செயல்படுத்தியாக வேண்டும்.

இதனை நாம் தாமதப்படுத்தினால் அந்த மக்களிடம் இன்னும் அதிகமாக தவறான எண்ணங்கள் வேரூன்றும்.

கடுமையான நடவடிக்கைகளின் மூலம் நாம் அந்த மக்களை வெற்றி கொண்டிட இயலாது. அந்த மக்களின் உள்ளங்களை நாம் அன்பால் வென்றிட வேண்டும்.

வறுமையும் வேலை இல்லாத்திண்டாட்டமும் ஒரு மாநிலத்தில் கோரத்தாண்டவம் ஆடும்போது அரசு அங்கே இருப்பவர்களை உறிஞ்சிக் கொண்டிருந்தால் கஷ்மீரில் அல்ல, எந்த இடமாக இருந்தாலும் இன்று கஷ்மீரில் நடப்பவை தவறாமல் நடக்கும்.


கஷ்மீர் குறித்து இந்திய நாடாளு மன்றத்தில் எழுந்த விவாதங்களில் கஷ்மீர் மக்களின் பிரச்சினைகள் எந்த அளவிற்கு விவாதிக்கப்பட்டன என்பதை கஷ்மீர் மக்கள் நன்றாக அறிவார்கள். கஷ்மீர் பத்திரிக்கைகளை வைத்துப் பார்த்திடும்போது நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அத்தனை விவாதங்களும் கஷ்மீர் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி இருக்கின்றன என்றே தெரிய வருகின்றன.

தேசிய மாநாட்டுக் கட்சியும், காங்கிரஸ் கட்சியும், கஷ்மீரின் வளர்ச்சியை விவாதிப்பதற்குபதிலாக கஷ்மீர் பிரச்சினை ஜக்மோகன் மற்றும் அரசியல் நிர்ணயச்சட்டத்தின் பிரிவு 370 ஆகியவை பற்றியதுதான் என்றே விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

இன்னும் காலம் கைவிட்டுடுப்போகவில்லை என்பதை எல்லோரும் உணர்ந்தால் நல்லது நடக்கும்.

Courtesy: Illustrated Weekly.


**கஷ்மீர் மக்களின்**
**இன்றைய அவலங்களை**
**அறிந்திட படியுங்கள்...**
**கஷ்மீரின் பாதி விதவைகள்..**
**வேர்கள் பதிப்பகம்..**




**விலை**
**ரூ.70/-**

கிடைக்குமிடம்

**வேர்கள் பதிப்பகம்**
மண்ணடி, சென்னை – 600 001.
**பேசி : 8148129887, 74012 13394**



## நெல்சன் மண்டேலா பேரன்

# மண்ட்லா மண்டேலா

## பிரிட்டனுக்குச் செல்ல விசா மறுப்பு...

## பாலஸ்தீனுக்கு ஆதரவு தந்ததால்

**இன்றைக்கு** பாலஸ்தீனில் நடக்கின்ற கொடுமைகளையும், கொலைகளையும் நன்றாகப் புரிந்துகொண்டவர்கள் மேலை நாட்டவர்கள் என்றால் அது மிகையல்ல. இந்த விழிப்புணர்வும், அதனடிப்படையில் உலகெங்கும் எழும் போராட்டங்களும், நமது இஸ்லாமிய ஊடகங்களின் உபயம்.

ஆனால் மேலை நாடுகள் யோனிச தீவிர வாதத்தையும், அதற்கு தாங்கள் அள்ளிக் கொட்டும் பணத்தையும் ஆயுதங்கள் மக்கள் அறிந்திடுவதையும், அதை எதிர்ப்பதையும் விரும்பவில்லை. பாலஸ்தீன மக்களுக்கு ஆதர வாக எழும் போராட்டங்களை அடக்க, அடாத சட்டங்களை ஏற்றியுள்ளார்கள். குறிப்பாக ஏகாதிபத்தியன் தோற்றுவாய் ஆங்கில நாடு. அதாவது பிரிட்டன் சட்டங்களை இயற்றி பாலஸ்தீன ஆதரவை நசுக்கி வருகின்றது.

*27.10.2024*இல் லண்டனின் LEED என்ற பகுதியில் பிரிட்டன் நாட்டு குடிமக்கள் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும், இஸ்ரேலின் படுகொலைகளைக் கண்டித்தும் ஒரு பெரும் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்த மாநாட்டில், கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிட தென்ஆப்பிரிக்காவின் முதல் கறுப்பு ஜனாதிபதி அல்லது ஆட்சியாளர் நெல்சன் மண்டேலாவின் பேரன் மண்ட்லா மண்டே லாவை அழைத்திருந்தார்கள்.

அவரும் வருவதாக ஒத்துக்கொண்டார். சாதாரணமாக தென் ஆப்பிரிக்கர்கள் லண்டன் வருவதற்கு விசா-இங்கே ஆங்கில நாட்டின் அனுமதி தேவையில்லை. ஆனால் மண்ட்லா மண்டேலா புறப்பட தயாராக இருந்த நிலையில் ஆங்கில நாட்டின் வெளிவிவகாரத்துறையில் அவருக்கோர் செய்தி. நீங்கள் இப்போது ஆங்கில நாட்டில் அனுமதிக்கப்பட மாட்டீர்கள். காரணம்

*1.* நீங்கள், உங்கள் 'X' பதிவுகளில் ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ் போராளிகளை ஆதரித்து வருகின்றீர்கள். எங்களைப் பொறுத்தவரை இது தீவிரவாதத்தை ஆதரிப்பதாகும்.

*2.* அதேபோல், நீங்கள் இஸ்ரேலைத் தொடர்ந்து கண்டித்து வருகின்றீர்கள். இதுவும் எங்களுக்கு ஏற்புடையதன்று.


vaigarai velicham official

*3.* இப்போதைய சூழ்நிலையில் நீங்கள் எங்கள் நாட்டில் - பிரிட்டனில் இருப்பது Not conductive to public good.

*4.* நீங்கள் ஹமாஸ்-இன் தலைவர் இஸ்மாயில் ஹனிய்யாவின் கொலையை கடுமையாகக் கண்டித்துள்ளீர்கள். அக்டோபர்-7, 2023 தாக்குதலை போற்றியுள்ளீர்கள்.


"As such your presence in the UK is consi dered to pose a threat to UK society and it would cause tensions amongst UK Jewish community it is in the interest of the community to refuse your visa. to protect public safety and prevent disorder of crime in the UK"

அதாவது, சுருக்கமாக, நீங்கள் பிரிட்டன் நாட்டில் இருப்பது யூத சமுதாயத்தினரிடையே பதற்றத்தை உருவாக்கும். அவர்களின் நலன் கருதி உங்களுக்கு பிரிட்டனில் நுழையும் அனுமதி மறுக்கப்படுகின்றது. நீங்கள் எங்கள் நாட்டில் இருந்தால் வன்முறைகள் நிகழும்.

பிரிட்டனின் இந்தக் கடிதம் அக்டோபர் 21ஆம் நாள் மண்டலா மண்டேலாவின் கையில் கிடைத்தது. இப்படி விசா அனுமதி மறுக்கப்பட்டுவிட்டதால், நான் பாலஸ்தீன மக்களை ஆதரிப்பதையோ, ஹமாஸ்-ஐயும் ஹிஸ்புல்லாவையும் ஆதரிப்பதையோ நிறுத்தப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

"We can never be silenced and we will never let the refusal of visa prevent US for standing for justice, Peace and Equality. we will continue to raise our voice against unjust occupation genocide and ethnic cleansing of gaza and all of occupied palestine sponsored by US and UK"

அதாவது, ஒரு விசா மறுப்பால் நாம், நீதி, அமைதி, சமத்துவம் ஆகியவற்றிற்காக குரல் கொடுப்பதை நிறுத்தி விடமாட்டோம். நாம், பாலஸ்தீனில் நடக்கும் ஆக்கிரமிப்பு, கூட்டுப் படுகொலை, இன அழிப்பு ஆகியவற்றிற்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுப்போம். இந்த அநீதிக்குத் துணை நிற்கும் பிரிட்டன் வகை யறாக்களையும் எதிர்ப்போம். DC.26-10-2024


நூலைப்பெற


போன்:
7401213394
7358278146
8148129887

விலை
ரூ.50/-

முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழிகாட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழிகாட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது. (ஆதாரம் *The Muslim of India. A Documentary Record by A.G. Noorani P.157-158)*

- நூலிலிருந்து


# திருத்தம்...


நீதியரசர் எம்.எம். இஸ்மாயில்

சென்ற இதழில் இஸ்லாமும் இந்திய சமயங்களும் எனும் கட்டுரையில் இடம்பெற வேண்டிய நீதியரசர் எம்.எம். இஸ்மாயில் அவர்களுடைய புகைப்படத்திற்கு பதிலாக முனைவர் க.அப்துல் கபூர் அவர்களுடைய புகைப்படம் இடம்பெற்றுவிட்டது, வருந்துகிறோம்.

இந்த தவறை சுட்டிக்காட்டிய ஜமால் முஹம்மது கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் பெரோஸ்கான் அவர்களுக்கும், IUML தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மைதீன் அவர்களுக்கும், எழுத்தாளர் செ.திவான் அவர்களுக்கும், எழுத்தாளர் குளச்சல் கரீம் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நீதியரசர் எம்.எம். இஸ்மாயில் அவர்களுடைய புகைப்படத்தை அனுப்பித் தந்த ஜமால் முஹம்மது கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் அவர் களுக்கு நன்றி!

இவண், **ஆசிரியர், வைகறை வெளிச்சம்**

ஆங்கிலம் : **JOHN FEFFER** தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்

*அன்பார்ந்த வாசகர்களே!*

**இஸ்லாமியஃபோபியா** எப்படி வளர்ந்தது, இன்றைக்கு 50,000க்கும் மேற்பட்டவர்கள், பாலஸ்தீனில் காஸா என்ற குறுகிய நிலப்பரப்பில் ஏன் கொலை செய்யப்படுகின்றார்கள்? இந்த வெறுப்பும் கோபமும் எத்தனைக் காலமாக ஊட்டி வளர்க்கப்படுகின்றன என்பதையெல் லாம் வரலாற்றுப் பின்னணியுடன் விளக்கு கின்றார் ஜான் பெஃபர் அவர்கள்.

வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் என்பதை விட, வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொண்டு, பெண்களையும், குழந்தைகளையும் கொலை செய்கின்றார்கள். விழும் ஒவ்வொரு பிணமும் அமெரிக்காவின் ஆயுதங்களாலும், அமெரிக்கா அள்ளி வீசும் டாலர்களாலும்தான் நடக்கின்றன. எந்தக் கொள்கையின் கீழ் இப்படிப் பெண்களும், குழந்தைகளும் கொலை செய்யப்படுகின் றார்கள் என்பதையெல்லாம் விளக்கிச் சொல்லும் வரலாற்று அடையாளம் இந்த சிலுவைப் போர் 2.0 என்ற நூல்.


ஆக இந்த வரலாற்றைத் தெரிந்துகொள்வது இன்றைய நிகழ்வுகளின் முழுப் பின்னணியும் புரிந்துகொள்ள உதவும். இன்ஷா அல்லாஹ்.

படியுங்கள்...

**ஜான் பெஃபர்**

அமெரிக்காவின் வலதுசாரி தீவிரவாதிகள், வியட்னாம் போரில் பெற்ற தோல்வியால் துவண்டுபோனார்கள். அந்தத் தோல்வியையும், துயரங்களையும் அவர்கள் மறைக்க அதிக நாள்கள் தேவைப்பட்டன.

அவர்களைத் தேற்றிட இஸ்லாமோ ஃபோபியா பெரிய அளவில் அவர்களிடையே போதிக்கப்பட்டன.







Vietnam War



vaigarai velicham official

புதிய ஆபத்து! புதிய எதிரி என்றெல்லாம் ஒருவித பீதியை உருவாக்கிடுவது, அமெரிக்கர்களுக்குக் கைவந்தக் கலை. ஆகவே கம்யூனிச வியட்னாமிடம் பெற்ற அடியை - இஸ்லாம் என்ற புதிய எதிரியை முன்னிறுத்தி மீட்க முயன்றார்கள். இதற்காக அவர்கள் அள்ளிக் கொட்டிய பணம், மனித ஆற்றல் இவற்றிற்கு அளவே இல்லை. (இதனை நாம் முந்திய தொடர்களில் மிகவும் விரிவாகவே குறிப்பிட்டுள்ளோம்)




எல்லா முஸ்லிம்களையும், முஸ்லிம் நாடுகளையும் ஒட்டுமொத்தமாக தீவிரவாதிகள் inherently untrustworthy human beings அடிப்படையிலேயே நம்ப முடியாதவர்கள் என்று பிரச்சாரம் செய்தார்கள். இதனைப் பிரச்சாரம் செய்திட ஏராளமான எழுத்தாளர்களும், படைப்பாளர்களும், வரிந்து கட்டிக்கொண்டு வந்தார்கள். அவர்களிடம் இதெல்லாம் பழையப் பொய்கள். இவற்றிற்கு என்ன ஆதாரம் எனக் கேட்டால் ஓர் புதிய பிதற்றலை அவிழ்த்துவிட்டார்கள். அது 'Absence Evidence itself is evidence' அதாவது ஆதாரம் இல்லை என்பதே ஆதாரம்தான் என்றார்கள்.

அருண் குன்டானானி Arun Kundnani என்பவர் முஸ்லிம்களில் "Moderate" மிதமானவர்கள் என்று எவருமில்லை எல்லோரும் தீவிரவாதிகள்தாம் என்கின்றார். இதில் அவர் மிகவும் பிடிவாதமாக இருக்கின்றார்கள்.

இவர்களிடம் இஸ்லாமியக் கொள்கைக் கோட்பாடுகளில் ஜிஹாத்-உல் அக்பர் பெரிய ஜிஹாத் என்றும், ஜிஹாத்-உல் அஸ்கர், சிறிய ஜிஹாத் என்றும், இரண்டு கோட்பாடுகள் இருக்கின்றன. இவற்றுள் ஜிஹாத்-உல் அக்பர் பெரிய ஜிஹாத் என்பது மனிதர்கள் - முஸ்லிம்கள் தங்கள் மனதிற்கெதிராகச் செய்யும் ஜிஹாத் என்றார். அதையும் புறக்கணிக்கின்றார்கள். எல்லாம் ஒன்றுதான் எனச் சப்பைக் கட்டு கட்டுகின்றார்கள்.

இது அவர்கள், முஸ்லிம்களையும் - இஸ்லாத்தையும் எந்த அளவுக்கு மூர்க்கத்தனமாக எதிர்க்கின்றார்கள் என்பதையே காட்டுகின்றது. (அவர்கள் எதிரிகளை உற்பத்தி செய்வதில் எல்லாம் புதிசாலித்தனங்களுக்கும், விடை கொடுத்தவர்கள் Berman - பெர்மான் என்ற எழுத்தாளர், Beinart - பெய்னார்ட் என்ற எழுத்தாளர், Sam Harris - சாம் ஹாரிஸ் என்ற எழுத்தளார் இவர்களெல்லாம் கடவுளை எதிர்த்து நாத்திகத்தை ஆதரித்தவர்கள். அதற்காக நிரம்பவே எழுதிக்குவித்தார்கள். இவர்களும் இஸ்லாம் என வருகின்றபோது எகிரி குதிக்கின்றார்கள்.

இஸ்லாத்தோடு எந்தச் சமரசமும் கூடாது என்று இறுக்கிப் பிடித்துக்கொண்டு நிற்பவர்கள். இவர்கள் நாம் இஸ்லாம் என்ற தீவிரவாதத்தை எதிர்க்கவில்லை. மாறாக, உலகை வேகமாக அழிக்கும் ஓர் கொள்கையை எதிர்க்கின்றோம். அந்தக் கொள்கை சொர்க்கத்தைக் காட்டி இங்குள்ள கொள்கைகளையும் மக்களையும் அழிப்பது - எனத் தொடர்ந்து அடம்பிடிக்கின்றார்கள்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, இன்னும் நம்மையும், நமது கலாச்சாரத்தையும் பழக்க வழக்கங்களையும் அழிக்கத் துடிக்கின்றது என்கின்றார்கள்.

இவையெல்லாம் இவர்களின் புதிய கண்டு பிடிப்புகள் அல்ல, அன்றைய நாள்களில் முதல் சிலுவைப் போர்களின் போது இடைவிடாமல் விளம்பியவைத்தான் இவை.

இவர்களின் புதிய கண்டுபிடிப்பு இஸ்லாமோ ஃபாசிசம் என்பதுதான். ஆனால் இவர்கள் இஸ்லாமிய உலகில் / முஸ்லிம் உலகில் நடந்த இன்னொரு மாற்றத்தை அறவே கண்டுகொள்ள வில்லை. அது இஸ்லாமிய அரசியல் உலகில் நடந்தமிகப்பெரியமாற்றங்கள். அந்தமாற்றங்கள் "ஜிஹாத்" என்ற அநியாயங்களுக்கெதிரான போரில் புதிய அத்தியாயங்களைப் படைத்துக் கொண்டிருந்தன.

ஆனால், இந்த இஸ்லாமிய வெறுப்பாளர்கள் அதையும் - இஸ்லாமிய அரசியல்வாதிகளையும் தீவிரவாதிகள் என்றார்கள். மொத்தத்தில் இஸ்லாத்தோடு சம்பந்தப்பட்ட அனைத்தையும் தீவிரவாதம் என்றே முடித்தார்கள்.

இப்படி இஸ்லாத்தோடு சம்பந்தப்பட்ட அனைத்தையும் தீவிரவாதிகள் எனக் கூறிவிட்ட தால் அவர்கள் பொதுமக்களிடம் இஸ்லாமியப் பீதியைப் பரப்புவதில் அதிகமாக வெற்றி பெற்றுவிட்டார்கள். (தொடரும் இன்ஷாஅல்லாஹ்)

**குறிப்பு :**

**வியட்னாம் போர், மார்ச்-8, 1965**

*1961-இல் ஜான் கென்னடி, அமெரிக்க அதிபர் இந்தப் போருக்கான சிந்தனையை வளர்த்தார். கம்யூனிஸ்ட் அதிபர் நிகிதா குருச்சேவ் (பொதுவாக குருச்சேவ் என அறியப் படுபவர்) வியட்னாமை கம்யூனிச மயமாக்கி விட்டார் என பிரச்சனையை கிளப்பினார். அதாவது ஒரு புதிய எதிரியை உருவாக்கினார். இது* Manufacturing Enemi *எதிரிகளை உருவாக்குவது என்ற அமெரிக்காவின் பொது திட்டத்தின்கீழ வருவதாகும். 50,000 படை களோடு வியட்னாமை சுற்றி வளைத்தார். வியன்னாவில் நடந்த குருச்சேவ் கென்னடி பேச்சு வார்த்தைக்குப்பின், கென்னடி இப்படிக் குறிப்பிட்டார்.*

Vietnam in a Question. (South Vietnam)

Now we have a problem making our power credible and vietnam look like the place.
- Newyork Times

**America's Ground War - அமெரிக்காவின் நிலவழித் தாக்குதல்**

*8, மார்ச்சு திங்கள் 1965இல் அமெரிக்கப் படையின் 3500 பேர் (மெரைன்ஸ்) தெற்கு வியட்னாமுக்குள் புகுந்தார்கள். இதனை அமெரிக்க மக்கள் அமோகமாக வரவேற் றார்கள். அந்த அளவுக்கு அவர்கள், இடை விடாப் பிரச்சாரங்களால் மூளைச் சலவைச் செய்யப்பட்டிருந்தார்கள். மார்ச்சு திங்கள் 1965, 3500 பேர் என்றால் டிசம்பர் 1965இல் 2,00,000 இரண்டு லட்சம் படைகள் எனப் பெருக்கெடுத்தார்கள்.*

*தெற்கு வியட்னாம் இளைஞர்கள் தங்களை ஒருங்கிணைத்துக்கொண்டு அமெரிக்காவின் அபார படைகளோடு தொடர்ந்து சண்டையிட்டார்கள். 1968-இல் அமெரிக்கப் படைகள் அதிகமாக மாண்டன. மாண்டவர்களின் குடும்பத்தினர்கள் அமெரிக் காவில் பிரச்சனைகளை உருவாக்கினார்கள்.*

*வியட்னாம் ஆக்கிரமிப்பில் அமெரிக்கா செய்து கொண்டிருப்பது பச்சையான தீவிர வாதம். அப்பாவி மக்களைப் படுகொலை செய்வது என்பதைக் கண்டுகொண்டார்கள். தங்கள் மைந்தர்கள் அநியாயமாகப் பலிகொடுக்கப்படுகின்றார்கள் என்பதைக் கண்டுகொண்டார்கள், அமெரிக்கர்கள்.*

**Collapse of U.S. Morale - அமெரிக்கப்படைகள் வியட்னாமில் அழிந்த வரலாறு...**

*வியட்னாம் மக்கள் கொரில்லாத் தாக்குதலை தீர்க்கமுடன் தொடர்ந்தார்கள். அமெரிக்கப் படைகள் இனி நமக்கு மரணந் தான் வியட்னாமில் என்ற முடிவுக்கு வந்தார்கள். மரணத்திற்கு முன் முடிந்த வரை சுகங்களை அனுபவிக்க நாடினார்கள். அதனால் போதைப் பொருள்களைத் தேடிப் பிடித்து உட்கொண்டார்கள். 30 சதவீதம் அமெரிக்கப் படைகள் மர்ஜீனா என்ற போதைப் பொருளை தினமும் உட்கொண் டார்கள.* Sand Bagging *என்றொரு பழக்கம். அதாவது அமெரிக்கப் படைகள் வியட் னாமில் கிராமங்களுக்குள் சென்று பதுங்கி னார்கள். அமெரிக்க தளபதிகளின் கட்டளை களுக்கு அடிபணிய மறுத்தார்கள். ஒரு பால் புணர்ச்சி இராணுவத்தினரிடையே பரவியது.*


*இப்படி அவர்கள்... அதாவது அமெரிக் கப்படைகள் தென்வியட்னாமில் ஒழுக்கத் தில் வீழ்ந்துகொண்டிருந்தபோது அமெரிக் காவில் இராணுவத்தை விட்டு தப்பித்து ஓடுபவர்களின் எண்ணிக்கை அதிகமானது. 1966இல் அமெரிக்காவில் அமெரிக்க இராணு வத்தைவிட்டு ஓடுபவர்களின் எண்ணிக்கை மூன்று மடங்கானது.* '(The 'N' Robert 75, June 1971 the Collapse of the Armed Forces armed forces Journal)



vaigarai velicham official

இராணுவத்தில் சேர்வதில் இளைஞர்கள் ஆர்வம் காட்டிடவில்லை. அதைமீறி சேர்ந்தவர்களும், காளாட் படையில் சேரவில்லை. 1974இல் இது தரையைத் தொட்டது. அமெரிக்கப் படைகளுக்கு அப்போது திறமையான தளபதிகளும் தேவைப்பட்டார்கள். அதேபோல், தளபதிகளின் ஆணைகளை சிரமேற்கொண்டு செயல்படுத்திடும் படை வீரர்களும் தேவைப்பட்டார்கள்.

ஒருகட்டத்தில்அமெரிக்கப்படைகளுக்கு ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அது வியட்னாமின் கொரில்லா படைகளை, தேடி அழிக்க வேண்டும் என்பது. இதனை Search and Destroy என்றார்கள். ஆனால், களத்தில் என்ன நடந்தது என்றால், அவர்கள் வியட்னாம் கொரில்லாப் படைகளோடு மோதி மரணிக்க விரும்பவில்லை. மாறாக வியட்னாம் கொரில்லாக்கள் யார் என்பதை கண்டுபிடித்து அவர்களிடமிருந்து ஓடி ஒழிந்தார்கள். களத்தில் நடந்ததை இப்படிக் கூறுவார்கள் (Search and Avoid)

1969 முதல் அமெரிக்கப் படைகள் பின் வாங்கப்பட்டன. 1970இல் அமெரிக்காவின் அதிபராக ஆன நிக்ஸன் (Nixon) 1,50,000 அமெரிக்கப் படைகளை பின் வாங்கினார். இப்படி அமெரிக்காவின் தோல்விப் படலம் தொடங்கி முடிந்தது. வியட்னாமில் ஏற்பட்ட இழப்பு நீண்ட நாள்களாக அமெரிக்கர்களின் நெஞ்சங்களைவிட்டு அகலவில்லை.



# இந்திய முஸ்லிம்களின் கல்வி, மொழியியல் சிக்கல்கள்.

- அல்லாமா அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்)

- தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

**மூன்றாவது பிரச்சனை கல்வி சார்ந்த பிரச்சனை:**

இந்திய குடியரசின் மதச்சார்பற்ற அரசியல் அமைப்பு, இந்தியாவில் வாழும் அனைத்து தரப்பினருக்கும் அவரவர் நம்பிக்கைகள், மதங்கள், கலாச்சாரத்தை பின்பற்றி கொள்வதற்கான முழு சுதந்திரத்தை வழங்கியுள்ளது. அனைத்து பிரிவைச் சேர்ந்த குடிமக்களின் மத நம்பிக்கைகளுக்கும் சமமான அந்தஸ்தை வழங்கியுள்ளது.

பல மதங்கள், நாகரிகங்கள் மற்றும் பலதரப்பட்ட கலாச்சாரங்களை பின்பற்றும் மக்கள் வாழும் நாட்டிற்கு இது சிறந்த அரசியல் அமைப்பு சட்டமாகும். இத்தகைய நாட்டில் ஒரு குறிப்பிட்ட மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ ஏற்றுக்கொள்ளாத ஒரு அரசியல் அமைப்பே சிறந்த அமைப்பாகும்.

ஒன்று பல்வேறு மதத்தின் போதனைகளை ஒருங்கிணைத்து அனைவருக்குமான பாடத் திட்டமாக ஆக்க வேண்டும். ஆனால் பல்வேறு மதங்கள் மற்றும் நாகரீகங்கள் நிறைந்த இந்தியா போன்ற ஒரு நாட்டில் இது சாத்தியமற்றது. அல்லது எல்லா மதங்கள் மற்றும் நம்பிக்கைகளில் இருந்து அரசாங்கம் தன்னை விலக்கிக் கொள்ள வேண்டும்.

அதனைக் குறித்து நேர்மறையாகவோ எதிர்மறையாகவோ பேசக்கூடாது. சாதாரணமாக ஒரு மாணவனின் சராசரி பாடத்திட்டத்தில் எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு அந்த நாட்டின் மதத்தை குறித்தான பொதுவான தகவல்கள் மற்றும் பொதுவான கலாச்சாரம் என்ற அளவில் மட்டும் இருக்க வேண்டும்.



இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை நிறுவி அதனை இயற்றியவர்கள் தொலைநோக்கு சிந்தனை உடையவர்கள். அவர்கள் இரண்டாவது நடைமுறைக்கு முன்னுரிமை வழங்கினார்கள். இதுபோன்ற நடைமுறையே ஆங்கிலேயர்களது காலத்தில் பரவலாக காணப்பட்டது.

ஏனென்றால் இந்த நடைமுறையை விமர்சனம் செய்யவும் முடியாது மறுக்கவும் முடியாது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இதுபோன்ற கல்வி திட்டம் நடைமுறையில் இருந்தால் முஸ்லிம்கள் மகிழ்வார்கள்.

ஆனால் துரதிஷ்டவசமாக இது போன்ற அரசியலமைப்புச் சட்டங்கள் வெறும் காகிதத்தில் மட்டுமே உள்ளது, என்பதை வருத்தத்துடன் கூற வேண்டும். இந்திய குடியரசின் கல்வி பாடத்திட்டத்தை உருவாக்கியவர்கள், அந்த பாடத்திட்ட நூல்களின் ஆசிரியர்கள், -அதிலும் குறிப்பாகவடமாநிலங்களில்- பாடத்திட்டத்தில் இணைத்த பாடங்கள் அனைத்தும் இஸ்லாமிய போதனைகளுக்கு முரணான இந்தியாவில் வாழும் பெரும்பான்மையான மக்களின் நம்பிக்கைகள், மதச் சடங்குகள், தொன்மங்கள் மற்றும் கடவுள்களை குறித்த விஷயங்களையே


vaigarai velicham official

உள்ளடக்கியிருந்தது.

இந்த விஷயங்கள் அனைத்தும் ஓரிறைக் கொள்கைக்கு எதிரானவை, குர்ஆனில் கூறப் பட்ட அல்லாஹ்வின் அனைத்து பண்புகளுக்கும் நேர் எதிரானவை, இஸ்லாமிய தூதுத்துவத்தை அவை மறுக்கின்றன. அதில் உள்ள பாடங்கள் கற்பனை கடவுள்களை வணங்குவது புனிதப் படுத்துவது, அதுபோல நதிகளை சில நகரங் களை புனித படுத்துவது போன்ற விஷயங் களையே உள்ளடக்கி இருந்தன.

பாடத்திட்டம் முழுக்க இந்திய நாட்டில் பிராமண மதத்தை தவிர வேறு மத நம்பிக்கை களோ, வழிபாடுகளோ, வைபூகங்களோ, மதச் சம்பிரதாயங்களோ, வணக்க ஸ்தலங்களோ இல்லாத அளவு முழுக்க முழுக்க அவற்றைக் குறித்த தகவல்கள் மட்டுமே பாடத்திட்டத்தில் நிறைந்திருந்தன.

மாணவர்கள் தங்களது கடந்த கால வரலாற்றை, பெரும் ஆளுமைகளின் வரலாற்றை அறிந்து கொள்ளும் நூல்களும் கூட கடந்த கால வரலாற்றின் குறிப்பிட்ட இனத்தையும் மதத்தையும் சார்ந்த ஆளுமைகளது வரலாற்றோடு சுருக்கப்பட்டது.

இந்திய இஸ்லாமிய வரலாற்றின் பொற் காலத்தில் வாழ்ந்த ஆளுமைகளை வேண்டு மென்றே அந்த நூல்களின் ஆசிரியர்கள் தவிர்த்தனர். உயர்ந்த நல்லடியார்கள், நீதமான அரசர்கள், திறமை வாய்ந்த சட்ட வல்லுநர்கள், ஆற்றல் வாய்ந்த ஆட்சியாளர்கள், புத்தி கூர்ந்த உலமாக்கள், புலமை வாய்ந்த கவிஞர்கள், மதம் கடந்து கொண்டாடப்பட வேண்டிய இந்தியாவின் இதுபோன்ற பெரும் ஆளுமைகள் அனைவரின் வரலாறும் தவிர்க்கபட்டது.

இவர்கள் அனைவரிடத்திலும் இன்றைய மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான முன் மாதிரி உள்ளது. மேலும் பாடப்புத்தகங்களில் இந்தியாவின் இஸ்லாமிய காலகட்டத்தையும், அதில் வாழ்ந்த உயர்ந்த ஆளுமைகள் அனை வரையும் அந்நியர்கள் போலவே காட்டு கின்றனர்.

அப்படி ஒருக்கால் இவர்களை நினைவு கூர்ந்தாலும் அவர்களை இகழ்கின்றனர். அல்லது அவர்களது தகுதிக்கு இழுக்கை வாரி இறைக்கின்றனர்.இன்னும் சில நேரங்களில் ஒரு சாதாரண மனிதனைப் பற்றி அவ்வாறு கூறுவதை கூட சகிக்க முடியாத விஷயங்களை நபி (ஸல்) அவர்களோடு இணைத்து கூறி அவரது மேன்மை கெடுக்கின்றனர். முஸ்லிம்களது உணர்வுகளை காயப்படுத்துகின்றனர்.

இப்படியான பாடத்திட்டத்தை முஸ்லிம் சிறுவர்களும், இளைஞர்களும் தங்களது கலாச்சாரத்தை, கல்வியை வேறு இடத்தில் பெற முடியாமல் இதனை கட்டாயமாக கற்றுக் கொள்ள வேண்டிய சூழலுக்கு தள்ளப்படு கின்றார்கள்.

கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள ஆயிரக்கணக்கான பள்ளிக்கூடங்களில் இதுபோன்ற பாடத்திட்டம் இருப்பதன் காரணத்தினால் தங்களது நாளைய தலைமுறை குறித்து அவர்களது இஸ்லாமிய மத நம்பிக்கை களை குறித்து முஸ்லிம்களிடையே கடுமையான பயம் மற்றும் அச்சம் நிலவுகிறது.

முஸ்லிம்கள் தங்களது தாயகமாக கருதும் இந்த நாட்டில் வாழ்ந்து, தங்களது திறமை களால், ஆற்றல்களால் இந்த நாட்டிற்கு சேவையாற்ற வேண்டும் என்ற நினைக்க கூடிய நாட்டில் தங்களது மத அடையாங்களை வெளிப்படுத்துவது மிகப்பெரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டது.

இதன் தாக்கத்தால் தங்களின் பிள்ளைகள் எதிர்கால சந்ததிகள் சிந்தனை மற்றும் கலாச்சார ரீதியாக மதமாற்றத்தை உள்வாங்கி பிறகு மொத்தமாக மதம் மாறி விடுவார்களோ என்ற பயத்தையும் உருவாக்கியது.

இவ்வாறு எண்ணியதுபோல இந்த கல்வி திட்டம் பயிற்றுவிக்கப்படும் பகுதிகளில் மத மாற்றுச் சிந்தனை மெதுவாக தலையெடுத்தது. இவர்கள் தங்களது இஸ்லாமிய கல்வியை அல்லது இஸ்லாமிய அழைப்புணி சார்ந்த தொடர்பை துண்டித்தார்கள். அப்பாவி முஸ்லிம் சிறார்கள் பிராமண அடையாளங் களை வெளிபடுத்தி அவர்களது சில மத நம்பிக்கைகளை கடைபிடிக்கவும் துவங்கி னார்கள்.

இது முஸ்லிம்கள் மத்தியிலும் இஸ்லாமிய சமூகத்திலும் மிகுந்த கவலையையும் அச்சத் தையும் ஏற்படுத்தியது. இதனால் வட மாநிலத்தின் பஸ்தி என்ற பகுதியில் ஒரு பெரிய மாநாடு நடத்தப்பட்டது. இதில் இஸ்லாமிய சமூகத்தின் வேறுபட்ட சிந்தனைகளுடைய

பல்வேறு பிரிவுகளை சார்ந்த 300க்கும் அதிகமான முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இஸ்லாமிய மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு நேரெதிரான அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மதநம்பிக்கைகள் மற்றும் புராணக் கதைகளை உள்ளடக்கிய பாடங்களை பள்ளி பாடத் திட்டங்களிலிருந்து நீக்கி தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும், அரசியலமைப்பு சட்டத்தில் குறிப் பிடப்பட்டது போலவே இந்த நாட்டின் பாடத் திட்டத்தை அதன் மதச்சார்பற்ற தன்மைக்கு மீட்டுக் கொண்டுவரவும் இந்த மாநாடு அரசுக்கு அழைப்பு விடுத்தது.

மேலும் மாணவர்கள் பள்ளிக்கு சென்று வந்த பிறகு கிடைக்கும் ஓய்வு நேரங்களில் மார்க்க கல்வியை தெரிந்து கொள்வதற்காக மதரசாக்கையும் பள்ளிக் கூட பாடங்களோடு மார்க்கம் சார்ந்த விஷயங்களை கற்றுக் கொடுப்பதற்கான பயிற்சி கூடங்களையும் நிறுவிட உறுதி ஏற்றார்கள்.

இஸ்லாமிய மக்களுக்கு மத்தியில் இந்த இஸ்லாமிய கல்வி கவுன்சில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் கிளைகள் நாடெங்கும் பரவின. மிகப்பெரிய அளவில் மாநாடுகள் நடத்தப்பட்டன. இந்த சிந்தனை களை முஸ்லிம்களும் பல மதங்களை பின்பற்றும் சிறுபான்மையினர் அனைவரும் பெற்றுக் கொண்டார்கள்.

நகரங்கள் கிராமங்கள் என பல்வேறு இடங்களில் மத்ரஸாக்களை நிறுவி இஸ்லாமிய கல்வியை பரவச் செய்ததில் ஜம்இய்யதுல் உலமா சபைக்கு பெரிய பங்குண்டு.

**நான்காவது பிரச்சினை :**

நான்காவது பிரச்சினை மொழி சார்ந்தது.

உருது மொழி என்பது பல்வேறு இனங்கள், பண்பாடுகள் மற்றும் வகுப்புகளின் கலவை யாகும். அரபு, ஃபார்ஸி, துருக்கி, சமஸ்கிருதம் என்ற நான்கு மொழிகளிலிருந்து உருவாகியது. இந்திய இஸ்லாமிய ஆட்சியின் இறுதி காலத்தில் பொதுவாக பயன்படுத்தப்பட்ட ஆங்கில வார்த்தைகளையும் எடுத்து கொண்டது. இவ்வாறு உருது மொழி இந்திய சமூகத்தின் அடையாளமாக மாறியது.

எந்தளவிற்கு என்றால் பெரும்பான்மை மக்களினால் பேசப்படும் மொழியாகவும் கலாச்சாரம், இலக்கியம், கல்வி, செய்திதாள்கள், பத்திரிகைகள் என அனைத்தும் உருது மொழியில் பரிணமித்தது.

பல்வேறு மொழிகளை பேசும் இந்திய மக்களிடையே அனைவரும் தங்களிடையே உரையாடிக் கொள்வதற்கான பொதுவான மொழியாகவும் உருதுவே விளங்கியது. குறிப் பாக இந்திய வட பகுதிகளில் மற்றும் பிஹார், டில்லி, அதற்கு அருகில் உள்ள நகரங்கள், ஹைதராபாத் போன்ற பிராந்தியங்களில் உருது மொழியே மக்களினால் பேசப்பட்டது. இந்தியாவின் பெரும்பான்மை மக்கள் புரிந்து கொள்ளும் மொழியாக உருதுவே விளங்கியது.

ஆங்கில மொழிக்கு அடுத்து பத்திரிகைகள் செய்தி தாள்கள் உருது மொழியில் தான் அதிகமாக வெளியிடப்பட்டன. அதற்கான வாசகர்களும் பெரும் திரளில் இருந்தனர்.

நீதிமன்றங்கள், நிறுவனங்கள் மற்றும் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலத்திற்குப் பிறகு இரண்டாவது அதிகாரப்பூர்வ மொழியாக "உருது" விளங்கியது.

வட மாநில ஆளுநர் சர் ஆண்டனி மெக்டொனால்டே ஹிந்தி மொழியை உயர்த்தி, உருது மொழிக்கான போட்டி மொழியாக அதனை ஊக்குவித்து இரண்டு தரப்பினரின் உள்ளத்தில் பகையை விதைக்கும் வரை இதே நிலையே தொடர்ந்தது.

ஆளுநர் 1900 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் தேதி ஹிந்தி மொழியை நீதிமன்ற மொழியாக அங்கீகரித்தார். இந்த நேரத்தில் தான் இரு மொழிகளுக்கான பனிப்போர் துவங்கியது.

பிறகு 1947 ஆம் ஆண்டு இந்திய பிரிவினைக்கு பிறகு இந்திய குடியரசு இந்திய சட்டத்தின் 343 பிரிவின் படி தனது ஆட்சி மொழியாக தேவநாகரி முறையில் எழுதப்படும் ஹிந்தி மொழியை தேர்ந்தெடுத்தது. ஹிந்தி அல்லாமல் 14 பிராந்திய மொழிகளை தேசிய மொழிகளாக அங்கீகரித்தது. (இவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகள் மாநிலத்தின் சட்டமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் மொழியாக அல்லது குறிப்பிட்ட மாநில அரசின் அதிகாரப்பூர்வ மொழியாக பயன்படுத்தலாம்)


vaigarai velicham official

இவற்றில் உருது மொழியும் அடங்கும்.

கணிசமான எண்ணிக்கையிலான மக்கள் பேசும் ஒவ்வொரு மொழியும் அங்கீகரிக்கப் பட்டு, அதன் மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு அந்த மொழியை கற்பிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தால் அதற்கான அனைத்து வசதிகளும் வழங்கப்பட வேண்டும் என்று அரசியலமைப்பு சட்டம் கூறுகிறது.

அதேபோல கணிசமான மக்களின் எண்ணிக்கை போதுமென்று கருதி அந்த மக்கள் பேசும் மொழி அவர்களது குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான கருவியாக இருக்க வேண்டும் என்ற விரும்பினால் அதனை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிப்பதற்கு வழிகாட்டும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அரசியல் சட்டத்தின் 347 ஆம் சட்டப் பிரிவு இவ்வாறு கூறுகிறது:

"ஒரு மாநிலத்தின் மக்கள்தொகையில் கணிசமான விகிதாச்சாரம் கொண்டோர் பேசும் மொழியை அந்த மாநில அரசு அங்கீ கரிக்க வேண்டும் என்று கோரினால், குடியரசு தலைவரும் இதைக் கோருபவர்கள் கணிசமான வர்கள் என்று உறுதி செய்தால், குடியரசு தலைவர் இந்த மொழியை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்து அவரால் அறிவிக்கப்பட்ட நோக் கங்களுக்காக அதைப் பயன்படுத்துவதற்கான உத்தரவை பிறப்பிக்கலாம்."

ஆனால் மத்திய அரசுடன் இணைந்த மாநிலங்கள், குறிப்பாக உருது மொழிக்கான மையமாகக் கருதப்படும் - உருது மொழி செழித்து வளர்ந்த - வட மாநிலத்தில் பாடங் களிலும், ஆரம்ப பள்ளி கல்வியிலும், கல்வியை கற்று கொடுப்பதற்கான கருவியாகவும் விளங்கிய உருது மொழியை முழுமையாக நீக்கினர்.

அவர்கள் பேசும் மொழியும் அவர்களது பெற்றோர்கள் பேசும் மொழியும் உருது மொழியாக இருந்தாலும் ஹிந்தி மொழியை கட்டாய மொழியாக, மாணவர்கள் கல்விப் பாடங்களைப் பெறும் ஒரே கற்கும் கருவியாக உருவாக்கினர்.

உத்திர பிரதேச மாநிலத்தின் கல்வி அமைச் சகம் இந்த முடிவை கடுமையாக நடைமுறை படுத்தி, அதன் துவக்க பள்ளிகூடங்களில் உருது மொழியை படிக்கத் முழுமையாக தடை விதித்தது. இவ்வாறு உருது மொழி ஆரம்ப பள்ளிகளிலிருந்து முழுவதுமாக நீக்கப்பட்டது.

பள்ளிகூட பாடங்களில் இருந்து, கல்வி கற்பதற்கான கருவியாக விளங்கிய உருது மொழியைப் நீக்கியதால் அதைப் பேசும் அனைத்து மக்களின் கல்வியில் எதிர் காலத்தில் மொழி தொடர்பான விஷயத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்த மொழி மீதான அரசாங்கத்தின் விரோத நிலைப்பாடு அரசின் மீதான கோபத்தையும் ஆட்சேபனையையும் தூண்டியது, ஆனால் முஸ்லிம்களது கல்வியின் எதிர்காலத்தில் இதன் தாக்கம் மிக அதிகமாகவும் ஆழமாகவும் இருந்தது.

இந்த தாக்கம் கல்வியை தொடர்ந்து மத நம்பிக்கைகளில் இஸ்லாமிய விவகாரங்களிலும் வெளிப்பட்டது. ஏனென்றால் முஸ்லிம்களை தங்களது மார்க்கத்தோடு இணைப்பது உருது மொழியே. ஏனென்றால் அவர்களது மார்க்கம் சார்ந்த அனைத்து நூல்களும் உருது மொழி யிலே உள்ளது. மேலும் உருது மொழி அரபு எழுத்துக்களையும் கொண்டது. இதனால் குர்ஆன் ஓதுவது, அரபு மொழியை கற்பதும் எளிதாக இருக்கும். அவர்களது வாழ்வியல், பண்பாடு, பாரம்பரியம், வரலாறு என அனைத்தும் உருது மொழியிலே உள்ளது.

இதனால் இந்த மொழியிலிருந்து தொடர்பை துண்டிப்பது அதனை அறியாமல் இருப்பதன் அர்த்தம் என்னவென்றால் தங்களது கலாச்சாரம் பண்பாடு தங்களது கடந்த காலம் என அனைத் தின் தொடர்பில் இருந்தும் முழுவதுமாக துண்டிப்பதற்கு சமம்.

இத்தகைய மொழியை கல்வி கற்கும் பள்ளிக்கூடங்களில் இருந்து நீக்கியது என்பது அந்த மொழியில் பேசும் மக்களின் கலாச்சாரம் பண்பாடு பாரம்பரியம் ஆகிய அனைத்தையும் அழிப்பதின் அறைகூவல் என்பதை சிந்திக்க வேண்டும்.

நாட்டின் லட்சக்கணக்கான மக்களால் பேசப்படும் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப் பட்ட, பரவலாக பேசப்படும், ஆதிக்கம் செலுத்தும் இந்த மொழிக்கு எதிரான அரசாங் கத்தின் இத்தகைய நிலைப்பாட்டிற்கு அந்த மக்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதற்கு மத்திய அரசு தரப்பிலிருந்து வெளி-யிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"பள்ளிக்கூடத்தில் கற்பித்தல் மற்றும் தேர்வு எழுதுவதற்கான மொழி என்பது குழந்தை மற்றும், அவனது பெற்றோர் பேசும் மொழியில் இருக்க வேண்டும். குழந்தையின் மொழி அந்த பிராந்தியத்தின் மொழி மற்றும் மாநில அரசின் மொழியிலிருந்து வேறுபட்டிருந்தால், இவ்வாறான மாணவர்கள் சராசரியாக ஒரு பள்ளிக்கு 40 மாணவர்கள் அல்லது ஒரு வகுப் பிற்கு 10 மாணவர்கள் இருந்தால் பாடங்களை அவர்களது மொழியில் கற்பிக்க ஒரு ஆசிரியரை நியமிக்க வேண்டும்."

இதனடிப்படையில் முஸ்லிம்களும், உருது மொழி பேசும் மக்களும் தமது பிள்ளைகளுக்கு உருது மொழியை கற்பிக்க வசதி செய்து தருமாறும் பல இடங்களில் இதற்கான பேராசிரி யரை நியமிக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

லக்னோவில் மட்டும், மாணவர்களின் பெற்றோர்கள் பத்தாயிரம் பெற்றோர்களின் கையெழுத்துடன் கோரிக்கையை சமர்ப்பித்து, பொதுவாக பள்ளி கூடங்களில் உருது மொழியை கற்பிப்பதற்கும், குறிப்பாக உருது மொழியை கற்க ஆர்வமாக உள்ள தங்கள் குழந்தைகள் படிக்கும் துவக்கப் பள்ளிகளில் உருது மொழி கற்பிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருமாறும், இந்த பாடத்திற்கு ஆசிரியர்களை நியமிக்குமாறும் கல்வி அமைச்சகத்தில் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் இவை அனைத்தும் பயனளிக்க வில்லை, அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமும் தென்படவில்லை.இந்த மாநிலங்களில் பாடத்திட்டத்திலிருந்து முழுவது மாக நீக்கப்பட்ட மொழியாகவே உருது மொழி தொடர்ந்தது.

தொடரும்....


இப்பொழுது பரபரப்பான விற்பனையில்







நூலைப் பெற்றிட : 8148129887, 74012 13394

# ஃபாலஸ்தீன முஸ்லிம்கள்

## அகதிகளான வரலாறு

தொடர்...



அக்டோபர் மாத தொடர்ச்சி....

### 1928ல் பாலஸ்தீனை கிருஸ்தவ மயமாக்கலும், இந்திய முஸ்லிம்களும்

**1918ஆம்** ஆண்டிலிருந்து 1948ஆம் ஆண்டு வரை பாலஸ்தீன் ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்தது.

இதனை வேறுசொற்களால் சொன்னால் முதல் உலகப்போரின் முடிவிலிருந்து தொடங்கி யூதர்களுக்கென ஒரு நாட்டை (இஸ்ரேலை) உருவாக்கிடும் வரை பாலஸ்தீனை ஆங்கிலேயர்கள் தங்கள் கைகளில் வைத்திருந்தார்கள்.

இந்தப் பெரும் இடைவெளியைப் பயன் படுத்தி பாலஸ்தீனில் கிருஸ்தவத்தை வளர்ப் பதற்கும், பாலஸ்தீனை கிருஸ்தவ மயமாக் கிடவும் விழைந்தனர் ஆங்கிலேயர்கள் இதற்காக நிரந்தர ஏற்பாடுகளைச் செய்திட சதி திட்டங் களைத் தீட்டினார்கள். அந்தத் திட்டத்தை உடனேயே செயலில் கொண்டுவந்து கொண்டிருந்தார்கள்.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக 1928ஆம் ஆண்டில் ஜெரூசலத்தில் ஓர் கிருஸ்தவ மாநாட்டைக் கூட்டினார்கள். இந்த மாநாட் டில் 50 நாடுகளிலிருந்து கிருஸ்தவ பிரதி நிதிகள் வந்து கலந்துகொண்டார்கள். அவர்கள் எண்ணிக்கையில் 241 பேர். மாநாடு பாலஸ்தீனிலுள்ள ஒலிவ் மவுண்டனில் ஒலிவ் மலையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டின் தலைவராக ஜான் மோட் (John Mott) செயல்பட்டார். இவர் மாநாட்டின் நோக்கம் பற்றிக் குறிப்பிடும் போது, இப்படிச் சொன்னார்.

"பாலஸ்தீனில் வாழும் முஸ்லிம்களுக்கு கிருஸ்தவத்தின் மேல் நம்பிக்கை ஏற்படுத்து வதும் அவர்களது மதத்தை இஸ்லாத்திலிருந்து

கிருஸ்தவத்திற்கு மாற்றிடுவதும்" (தான் நோக்கம்).

இந்த மாநாட்டையும் அதற்குப் பின்னுள்ள சதியையும் பாலஸ்தீன முஸ்லிம்கள் புரிந்து கொண்டார்கள்.

உடனேயே அவர்கள் இந்த மாநாட்டிற் கெதிராகப் போராடினார்கள். அந்த மாநாட்டை நிறுத்திட வேண்டும் என்றும் அதற்காக வந்த பன்னாட்டுப் பிரதிநிதிகளைத் திரும்ப அனுப்பிட வேண்டும் என்றும் ஆங்கிலேயே அரசுக்கும் அரசிக்கும், நெருக்கடிகளைக் கொடுத்தார்கள்.

இந்த நெருக்கடிகளை அதிகப்படுத்திடவும் தங்கள் போராட்டத்திற்கு வலு சேர்த்திடவும் இந்திய முஸ்லிம்களை துணைக்கு அழைத் தார்கள். இது குறித்து ரகசிய கடிதம் ஒன்றை ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்கள் இந்திய முஸ்லிம்களுக்கு அனுப்பி வைத்தார்கள்.

தங்கள் போராட்டங்களில் இந்திய முஸ்லிம்கள் பெரிதும் உதவ முடியும் என்று பாலஸ்தீன் முஸ்லிம்கள் நம்பினார்கள். இந்திய முஸ்லிம்களைக் கண்டு இந்தியாவிலிருக்கும் ஆங்கில ஏகாதிபத்தியம் அலறிக் கொண்டிருக் கின்றது என்பதை பாலஸ்தீன் முஸ்லிம்கள் நன்றாக அறிவார்கள்.

பாலஸ்தீன் முஃப்த்தி, காஜி அமீன் ஹுஸைன் அவர்களின் கடிதம் இந்தியாவை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது. இந்திய முஸ்லிம்கள் களத்தில் குதிக்க இருக்கின்றார்கள் என்பதை ஆங்கிலேயர்கள் ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்டார்கள்.

உடனேயே மாநாட்டை இழுத்து மூடி னார்கள். இந்தியாவிற்கு வந்து கொண்டிருந்த ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்கள் கடிதத்தைப் பின் தொடர்ந்தார்கள். கடிதத்தை பம்பாய் தபால் நிலையத்தில் கண்டெடுத்துக் கைப் பற்றினார்கள். கடிதம் உடனேயே லண்டனுக்கு அனுப்பப்பட்டது மேல் நடவடிக்கைகளுக்காக!

ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்கள் அந்தக் கடிதத்தை கிலாபத் கமிட்டியின் அங்கம் வகித்த ஷவுக்கத் அலி (ரஹ்) அவர்களுக்கு எழுதி இருந்தார்கள்.

இப்படியொரு கடிதம் தனக்கு வந்தது என்பதை ஷவ்கத் அலி (ரஹ்) அவர்கள் பின்னர் தெரிந்து கொண்டார்கள். பாலஸ்தீனில் நடந்த கிருஸ்தவ மாநாட்டை யூதர்கள் வரவேற்றார்கள். வெளிநாட்டுப் பிரதிநிதிகளில் பலரைத் தங்களோடு பாலஸ்தீனிலேயே நிரந்தரமாகத் தங்க வைத்தார்கள்.

(ஆதாரம் : Norman and Helenbentkish: Mandatory Memoris 1918 - 1948)

### 1928 பாலஸ்தீன் யூதர்களின் போராட்டமும் இந்திய முஸ்லிம்களும்

*1928* ஆம் ஆண்டு பாலஸ்தீனில் குடியேறிய யூதர்கள் ஒரு பெரும் போராட்டத்தை அறிவித் தார்கள். அந்தப் போராட்டம் அல்புராக்குல் ஷரீஃப் என்ற (வெய்லிங் வால்) யூதர்கள் புனிதமானது எனக் கூறும் சுவரைப்பற்றியது.

இந்தச் சுவர் ஹரம் அல்ஷரீஃப் இன் மேற்குபகுதியில் இருக்கின்றது. உண்மையில் இஃது முஸ்லிம்களுக்குச் சொந்தமானது. இந்தச் சுவரும், அதற்கெதிராக உள்ள சொத்துக்களும், அவற்றிற்கெல்லாம் இட்டுச் செல்லும் பாதையும் மதாய்இன் வத்ஃஜப் என்ற வக்ஃப் ஐ சார்ந்தவை.

ஆனால் *1928* ஆம் ஆண்டு ஏறத்தாழ *600* யூதர்கள் ஒன்றுதிரண்டு அந்தச் சுவர் தங்களு டைய சுவர் எனக் கூவினார்கள்.

யூதர்களின் கோஷங்களுக்கு எதிராக முஸ்லிம்களும் கோஷம் போட தயாரானார்கள். ஆனால் ஆங்கிலேயே அரசு அதற்கு அனுமதி அளிக்கவில்லை. ஆனால் யூதர்கள் தங்கள் கோஷங்களைத் தொடர்ந்து கொண்டே இருந்தார்கள்.

தங்களுக்குப் போராட அனுமதி கிடைக்காத தால் அதற்கு மாற்று ஏற்பாடாக முஸ்லிம்கள் ஒரு உலக மாநாட்டை ஜெரூசலத்தில் கூட்டிட ஏற்பாடு செய்தார்கள். கிலாபத் கமிட்டியின் தலைவர் மௌலானா முஹம்மத் அலீ அவர்கள்

இந்த மாநாட்டில் கலந்துகொள்ள ஜெரூசலம் சென்றார்கள். ஆனால் ஆங்கிலேயே அரசு அவரை ஜெரூசலத்திற்குள் அனுமதிக்க வில்லை. அதனால் இந்தியாவிலிருந்து சென்ற மௌலானா முஹம்மத் அலி அவர்கள் சிரியா வின் தலைநகர் டெமாஸ்கஸ் இல் தங்கி விட்டார்கள்.

பாலஸ்தீன முஸ்லிம்கள் உணர்வு பொங்கிட வீதிக்கு வந்து போராடினார்கள். அவர்கள்


vaigarai velicham official

மௌலானா முஹம்மத் அலீயை மாநாட்டில் கலந்துகொள்ள அனுமதி அளிக்க வேண்டும் என ஆங்கிலேயே அதிகாரி ஹேரி லூக் 'Harry Luke' என்பவருக்கு அழுத்தங்களைக் கொடுத் தார்கள். ஜெரூசலத்தைத்தொடர்ந்து 'ஹெப்ரான்' என்ற பாலஸ்தீன பகுதியிலும் போராட்டங்கள் நடந்தன. பாலஸ்தீன் முஃபத்தி ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்களே இதில் கலந்து கொண் டார்கள். நிலைமைக் கட்டுக்கடங்காமல் போயிற்று.

ஆங்கிலேயர்கள் பணிந்தார்கள். மௌலானா முஹம்மத் அலீ அவர்களை ஜெரூசலம் செல்ல அனுமதித்தார்கள்.

*1928, 27* நவம்பர் திங்களில் மௌலானா முஹம்மத் அலீ அவர்கள் ஜெரூசலம் சென் றார்கள். அங்கே குழுமி இருந்த ஆயிரக்கணக் கான முஸ்லிம்களிடையே மௌலானா முஹம்மத் அலீ அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். மௌ லானா அலீ அவர்கள் அல்புராக் அல் ஷரீஃப்க்குப் பக்கத்திலேயே நின்று உரை நிகழ்த்தினார்கள். உரையில்,

"பாலஸ்தீன் அல் அக்ஸா மஸ்ஜித் அவற்றின் இடையேயுள்ள பூமி உலகில் வாழும் கோடான கோடி முஸ்லிம்களுக்குச் சொந்தமானது. அதில் ஒரு மண்ணைக் கூட முஸ்லிம்கள் விட்டுத் தந்திட மாட்டார்கள்" என்று முழங்கினார்கள்.

மௌலானா அலீ அவர்களின் உரை யூதர்களைக் கோபத்தில் ஆழ்த்திற்று. அடுத்த நாளே யூதர்கள் ஆங்கிலேயர்களிடம் கிலாபத் கமிட்டியின் தலைவர் மௌலானா முஹம்மத் அலீ அவர்களின் வருகை முஸ்லிம்களின் கையை விட்டுப்போன கிலாபத் -ஐ மீண்டும் கொண்டு வருவதற்காகவே. ஜெரூசலத்தில் உலக முஸ்லிம் களின் சார்பில் மிகப் பெரியதொரு உலகக் கமிட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் தலைமை இந்தியாவிலிருக்கும் கிளைகள் உலகெங்குமிருக்கும் என ஆங்கிலேயர்களை அச்சுறுத்தினார்கள்.

ஆமாம்! அன்றுமின்றும், ஆங்கிலேயர்களுக்கு கிலாஃபத் என்றால் பீதி. அது மீண்டும் வந்து விடும் என்றால் அவர்களுக்கு வந்து விடும் அடங்காத ஆத்திரமும், கோபமும். அதனால் மீண்டும் கிலாபத் என்ற பேச்சை எடுத்தார்கள் யூதர்கள்.

ஹென்ரோத் என்ற ஆங்கிலேயே அதிகாரி, மௌலானா முஹம்மத் அலீ அவர்கள் உடனேயே பாலஸ்தீனை விட்டு வெளியேறிட வேண்டும் என ஆணையிட்டார்.

முஹம்மத் அலீ அவர்கள் சென்ற பணி செவ்வனே அவர்கள் பாலஸ்தீனை விட்டு நிறைவேறியதால் வெளியேறினார்கள்.

இந்தியா வந்த முஹம்மத் அலீ அவர்கள் பம்பரமாகச் சுழன்று பணியாற்றினார்கள். இந்தியாவில் எல்லா முக்கிய நகரங்களிலும் பொதுக்கூட்டங்களை நடத்தினார்கள். தேவைப் படும் இடங்களில் விவாத அரங்குகளையும் மாநாடுகளையும் கூட்டினார்கள்.

அறுதி மாநாடு ஒன்று பம்பாயில் டிசம்பர் *21,1928* ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் கலந்து கொண்டார்கள்.

(ஆதாரம்: Al. Jamea Al Islamia News Paper : Oct 4,19281 Nove. 22, 1928, January 14, 1929)

## 1929 பாலஸ்தீன் போரும் இந்திய முஸ்லிம்களும்

ஆகஸ்ட் *15, 1929* ஆம் ஆண்டு யூதர்கள் மீண்டும் ஓர் ஆர்பாட்டத்தை அல்புராக் அல் ஷரீஃப் - இல் நடத்தினார்கள். அடுத்த நாள் *2000* முஸ்லிம்கள் அங்கே திரண்டு தங்கள் எதிர்ப்பைக் காட்டினார்கள்.

செய்தியைக் கேள்விப்பட்ட இந்திய முஸ்லிம்கள் யூதர்களை அல்புராக் அல் ஷெரீஃப்க்குப் பக்கத்தில் அனுமதித்த ஆங்கி லேயர்களை எதிர்த்து இந்தியாவில் பெருமளவில் போராடினார்கள்.

*1929* அக்டோபரில் முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கு மிடையே போர் மூண்டது! அந்தப் போரில் யூதர்களுக்கு ஆயுதங்களைத் தாராள மாகத் தந்தார்கள் ஆங்கிலேயர்கள். அதே நேரத்தில் முஸ்லிம்களின் கைகளில் எந்த ஆயுதமும் கிடைக்காமல் செய்துவிட்டார்கள். மட்டுமல்லாமல் தேவைப்படும் போதெல்லாம் ஆங்கிலப்படைகள் யூதர்களுக்கு உதவி செய்தன. ஆனாலும் முஸ்லிம்கள் கையில் கிடைத்த வற்றைக் கொண்டு கடுமையாகப் போராடி னார்கள்.



போரின் முடிவில் 133 யூதர்கள் இறந்தார்கள். 339 யூதர்கள் காயம்பட்டார்கள்.

முஸ்லிம்களில் 116 இறந்தார்கள் 232 பேர் காயம் பட்டார்கள். கிலாபத் கமிட்டியின் தலைவர் முஹம்த் அலீ அவர்களுக்கு சிரியாவிலுள்ள முஸ்லிம்கள் மூலம் இந்தச் செய்தியைத் தெரிவித்தார்கள். செய்திகிடைக்கப் பெற்றதும் மௌலானா முஹம்மத் அலீ அவர்கள் ஒரு நீண்ட பத்திரிகை செய்தியை வெளியிட்டார்கள். அதில்,

"தேவையானால் இந்திய முஸ்லிம்கள் தங்கள் உயிரைத் தந்து பாலஸ்தீனிலுள்ள பைத்துல் முகத்திஸ்-ஐ காத்திட தயாராகிட வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்கள்.

எதிர் வந்த ஜும்ஆவில் - வெள்ளிக்கிழமையின் மதியத் தொழுகையில் இந்தியா முழுவதும் முஸ்லிம்கள் தேவையானால் பாலஸ்தீன் சென்று யூதர்களுக்கெதிரான போரில் கலந்து உயிரை தந்திடுவோம் என்றும் இதில் தேவைப் படும் எல்லாப் பொருள் தியாகத்தையும் செய்திடுவோம் என்றும் உறுதிமொழி எடுத்தார்கள்.

பாலஸ்தீனில் ஆங்கிலேயர்களுக்குத் தரப்பட்டுள்ள சிறப்பு அதிகாரம் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற முழக்கம் இந்தியா முழுவதும் எழுந்தது. இந்த முழக்கம் லீக் ஆஃப் நேஷன்ஸ் (Leauge of Nations) என்ற பன்னாட்டுச் சபையைக் கேட்டுக் கொள்ளும் அளவில் அமைந்தது.

உறுதி எடுத்துக்கொண்ட முஸ்லிம்களில் பலர் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு பாலஸ்தீன் சென்றார்கள். அடுத்த சில நாள்களில் கிலாபத் கமிட்டியின் தலைவர் மௌலானா முஹம்மத் அலீ அவர்கள் பாலஸ்தீன் சென்றடைந்தார்கள். அங்கே பாலஸ்தீன் முஸ்லிம்கள் உலக முஸ்லிம்கள் இந்திய முஸ்லிம்கள் ஆகியோர் ஒன்று திரண்ட பெருங் கூட்டத்தில் எழுச்சிமிக்க உரையாற்றினார்கள். அதில்,

"எங்கள் பிணங்களின் மேல் சென்று தான் யூதர்கள் அல்புராக் அல் ஷெரீஃப் - இன் சுவர்களைத் தொட்டிட முடியும். நாங்கள் இதற்காக எல்லா தியாகங்களையும் செய்ய தயாராக இருக்கின்றோம்." என உணர்ச்சி பொங்க பேசினார்கள்.

இந்தியாவிலும் முஸ்லிம்கள் ஆங்கிலேயர்களுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களிலும் போராட்டங்களிலும் பெருவாரியாக கலந்து கொண்டார்கள்.

ஒரு பிரச்சினை இரண்டு பகுதிகளில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்துகின்றது என்பதை உணர்ந்த ஆங்கிலேயர்கள் நிலைமையைச் சமாளிக்க புது உத்திகளைத் தேடினார்கள். முடிவில், வழக்கம் போல், பல குயுத்திகளைக் கையாண்டார்கள். அவற்றுள் ஒன்றாக 'ஷா' கமிஷன் என்றறொரு கமிஷனை நியமித்து முஸ்லிம்களையும், யூதர்களையும் பேசிட அழைத்தார்கள். இந்திய முஸ்லிம்களையும் அழைத்தார்கள். இந்திய முஸ்லிம்களும் ஷா கமிஷன் முன்தோன்றி அல்புராக் அல் ஷெரிஃப் முஸ்லிம்களுக்கே சொந்தம் என வாதாடினார்கள்.

1930 மார்ச்சு மாதம் பாலஸ்தீனிலுள்ள முஸ்லிம்களின் பிரதிநிதிகளின் குழுமம் ஒன்று லண்டன் சென்றது. அங்குள்ள முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து பாலஸ்தீனின் உண்மை வரலாற்றை எடுத்துச் சொன்னார்கள்.

ஷா கமிஷனோ அல்லது ஆங்கில நாட்டைச் சார்ந்த முக்கிய பிரமுகர்களோ பாலஸ்தீன முஸ்லிம்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் பாலஸ்தீன் முஸ்லிம்களின் பிரதிநிதி குழு இந்திய முஸ்லிம்களிடம் தங்களால் இயன்றதையெல்லாம் செய்திட வேண்டினார்கள்.

இந்தப் பின்னணியில் கிலாபத் கமிட்டி ஒரு பெரும் மாநாட்டை 18,19,20 ஏப்பிரல் 1930 இல் கூட்டியது. அந்த மாநாட்டிற்கு "பாலஸ்தீன் விவகாரங்களுக்கான முஸ்லிம்களின் அகில இந்திய மாநாடு" எனப் பெயர் வைத்தது. "All India Muslim Conference for Palestinian Affairs".


vaigarai velicham official

இந்த மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.ஸ்

"பாலஸ்தீனிலுள்ள புனித ஸ்தலங்கள் பாலஸ்தீன் மக்களுக்கு மட்டும் சொந்தமான தல்ல. அவை உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் சொந்தமானவை. இப்போது இந்தப் புனித

ஸ்தலங்களுக்குப் பக்கத்தில் நடக்கும் நிகழ்வுகள் இந்திய முஸ்லிம்களுக்கு பெருத்த மன வேதனைகளை ஏற்படுத்துகின்றன. பாலஸ்தீனில் வாழும் ஏழை முஸ்லிம்களுக்குப் பெருவாரியாகப் பணத்தைத் தந்து அவர்களின் வதியுமிடங்களை வாங்குகின்றோம் என்ற போர்வையில் அவர்களின் சொந்த இடங்களி லிருந்து அவர்களை விரட்டுவது ஏற்றுக் கொள்ள இயலாத ஒன்று. இதற்கிருக்கும் ஒரே தீர்வு பாலஸ்தீனை முஸ்லிம்களின் கைகளில் ஒப்படைத்து விட்டு ஆங்கிலேயர்கள் அங்கே யுள்ள தங்கள் அதிகாரத்தை விலக்கிக் கொண்டு வெளியேறுவதுதான். ஆகவே இந்த மாநாடு போல்பர்பிரகடனத்தையும், லீக் ஆஃப் நேஷன்ஸ் ஆங்கிலேயர்களுக்கு வழங்கிய அதிகாரத்தையும் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கின்றது. மறுக் கின்றது. எதிர்க்கின்றது."

"ஷா கமிஷன் முன் உண்மையை எடுத்துச் சொல்லிட உடனேயே இந்தியாவிலிருந்து ஒரு பிரதிநிதிகள் குழுமத்தை லண்டனுக்கும், தேவைப்பட்டால் ஐரோப்பா முழுவதும் அனுப்பிட ஆங்கில அரசு முன்வந்திட வேண்டும் என இந்த மாநாடு வலியுறுத்துகின்றது.'

"யூதர்கள், பாலஸ்தீன் முஸ்லிம்களின் கோபத்தைக் கிளறியும், அவர்களைக் கொலை செய்தும் வருகின்றார்கள். அவர்களைத் தண்டிப் பதற்குப் பதிலாக முஸ்லிம்களைப் பிடித்துச் சிறையலடைத்திருக்கின்றது ஆங்கிலேயே அரசு."

"அந்த முஸ்லிம்களை ஆங்கில அரசு உடனே விடுதலை செய்திட வேண்டும்" என இம்மாநாடு கட்டாயப்படுத்துகிறது.

"இந்திய முஸ்லிம்களுக்கும் சிலோனில் வாழும் முஸ்லிம்களும் உலக முஸ்லிம்களும் 17 மே வெள்ளிக்கிழமையை பாலஸ்தீன் நாள் என அனுஷ்டிக்க வேண்டும் என மாநாட்டுத் தீர்மானம் கோருகின்றது."

"இந்தத் தீர்மானங்கள் எல்லா ஜும்ஆக் களிலும் (வெள்ளிக்கிழமை தொழுகையிலும்) படிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும் என ஜமாஅத்களை (வட்டார முஸ்லிம் அமைப்புகளை) இந்த மாநாடு கேட்டுக் கொள்கின்றது.

மாநாட்டு முடிவில் ஓர் அகில இந்திய குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு பாலஸ்தீன் மக்களின் பிரச்சினைகளைக் கவனிக்கும் என்றும் கூறப்பட்டது.

இத்துடன் இந்தத் தீர்மானம் மே 17 ஆம் நாளை பாலஸ்தீன் நாளாக அறிவித்து ஆண்டு தோறும் அது விடுமுறை நாளாக இந்தியாவில் அறிவிக்கப்பட வேண்டும் என இந்தியாவிலுள்ள ஆங்கில அரசை வலியுறுத்தியது.

(Source: Indian Office File: L/P and S/10/1302 : The Issue of Supreme Muslim Council. The Appeal of Indian Muslim Leader Maulana Mohamed Ali)

**அடுத்த இதழில் தொடரும்...**





# முஹம்மதியா மஸ்ஜித் - பர்பானி குண்டுவெடிப்பு வழக்கு 2003

## பிராமிணிஸ்ட் குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்பட்ட நீதிமன்றங்கள்

**அக்டோபர் மாத தொடர்ச்சி....**

நீதியை வழங்கிடுவதில் குற்றவியல் நீதிமன்றம் சிறப்பாக செயல்பட வேண்டும் என்றால், நடுவர் நீதிமன்ற நீதிபதி புலனாய்வு விசாரணையில் பங்கெடுத்திட வேண்டும். இதன் மூலம் வெறுமனே ஒரு பார்வையாளராகவும், தகவல்களை மட்டுமே பதிவு செய்யும் ஒரு நபராகவும் இருந்திடுவதை தவிர்த்திடலாம். சரியான தீர்வை எட்டுவதற்கு ஆர்வமுடன் கூடிய செயல்பாடும், எல்லா தொடர்புடைய ஆவணங்களை வெளிப்படுத்துவதும் அவசிய மாகிறது. இதன்மூலம் உண்மையை கண்டு பிடித்து, நியாயமுடனும் பாரபட்ச மின்றியும் நீதியை வழங்கிடலாம்.

நீதியை வழங்கிடுவதற்கு போதுமான சாட்சியங்களை வழக்கறிஞர்கள் தரப்போ அல்லது பிரதிவாதி தரப்போ சமர்ப்பிக்கவில்லை என்றாலும்கூட, உண்மையை நெருங்கு வதற்கும் வழக்கை சரியாக முடிப்பதற்கும் சத்தியத்தின் பக்கம் நிற்பதற்கும் நீதிமன்றத்திற்கு வழிவகை செய்வதே இப்பிரிவின் [section 311 Cr.P.C.] குறிக்கோளாகும். வழக்கு தரப்பு சில வேளை களில் கடமை தவறிடும் நேரத்தில், நீதிமன்றத் தால் வழக்கை சரியான திசையில் கொண்டு செல்ல இயலும். அதன் மூலம் உண்மையை நெருங்கிடலாம்.

விசாரணை தரப்பை அதன் போக்கில் விட்டுவிடுவதோ அல்லது அதில் என்ன நடக் கின்றது என்பதைப்பற்றி தெரியாமல் இருப்பதோ அல்லது இதைப்போன்ற தவறுகளின் போது பாராமுகமாக இருப்பதோ நீதிமன்றத்தின் செயல் ஆகாது. (அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்ட பிரிவு எண் புத்தக ஆசிரியரால் சேர்க்கப்பட்டது)

விசாரணை நீதிமன்றத்தை பார்த்து உச்சநீதி மன்றம் கூறிய இச்செய்தி மிகத் தெளிவாகவே உள்ளது.

### 5) சனத்குமார் பாதேவின் வாக்குமூலம்

பர்பானி குண்டுவெடிப்பு 2003, ஜால்னா குண்டுவெடிப்பு 2004, பூர்ணா குண்டுவெடிப்பு 2004, நந்தேத் குண்டுவெடிப்பு 2006 ஆகிய அனைத்து குண்டுவெடிப்புகளும் ஒரே சதித் திட்டத்தின்கீழ் நடந்தவை என்பது தெளிவாகி விட்டது. எனவே இந்த வழக்குகளில் சில பொதுவான சாட்சியங்கள் அளித்த வாக்கு மூலத்தை இதர வழக்குகளின் விசாரணைக்கும்


vaigarai velicham official

பயன்படுத்திட முடியும். சனத்குமர் பாதே, புனேவில் வசிப்பவர், ஓய்வு பெற்ற ஒரு கடற் படை அதிகாரி. இவர் அளித்த வாக்குமூலம் முக்கியமானவற்றில் ஒன்று. பர்பானி வழக்கிலும் நந்தேத் வழக்கிலும் இவர் ஒரு சாட்சி. நந்தேத் வழக்கில், தன்னுடைய சாட்சியத்தை தீவிரவாத எதிர்ப்புப்படையினர் பதிவு செய்யும்போது பின்வரும் உண்மைகளை அவர் வெளிப் படுத்தினார்.

2000 மார்ச் அல்லது ஏப்ரலில் புனே சரஸ்வதி மந்திர் பள்ளிக் கூடத்தின் பின்புறம் அமைந்திருக்கும் பஜ்ரங்தள் அலுவலகத்தில் இருந்து அவருக்கு ஒரு அழைப்பு வந்துள்ளது. புனேவில் நடைபெறவிருக்கும் ஒரு முகாமில் தன்னுடைய உறுப்பினர்களுக்கு ஜெலட்டின் குச்சிகளை பயன்படுத்தி பயிற்சி அளிக்க வேண்டு மென அவரிடம் கேட்டுக்கொண்டுள்ளார் பஜ்ரங்தளின் அகில இந்திய உடற்பயிற்சி பிரிவின் தலைவர் மிலிந்த் பரன்டே. சனத்குமார் பாதே இந்த முகாமில் பங்கு கொள்ள சம்மதம் தெரிவித்து பயிற்சியும் அளித்துள்ளார். மாநில அளவில் தொடர்புடைய கிட்டத்தட்ட 40–50 பேர் இதில் பங்கெடுத்துள்ளனர். ஹிமான்சு பான்சே இந்த கூட்டத்திற்கு தலைவனாக செயல்பட்டு உள்ளான்.

2) நாக்பூர் போன்சாலா ராணுவ பள்ளிக் கூடத்தில் தேசிய அளவில் நடைபெறவிருக்கும் முகாமிலும் பயிற்சி அளிக்குமாறு சனத்குமார் பாதேவிடம் கேட்டுக்கொண்டுள்ளார் மிலிந்த் பரண்டே. சனத்குமார் பாதே அதற்கும் ஒத்துக் கொண்டுள்ளார். பரண்டேவும் அவனின் மூன்று சீடர்களும் நாக்பூர் முகாமிற்கு 300 குச்சிகளை கொண்டு வந்து சேர்த்தனர். ஆர்எஸ்எஸ் பஜ்ரங்தள் இரண்டும் இணைந்து நடத்திய 40 நாட்கள் பயிற்சி முகாம் இது. இந்தியா முழுவதிலும் இருந்து 115 பேர் இதில் கலந்து கொண்டுள்ளனர். சனத்குமார் பாதே இதில் பங்கெடுத்து ஜெலட்டின் குச்சிகளை பயன் படுத்துவதைப் பற்றி பயிற்சியும் அளித்து உள்ளார். இவரை தவிர, இரண்டு முன்னாள் ராணுவ அதிகாரிகள், ஒரு மூத்த மத்திய உளவுத்துறை அதிகாரி (IB) ஆகியோரும் இதில் கலந்துகொண்டு பயிற்சி அளித்துள்ளனர். ஹிந்துகள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் இவர் களிடையே குழப்பத்தை விளைவிக்கும் சில ஆட்சேபனைக்குரிய விரிவுரைகள் அந்த முகாமில் நடந்ததால் 4 அல்லது 5 நாட்களுக்கு முன்னதாகவே அந்த முகாமை விட்டு வெளியேறி உள்ளார் சனத்குமார் பாதே.



**எஸ்.எம். முஷ்ரிஃப், IPS**
முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல்,
மகாராஷ்டிரா காவல்துறை

3) கோல்ஹபூர் மாவட்டத்தில் உள்ள கதிங்லஞ்ச் இடத்தில் நடைபெறவிருந்த பஜ்ரங்தள் முகாமிலும் பங்கெடுக்க அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சங்கர் வைத்யா தான் இம் முகாமிற்கு தலைவன்.

பர்பானி குண்டுவெடிப்பு வழக்கிலும் சனத் குமார் பாதே இதைப்போன்ற வாக்குமூலத்தை கொடுத்துள்ளார். இவர் ஒரு நேர்மையான மனிதரைப்போன்று தெரிகிறார். விசாரணை முகமைகள் இவரை பயன்படுத்தி புனே, நாக்பூர், கதிங்லஞ்ச் ஆகிய இடங்களில் நடந்த பயிற்சி முகாம்களை பற்றிய தகவல்களை எடுத்திருக்க வேண்டும். பயிற்சி அளித்தவர்களின் பெயர்கள், பயிற்சி பெற்றவர்களில் முக்கியமான நபர்கள், எந்த விதமான பயிற்சிகள் அளிக்கப்பட்டன என்பன போன்ற தகவல்களை எடுத்திருக்க வேண்டும். விசாரணையை ஒரு குறிப்பிட்ட வழக் கோடு மட்டும் முடித்து கொள்வதை தவிர்த்து விட்டு பெரிய சதியை வெளியே கொண்டுவரும் அளவிற்கு விசாரணையை விசாலப்படுத்தி இருக்க வேண்டும்.

சனத்குமார் பாதேவை பயன்படுத்தி பர்பானி குண்டுவெடிப்பு வழக்கில் குற்றவாளி களை அடையாளம் கண்டிருக்க வேண்டும். குறிப்பாக யோகேஷ் தேஷ்பாண்டே (விடுல்கர்), மாருதி வாக், சஞ்சய் சவுத்ரி ஆகியோர் தீவிரவாத பயிற்சி முகாமில் பங்கெடுத்தனரா இல்லையா என்பதை உறுதி செய்து இருக்க வேண்டும். வழக்கில் இது மிகவும் முக்கியமான பகுதி என்பதால் இதில் நீதிமன்றம் கவனம் செலுத்தி இருக்கலாம். சனத்குமார் பாதே அடையாளப் படுத்திய குற்றவாளிகளை பிடித்திருக்கலாம்.

## 6) ஹிமான்சு பான்சே வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட வெடி குண்டுகள்

சாட்சியத்தின் முக்கிய பகுதியை உதாசீனம் செய்த காவல்துறை, ஹிமான்சு பான்சே வீட்டில் இருந்து வெடிபொருட்கள் நிரப்பப்படாத உறைகளை கண்டுபிடித்ததாக கூறி பர்பானி வழக்கையும் நந்தேத் வழக்கையும் அரை மன துடன் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டது. ஆனால் இந்த முயற்சியில் அவர்கள் தோல்வி யுற்றனர்.

விசாரணையை நேரில் பார்த்த சாட்சியங் களையும் அப்படி பார்த்தவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் வாக்கு மூலங்களையும் கூர்மையாக கவனித்தால், ஹிமான்சு பான்சே வீட்டில் வெடிப்பொருட்கள் உறையை திணித்தது காவல்துறை தான் என்று தெளிவாகப் புலப்படும்.

விசாரணையை நேரில் பார்க்கும்போது எடுக்கப்பட்ட விவரக் குறிப்பில், கைப்பற்றப் பட்ட 47 பொருட்களின் பெயர்களும் அதனைத் தொடர்ந்து அப்பொருட்களின் தோராய மதிப்பும் எழுதப்பட்டிருந்தது. ஆனால் வரிசை எண் 38இல் வெடிப் பொருட்களின் பவுடர்கள் அடங்கிய வட்டவடிவ பெட்டியை உள்ளடக்கிய ஒரு ரெக்ஸின் பேக், ஸ்ரீ பால கிருஷ்ணா Fire Work சிவகாசி என்ற பெயரைத் தாங்கிய ஒரு பிளாஸ்டிக் பொதி, 3 அடி நீள முடைய தீப்பற்றக்கூடிய கம்பிகளும் 58 வெடி களும் என்று எழுதப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து அதன் தோராய மதிப்பும் குறிப்பிடப் பட்டிருந்தது. ஆனால் ‘ஒரு CARTRIDGE F.7.65' என்ற பொருள் அதன் தோராய மதிப்பிற்கு பின் எழுதப்பட்டிருந்தது சந்தேகத்தை உண்டாக்கு கிறது.

மேலும், 2006 ஏப்ரல் 7இல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பப் பட்ட கைப்பற்றப்பட்ட பொருட்களின் அட்டவணையில் Cartridge F.7.65 பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. விசாரணையை சோதனையை நேரில் பார்த்த சாட்சியங்களும் இதற்கு ஆதரவாக இல்லை.

எனவே வெடி பொருட்கள் வைக்கப்படும் உறையை வைத்தது காவல்துறை என்றே தோன்றுகிறது. அதன் மூலம் நந்தேத் வழக்குடன் பர்பானி வழக்கை தவறாக முடிச்சுபோட காவல்துறை முயன்றுள்ளது என்றும் தோன்று கிறது.

ஆனால் இரு வழக்குகளையும் இணைக்கும் இதர உண்மையான விஷயங்கள் விசாரணையின் போது வெளிச்சத்திற்கு வந்தன:

இந்த உண்மைகள் இரண்டு குண்டு வெடிப்புகளுக்கும் ஒரே சதித்திட்டம் தீட்டப் பட்டுள்ளது என்பதை குறிப்பிடுகிறது.

1) சஞ்சய் சவுத்ரியிடம் நடத்தப்பட்ட உண்மை கண்டறியும் சோதனை மொத்த சதித் திட்டத்தையும் வெளிப்படுத்துகிறது.

2) சனத்குமார் பாதே, விநாயக் கத்கே (நாக்பூரில் நடந்த பயிற்சி முகாமிற்கு பா தே உடன் சென்றவன்), விசாரணை அதிகாரி ACP அணில் தமைசேகர் இவர்கள் அளித்த வாக்கு மூலங்களின் படி புனே பஜ்ரங்தள் அலுவலகம், நாக்பூர் போன்சாலா ராணுவ பள்ளிக்கூடம், புனே சின்ஹகட் அகான்சா ரிஷார்ட் ஆகிய 3 இடங்களில் நடந்த பயிற்சி முகாமில் ஹிமான்சு பான்சே கலந்து கொண்டான் என்பது நிரூபணமாகிறது.

3) புனே சின்ஹகட் அகான்சா ரிஷார்ட்டில் வைத்து நடந்த குண்டுகளைத் தயாரிப்பது எப்படி என்ற பயிற்சி முகாமில் சஞ்சய் சவுத்ரி, ஹிமான்சு பான்சே, யோகேஷ் தேஷ்பாண்டே, மாருதி வாக் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர் என்று ACP அணில் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

4) பர்பானி குண்டுவெடிப்பு நடப்பதற்கு ஒருநாள் முன்னதாக ஹிமான்ஷு பான்ஷே பெயரை பயன்படுத்தி சஞ்சே சவுத்ரி புனே சென்று அங்கே ஒரு முக்கியமான நபரை சந்தித்துள்ளான்.

5) போலி தாடி, போலி மீசைகள், முஸ்லிம்கள் பயன்படுத்தும் நீண்ட அங்கிகள் ஆகியவை ஹிமான்சு பான்ஷே வீட்டிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன.

6) மாருதி வாக் கடையிலிருந்து பள்ளி வாசலின் வரைபடங்கள் மற்றும் ஹிமான்சு பான்சே, மாருதி வாக், சஞ்சய் சவுத்ரி இவர்கள் இடையே உள்ள தொடர்பை விளக்கும் பேப்பர்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.



7) ஒரு பள்ளிவாசலின் வரைபடமும் பஜ்ரங்தள் கூட்டங்களில் நடந்த விவாதங்கள் அடங்கிய டைரியும் மாருதி வாக் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டன.

8) பர்பானி குண்டுவெடிப்பு நடந்த அன்று யோகேஷ் தேஷ் பாண்டே (விடுல்கர்) பர்பானியில் தான் இருந்தான் என்பதை உறுதிப் படுத்தும் துர்கா குந்திகரின் வாக்குமூலம்.


விசாரணை தரப்பு இங்கேதான் தன் வாதத்தை திறம்பட வைத்திருக்க வேண்டும். குற்றப்பத்திரிக்கை உடன் இணைக்கவில்லை என்ற காரணத்திற்காக சஞ்சய் சவுத்ரியின் உண்மை கண்டறியும் சோதனை அறிக்கையை நீதிமன்றம் ஏற்க மறுத்தபோது, அது வழக்கிற்கு எவ்வளவு முக்கியமானது என்பதை அழுத்தமாக கூறி இருக்க வேண்டும் விசாரணை தரப்பு.

பிரதிவாதியின் மனுவை ஏற்றுக்கொண்டு அதே நேரத்தில் சோதனையின் போது கைப்பற் றப்பட்ட பொருட்கள் உடனடியாக சீல் செய்யப் படவில்லை என்ற காரணத்தைக் கூறி அந்த விவரங்களை நீதிமன்றம் ஏற்க மறுத்தபோது, அவை முறையாக சீலிடப்பட்டுள்ளன என்பதை விசாரணை தரப்பு நிரூபித்து இருக்க வேண்டும். சில வழக்குகளை காண்பித்து வாக்குமூலத்தை U/S 164 CR.P.C.இன் படி பிரதிவாதி தரப்பு நிராகரித்த போது, அதற்கு மாற்றாக ஆதரவான வழக்குகளை காண்பித்து இருக்க வேண்டும். சில உறுதிப்படுத்தும் சாட்சியங்களையும் சமர்ப்பித்து இருக்க வேண்டும். துர்கா குந்திகர் வீட்டிற்கு யோகேஷ் தேஷ்பாண்டே சென்றான் என்பதை மட்டும் வைத்து குற்றத்தில் அவனை தொடர்பு படுத்த முடியாது என்று கூறி துர்கா குந்திகரின் வாக்கு மூலத்தை நீதிமன்றம் நிராகரித்தபோது, மற்ற சாட்சியங்களை உறுதிப்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலை சான்றே இது என்று வாதித்திருக்க வேண்டும். ஆனால் ஒட்டுமொத்த நிகழ்விலும் விசாரணை தரப்பு ஒரு பார்வையாளரை போன்று செயல்பட்டுள்ளது.

## 7) வீணடிக்கப்பட்ட ACP அணில் தமைசேகரின் வாக்குமூலம்

வழக்கின் பெரும் பகுதியை விசாரணை செய்தவர் மும்பை தீவிரவாத எதிர்ப்புப் படையை சேர்ந்த ACP அணில் தமைசேகர். சஞ்சே சவுத்ரி, ஹிமான்சு பான்சே, யோகேஷ் பாண்டே, மாருதி வாக் ஆகியவர்களின் பங்கும் குண்டுவெடிப்பில் உள்ளதை ஒப்புக் கொண்ட ஸ்ரீகர் சோனவேநின் முக்கியமான வாக்கு மூலத்தை பதிவு செய்தவர் அவர். பர்பானி குண்டுவெடிப்பு நடப்பதற்கு ஒருநாள் முன்னதாக ஹிமான்சு பான்சேவின் பெயரை பயன்படுத்தி சஞ்சே சவுத்ரி புனே சென்று அங்கே ஒரு முக்கியமான நபரை சந்தித்தான் என்ற விபரமும் அந்த வாக்குமூலத்தில் அடங்கி யுள்ளது. சஞ்சய் சவுத்ரியை கைது செய்து அவரிடம் உண்மை கண்டறியும் சோதனையை நடத்தியவர் ACP அணில்.

அடுத்த இதழில் தொடரும்...





குழந்தை வளர்ப்பு

# இஸ்லாமும் மாணவர்களும்

**மீடியாக்கள்** என்ற ஊடகங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு வேலையைச் செய்து கொண்டிருக்கின்றன. அஃது இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் தீவிரவாதிகளாகச் சித்தரிக்கின்ற திருச் செயல்தாம்?

முஸ்லிம்களைத் தீவிரவாதிகளாகச் சித்தரிக்கும் இந்த முயற்சியில் அவர்கள் அபாரமான வெற்றிகளை ஈட்டி வருகின்றார்கள்.

இந்த வெற்றிகளின் உச்சகட்டம் ஒன்று உண்டு அதுதான் முஸ்லிம்களையே இவர்களின் பிரச்சாரங்க ளுக்கு பலியாக்கிவிட்டது.

முஸ்லிம் குழந்தைகளும் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களும்கூட இந்தப் பிரச்சாரத்திற்குப் பலியாகிவிட்டார்கள்.

மேலை நாடுகளிலும், இந்தியாவிலும் நமது பள்ளிச் சிறுவர்கள் தாங்கள் நண்பர்களால் தீவிரவாதிகள் என இடித்துக் காட்டப்படுகிறார்கள்.

இதுவே நமது குழந்தைகள் படிக்கும் கல்விக் கூடங்களிலும் நடக்கின்றன, என்கிறது அண்மைகால ஆய்வு ஒன்று.

ஏன் கிராமப்புறங்களில் நாம் இஸ்லாத்தை எடுத்துச் சொல்லிட சென்றிடும் கிராமங்களில் கூடஒரு தீவிரவாதப் பார்வை படர்ந்திருக்கின்றது! என்ற புகார்கள் வந்து கொண்டிருப்பதை நாமறிவோம்.

இந்த வகையில் பள்ளி செல்லும் நமது குழந்தைகள் சில நெறிமுறைகளைக் கையாண்டிட வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்கள் மேலை நாடுகளில் ஆய்வுகளை மேற்கொண்ட முஸ்லிம்கள்.

இந்த நெறிமுறைகளை அவர்கள் பின்பற்றிட பெற்றோர்கள் உதவி செய்திட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அவர்கள் இஸ்லாமிய கலாச்சார அடையாளங்களோடு பள்ளிக்கூடம் செல்ல தயங்கிடக் கூடாது. பெற்றோர்கள் அவர்களை இஸ்லாமிய அடையாளங்களோடு அனுப்பிட வேண்டும் அதாவது பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் படிக்கும் முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணிந்து பர்தா அணிந்து செல்ல எந்தத் தயக்கத்தையும் காட்டிடக்கூடாது. அஃது உடன் படிக்கும் மாணவர்களிடையே ஒரு கண்ணியத்தைப் பெற்றுத்தரும். அஃதோடு பார்ப்பவர்களிடம் இஸ்லாம் ஒழுக்கம் பேனும் ஓர் உயர் மார்க்கம் என்பதையும் அறிவுறுத்தும். மேலை நாட்டுப் பெண்களும், ஆண்களும் பர்தா அணிவதை பிற்போக்குத் தனம் என எண்ணிய காலம் மலையேறிப் போய்விட்டது என்பதை மறக்கக் கூடாது..


vaigarai velicham official

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளிலேயே இந்தப் பர்தா முறை அணியணியாக ஆயிரமாயிரம் பெண்களை இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்துள்ளது. அண்மையில் பிரான்ஸ் நாட்டில் பர்தா முறைக்கு எதிராக அரசு வரிந்து கட்டிக் கொண்டு நின்றது. இதற்கு பல காரணங்கள். அவற்றுள் ஒன்று இந்தப் பர்தா முறை பல நூற்றுக் கணக்கில் அல்ல; பல ஆயிரக் கணக்கில் பெண்களை இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்ததுதான்.

இதனை (Silent Dawah) அமைதியான இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணி என்கின்றனர்.

பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் பல மேலை நாடுகளில் மாணவர்கள் ஒரு அமைதியாக ஆரவாரமில்லாமல் இஸ்லாத்தை அடுத்தவர்களுக்கு எடுத்துச் சொல்லும் பணியை நிறைவேற்றி விடுகின்றார்களாம்.

மேலும் அந்த மாணவர்கள் நேரம் வந்தால் தொழுகையை கூச்சமில்லாமல் நிறைவேற்றி விடுகின்றார்களாம். இதைப் பார்க்கின்ற ஏனைய மாணவர்களிடையே இந்த இறை வணக்கத்தையும் அதை நிலைநிறுத்தச் சொல்லும் இஸ்லாத்தையும் அறிந்திடும் ஆர்வத்தை ஏற்படுத்தி விடுகின்றதாம்.

அன்பு நண்பர்களாய் பழகும் அந்த மாணவர்களுக்கு இவர்கள் இஸ்லாத்தைப் போதிக்கின்றார்கள். ஆரவாரமற்ற இந்தப் பணியில் இரண்டு நன்மைகள் நடக்கின்றன:

**ஒன்று:** அவர்கள் இஸ்லாம் என்ற சொல்லே தீவிரவாதத்தோடு தொடர்புடையது என்ற தவறான எண்ணத்திலிருந்து விடுபடுகின்றார்கள்.

**இரண்டு:** இஸ்லாத்தைப் புரிந்துகொள்கின்றார்கள். இஃது அவர்கள் : என்றாவது ஒருநாள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கு உதவி செய்கின்றது.

(அல்லாஹ், அவன் நாடியவர்களையே நேர்வழியில் இணைக்கின்றான்)

இப்படித் தங்களோடு படிக்கும்-பழகும் - மாணவர்களிடையே இஸ்லாத் தைப்பற்றிய ஆர்வத்தை உருவாக்கிட அந்த மாணவர்கள் அல்லது மாணவிகள் செய்வது வேறொன்றுமில்லை, அவர்கள் அல்லாஹ் தங்களுக்குக் கட்டளை இட்டவைகளை இனிதே நிறைவேற்றுகின்றார்கள்; அவ்வளவுதான்.

இஸ்லாத்தின் வளர்ச்சியைத் தடுக்கவும், முஸ்லிம்களைக் கொன்றொழிக்கவும் முஸ்லிம் நாடுகளை சின்னாபின்னா படுத்தவும் மாபெரும் சூழ்ச்சி ஒன்றை கையாண்டது அமெரிக்கா.

அது, செப்டம்பர் 9/11 என வர லாற்றில் அறியப்படும் இரட்டைக் கோபுரங்களைத் தகர்த்த பழியை முஸ்லிம்களின்மேல் போட்டது. முஸ்லிம்கள்தாம் இதைச் செய்தார்கள் என்பதை இன்றளவும் நிரூபிக்க முடியாத இந்தச் சதிக்குப்பின், உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் ஒரு தாழ்வு மனப்பான்மைக்கு உட்படுத்தப் பட்டார்கள்.

இந்தத் தாழ்வு மனப்பான்மைக்குப் பள்ளி மாணவர்களும், மாணவிகளும் கூட உட்பட்டு விட்டார்கள். இதனை வெற்றிகொள்ள ஐரோப்பிய நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கும் மாணவர் இஸ்லாமிய அமைப்புகள் கண்டெடுத்த அபார உத்திதான், மாணவர்கள் எந்தத் தாழ்வு மனப்பாண்மைக்கும் உட்படாமல், எந்தச் சலனமுமில்லாமல் இஸ்லாம் கடமையென கற்பித்தவைகளை அஞ்சாமல் நிறைவேற்றுவது. இஸ்லாமியக் கடமைகளை நிறைவேற்றும்போது, மாணவர்கள் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தக் கூடாது என்பது மட்டுமல்ல எந்தத் தயக்கத்தையும்கூட காட்டிடக்கூடாது. ஆமாம் 9/11 கோர நிகழ்வுகளுக்குப்பின் ஐரோப்பாவிலும் ஏன் கீழை நாடுகளிலும் இஸ்லாமிய கடமையை நிறைவேற்றவதில் பயங்கர தயக்கங்களைக் காட்டினார்கள் முஸ்லிம்கள். குறிப்பாக உயர்கல்விகற்கும் மாணவர்கள். காரணம், உடன் படிக்கும் எனைய மாணவர்கள் பாடிய வசை அவர்கள் ஏளனத்தோடு பார்த்தார்கள்தாம். முஸ்லிம் மாணவர்களை இதனால் தொழுகையை முறையாக நிறைவேற்றிக் கொண்டிருந்த மாணவர்கள் சிலர் தொழுகையைத் தங்கள் இல்லங்களுக்குச் சென்ற பின்னரே நிறைவேற்றினார்கள்.

இன்னும் சில மாணவர்கள் தொழுகை போன்ற கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்து பின் வாங்கினார்கள். இன்னும் சில மாணவர்களோ தொழுகையை பள்ளிக்கூடங்களில்



நிறைவேற்றினார்கள், என்றாலும் ஏனைய மாணவர்களிடமிருந்து மறைத்தார்கள். பிரிய முடியாத நண்பர்களிடம் "ஒரு நிமிடம்" எனப் பொய்க் காரணங்களைச் சொல்லியே பிரிந்தார்கள். தான் தொழுகையை நிறைவேற்று வது அடுத்தவர்களுக்குத் தெரிய வேண்டாம் என மறைத்தனர்.

இவற்றையெல்லாம், ஒன்றாய்க் கெல்லி யெறியும் வழிமுறை ஒன்றைக் கண்டுபிடித் தார்கள்; அதுதான் எந்தத் தயக்கமும் இல்லாமல் மாணவர்கள் வழக்கம்போல் தங்கள் கடமை களை நிறைவேற்றிட வேண்டும். அவர்கள் அன்பு காட்டுவதிலிருந்து எல்லாப் பழக்க வழக்கங்களி லும், ஏனைய மாணவர்களிடம் நேர்மையோடும் வாய்மையோடும் நடந்துகொள்ள வேண்டும் என முடிவு செய்தார்கள்.

இதனை மாணவர்கள் செயல்படுத்தி னார்கள். ஏனைய மாணவர்களிடம் இஃதோர் பெரும் மன மாற்றத்தைக் கொண்டுவந்தது.

முஸ்லிம் மாணவர்கள் இஸ்லாத்தின் மேலும் இஸ்லாம் கற்பித்த கடமைகள்பாலும் காட்டிய ஆர்வம் அவர்களை இஸ்லாத்தைப் பற்றி அறிந்திடும் ஆர்வத்தை அதிகப்படுத்தின.

இஸ்லாம் ஒரு சிறந்த மார்க்கம் என்ற செய்தி எல்லா இடமும் சென்று சேர்ந்தது.

தாழ்வு மனப்பாண்மையோடு அலைந்த முஸ்லிம் மாணவர்களிடம் இப்படியொரு வாதத்தை வைத்திருக்கின்றார்கள்.

வரலாற்றில் ஐரோப்பாவுக்கு அறிவின் வெளிச்சத்தைக் காட்டியதே இஸ்லாம்தான். ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டதே முஸ்லிம் விஞ்ஞானிகளும் அறிஞர்களும்தான். (இதனை இன்றளவும் ஐரோப்பியர்களே மறுத்ததில்லை.)

இஸ்லாம் உலகை ஆண்ட நாள்களில் நீதியையும் அமைதியையும் அகிலமெல்லாம் நிலைநாட்டியதே தவிர அமெரிக்கா இன்று ஈராக்கில்-அபூ ஹுரைப்பில் - கவுண்டமானோ வில் செய்வதைப்போல் அடாவடித்தனங்களைச் செய்ததில்லை.

800 ஆண்டுகளுக்குமேல் நீதியையும் அமைதி யையும் உலகெங்கிலும் நிலை நாட்டிய பெருமையும் பெரும் வரலாறும் இஸ்லாத்திற்கே சொந்தம்.

அத்தோடு ஐரோப்பாவின் கல்விக் கூடங் களில் தாழ்வாகத் தங்களைக் கருதும் முஸ்லிம் மாணவர்களிடம் இப்படியும் ஒரு விவாதத்தை வைத்திருக்கின்றார்கள்.

"ஒருபால் புணர்ச்சியும் அதன் வழிவந்த திருமணங்களையும் அங்கீகரிப்பவர்கள் தலை நிமிர்ந்து வாழ்ந்திட முடியும் என்றால்; நல்ல ஒழுக்கத்தை பேணும் நாம் - முஸ்லிம்கள் - ஏன் தலை நிமிர்ந்து வாழ்ந்திடக் கூடாது.

நாம் இஸ்லாம் சொல்லும் ஒழுக்கங்களின் நடமாடும் பிம்பங்களாக வாழ்ந்துவிட்டால் நிச்சயமாக நாமே சிறந்த சமுதாயம். தலை நிமிர்ந்து வாழ்ந்திட வேண்டியவர்கள் நாம்தான்" என்ற எண்ணத்தை பதித்தார்கள்.


இவற்றின் விளைவாக ஐரோப்பிய மாண வர்கள் இன்று இஸ்லாத்தை ஆரவாரமின்றி அடுத்தவர்களுக்கு எடுத்துச் சொல்லும், நடமாடும் பாடசாலைகளாக மாறிவருகின் றார்கள்.

இதனை இதேபோன்ற பாதிப்புகளுக்கு ஆளாகி நிற்கும் நாமும் செய்திடுவோம். இந்தப் பண்புகளையும் நெஞ்சுரத்தையும் நமது மழலை களிடமும் கொண்டுவருவோம். இதில் பெற்றோர்கள் போதிய கவனம் செலுத்தியாக வேண்டும். Source: Muslim Youth: Aug 2004. From. MSA of USA & CANADA.

இன்ஷா அல்லாஹ்!

- MGM


vaigarai velicham official



# உடற் பருமன் பல நோய்களின் நண்பன்

பத்மஸ்ரீ டாக்டர் **வி.எஸ்.நடராஜன்**
முதியோர் நல மருத்துவர்

## உடற்பருமனைக் குறைக்க வழிமுறைகள்

முதலில் ஏதேனும் நோய் இருக்கிறதா எனக் கண்டறிந்து அதற்கு தக்க சிகிச்சை பெற வேண்டும். அடுத்ததாக உணவு, உடற்பயிற்சி மற்றும் வாழ்க்கைச் சூழல் மாற்றங்கள் அடிப்படையானவை.

**உணவு முறைகள்**

நாள்தோறும் எவ்விதமான சிற்றுண்டியும் சாப்பிடாமல் மூன்று முறை சாப்பிடவும்.

நீங்கள் சிற்றுண்டி சாப்பிடுபவராக இருந்தால் இடையிடையே ஆரோக்கியம் தரும் சிற்றுண்டிகளோடு மூன்று முறை சிறு அளவுகளில் சாப்பிட வேண்டும்.

சர்க்கரை / சர்க்கரை கலந்த உணவுகள் வேண்டாம்.

எண்ணெயில் நன்கு பொரித்த, வதக்கிய உணவு கூடாது. சமைக்கும்போது எண்ணெயைக் குறைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் சாப்பிடும் அளவைக் குறைத்துக்கொள்ள சாப்பிடுவதற்கு சற்று முன்பு ஒரு கிளாஸ் தண்ணீர் குடிக்கவும்.

மெதுவாகச் சாப்பிடுங்கள். உங்கள் வயிறு நிரம்பிவிட்டது என மூளை உணர 20 நிமிடங்கள் ஆகும்.

புத்தம் புதிய பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்ற நார்ச்சத்து அதிகமுள்ளவற்றைச் சாப்பிடுங்கள்.

மது கூடாது. அது காலி கலோரிகளை (உங்கள் உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் அற்ற கலோரிகள் அளிக்கிறது.

உங்கள் உணவை ருசிமிக்கதாக்க உப்பு, சோயா சாஸ், தக்காளி கெட்ச் அப் ஆகியவற்றைக் குறைவாக உபயோகிக்கவும். அதற்குப் பதிலாக புத்தம் புதிய பூண்டு, இஞ்சி, தக்காளி போன்றவற்றை உபயோகிக்கவும்.

**உடற்பயிற்சி**

முதலில் எடையைக் குறைக்க உடற்பயிற்சி ஏன் முக்கியம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**உடற்பயிற்சியின் பலன்கள்**

■ கலோரிகளை எரிக்கிறது.

■ உடல் பருமனால் ஏற்படும் நோய்களைக் குறைக்கிறது.

■ பசியைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

■ தன்னம்பிக்கை மற்றும் மனநிலை விஷயங்களில் ஊக்கப்படுத்துகிறது.

■ உடலில் தசைகளைப் பாதுகாக்கிறது.

■ நீண்டகால வெற்றி பெற உதவுகிறது.

நாள்தோறும் 30 நிமிடங்கள் நடப்பது நம் லட்சியமாக இருக்க வேண்டும். இவ்வாறு நடக்கமுடியாதெனில் அதை மூன்றாகப் பிரித்து பத்து, பத்து நிமிடங்களாக நடந்து செல்லுங்கள். எடை குறைப்பில் நடப்பதன் மதிப்பைப் பற்றி உங்களுக்கு பல கேள்விகள் இருக்கலாம். ஏனெனில், இது மிக சுலபமானதாகத் தோன்றுகிறது. இதற்கென சிரமமான பெரிய முயற்சிகள் தேவையில்லை. உண்மை என்னவெனில், நடப்பதால் நிறைய நன்மைகளும் லாபங்களும் உண்டு. அதோடு, நீங்கள் தொடர்ந்து உடற்பயிற்சி செய்வதற்கும் இது ஒரு சிறப்பான

ஆரம்பம். நீச்சல், கூடைப்பந்து அல்லது ராக்கெட் விளையாட்டுகளைப் போல் இல்லாமல், யாரும் செய்யக்கூடியது இது. மேலும் இது பலருக்கும் கிடைக்கும் உடல் உழைப்பு நடவடிக்கை. உங்கள் விருப்பப்படி செய்யலாம். வேகமாக அல்லது மெதுவாக, உங்கள் விருப்பப்படி எப்போதும் எங்கேயும் போகலாம் என்பதே இதன் சிறப்பு. நடப்பது சுலபமானது. நடப்பது மகிழ்ச்சியானது. நடப் பதற்கு நீங்கள் அதிக சிரமப்பட வேண்டாம். குறைந்த அளவு சக்தியே போதும். எல்லா வற்றையும் ரசித்தபடி செய்யலாம். கைபேசி மூலம் இசையை ரசியுங்கள் அல்லது நண்பர் களுடன் நடந்து செல்லுங்கள். வாக்கிங் என்பது செலவில்லாதது. அதிக விலையுள்ள கருவிகள் அல்லது பூட்ஸ்கள்கூட தேவையில்லை.

**உடற்பயிற்சிக்கான ஆறு ஆலோசனைகள்**

■ நடப்பதற்காக 30 நிமிடங்கள் முன்னதாகவே எழுந்திருங்கள்.

■ உணவு இடைவேளையின்போதுகூட நடக்கலாம்.

■ வேலை இடைவெளிகளின்போதும் நடக்கலாம்.

■ வேலை முடிந்தபின் நடக்கலாம்.

■ சாப்பிட்ட பின்பும் நடக்கலாம்.


இரவு படுக்கப்போகும் முன்பு நடக்கலாம். எடையைக் குறைக்க நடைபயிற்சியைத் தவிர, வேறு சிறந்த சாதனம் ஏதும் இல்லை. மருந்து களை நம்ப வேண்டாம். விலை அதிகம். அதோடு, மருந்தை உண்ணும்போது மட்டுமே எடை குறையும். ஆகவே, எடை குறைப்பு நிரந்தரமானதல்ல. மருந்தினால் பக்கவிளைவுகள் உண்டு. ஆகவே முழுமனதுடன் உடற் பயிற்சியை நாடுங்கள். அது உங்களைக் கைவிடாது.

உடற்பருமனைக் குறைக்க உணவுக் கட்டுப் பாட்டுக்கு அடுத்ததாக நாள் தவறாமல் செய்யும் உடற்பயிற்சியே உதவும். இது ஒரு சிறந்த சாதனமாகும். தவறாமல் இதைக் கடைபிடித்தால் வெற்றி நிச்சயம்.

(மகிழ்ச்சியைத் தொடர்வோம் !)

**நன்றி : முதுமை எனும் பூங்காற்று**


இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு....!




வேர்கள் வெளியீட்டகம்

- மட்காவ்ன் (கோவா) குண்டு வெடிப்பு (2009):

2009ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி தீபாவளிக்கு ஒரு நாள் முன்பு மட்கால்ன் நகரைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இந்துக்கள் ஒன்று கூடும் இடத்தை வெடிகுண்டு வைப்பதற்கென தேர்வு செய்திருந்தார்கள், சம்பவ இடத்தில் ஒரு கைப்பையை வைத்து விட்ட்டிருந்தார்கள். அதில் கான் மார்கெட் என அச்சிடப்பட்டிருந்தது.

- அந்தப் பையில் முஸ்லிம்கள் பயன்படுத்தும் அத்தர் நறுமணக் குப்பிகள் இருந்தன.

அதாவது திட்டமிட்டப்படி இந்தக் குண்டு வெடித்திருந்தால் நூற்றுக்கணக்கான அப்பாவி இந்துக்கள் மாண்டிருப்பார்கள். காவல்துறையின் சந்தேகம் உடனடியாக முஸ்லிம்கள் மீது தான் விழும். முஸ்லிம்கள் பலர் சிறைப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் புனையப்பட்டு படுபயங்கரமான விஷயங்கள் ஊடகங்களில் பரப்பப்பட்டிருக்கும். அவையாவும் குற்றப்பத்திரிகையாக தாக்கல் செய்யப்படும். அவையும் ஊதி ஊதி பெருக்கப்படும். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இவையாவும் பொய்யானவை, உமையான குற்றவாளிகளை காவல்துறை கைது செய்யவில்லை என்று நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்யும்.......

- இந்த நூலிலிருந்து

விலை ரூ.30/-

படியுங்கள்! நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

பாசிசத்தை மாய்க்கவும் - பாரதத்தை பாதுகாக்கவும் முன் வாருங்கள்

போன் : 7401213394 / 7358278146 / 8148129887

# காது அழுக்கை எடுக்கலாமா?



**டாக்டர் சுதா,**
காது, மூக்கு தொண்டை நிபுணர்

**நம்** ஐம்புலன்களில் ஒன்றான காது, தானே தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும்படி அமைக்கப்பட்டுள்ளது.

காது அழுக்கு என்று சொல்லப்படும் வேக்ஸ் ஆனது நமது காதின் உள் தோல் சுரக்கும் சுரப்பிகளிலிருந்து வருவதாகும். இதன் தன்மை ஒவ்வொரு மனிதருக்கும் வேறுபடும். நம்மால் அது சுரப்பதையோ அதன் தன்மையையோ கட்டுப்படுத்த முடியாது. அது வெளியிலிருந்து வரும் அழுக்கும் அல்ல.

**வேக்ஸ் எதனால் சுரக்கிறது?**

நம்முடையகாதின்ஈரத்தன்மையைப் பாதுகாக்கிறது. பட்ஸ் (Buds) உபயோகித்தால் காதின் தோல் வறண்டு அதிர்ப்பு ஏற்படுகிறது.

பாக்டீரியா, காளான் (fungal) நோய்த் தொற்று வராமல் காக்கிறது.

**வேக்ஸ் எப்படிச் சுரக்கிறது?**

வெளிக்காதின் தோல் உள்ளிருந்து வெளியே நகர்கிறது. அவ்வாறு நகரும்போது, காதின் வெளியே வேக்ஸைக் கொண்டுவருகிறது. அதை நாம் ஒரு மெல்லிய துணியைக் கொண்டு துடைத்தால் போதுமானது.



**காது வேக்ஸ் எப்போது பிரச்னையாகிறது?**

அதிகமாகச் சுரந்து ஒரு கட்டிபோல அடைந்து காது அடைப்பு ஏற்படுதல்.

கேராடோசிஸ் எனப்படும் வேக்ஸ், தலைகீழாக வெளியிலிருந்து உள்ளிற்கு நகரும்போது, காதின் தோலும் அதனோடு இணைந்து, காதும் புண்ணாகி வலி ஏற்படும். சில சமயம், மயக்க மருந்து கொடுத்து இந்த வகை வேக்ஸ் எடுக்கும் சிகிச்சை தரப்படும்.

வயதானவர்கள், ஹியரிங் எய்டு அணியும் போது, கருவியின் நுனியில் வேக்ஸ் அடைத்து எய்டின் செயல்பாடு குறைய நேரலாம். அப்போது, வருடம் ஒருமுறை காதைப் பரிசோதித்து அழுக்கை எடுத்தால் கருவி நன்றாக வேலை செய்யும்.

**காது, மூக்கு, தொண்டை மருத்துவர் எப்படி வேக்ஸை எடுப்பார்கள்?**

கட்டியான அழுக்கை, காதில் சொட்டுமருந்து விட்டு ஒருவாரம் கரைத்தபின், அதனைக் கருவி, சக்ஷன், சிரிஞ்சி ஆகிய வழிமுறைகளில் காது, மூக்கு, தொண்டை மருத்துவர் சுலபமாக எடுத்துவிடுவார். சில வேளைகளில் மைக்ரோஸ்கோப் மற்றும் எண்டோஸ்கோப் உதவியுடன் எடுக்கப்படுகிறது. காதில் பிரச்னை ஒன்றும் ஏற்படாதவரை அதை ஒன்றும் செய்யாமல் இருப்பதே நல்லது!

**- நன்றி : முதுமை எனும் பூங்காற்று**

# பரிந்துரை....

அல்லாஹ் - அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறு இல்லை; அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன்; என்றென்றும் நிலைத்திருப்பவன்; அவனை அரி துயிலோ, உறக்கமோ பீடிக்கா; வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ள வையும் அவனுக்கே உரியன; அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? (படைப்பினங்களுக்கு) முன்னருள்ளவற்றையும், அவற்றுக்குப் பின்னருள்ளவற்றையும் அவன் நன்கறிவான்; அவன் ஞானத்திலிருந்து எதனையும், அவன் நாட்டமின்றி, எவரும் அறிந்துகொள்ள முடியாது; அவனுடைய அரியாசனம் (குர்ஸிய்யு) வானங்களிலும், பூமியிலும் பரந்து நிற்கின்றது; அவ்விரண்டையும் காப்பது அவனுக்குச் சிரமத்தை உண்டாக்குவதில்லை - அவன் மிக உயர்ந்தவன்; மகிமை மிக்கவன். (அல்பகரா - 2:255)

யாரும்யாருக்கும்உதவிசெய்யமுடியாத அந்த மறுமை நாளில் மனிதன் தன்னை நரகத்திலிருந்து காப்பாற்றிக்கொள்ள எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருப்பான். ஆனால் அன்றைய தினம் அவனால் எதையும் செய்ய முடியாது. இந்த சூழ்நிலையில் அல்லாஹ் ஒரு சிலருக்கு பரிந்துரை செய்யும் அந்தஸ்தை வழங்குவான். அதன்மூலம் நரகத்திலிருந்து விடுபட்டு சுவனம் செல்லும் வாய்ப்பை பெறுவார்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மறுமை நாளில் நமக்காக பரிந்துரை செய்வார்கள்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

“ஒவ்வொரு இறைத்தூதரும் ஒரு (பிரத்தியேக) வேண்டும் செய்துவிட்டனர் அல்லது ஒவ்வொரு இறைத்தூதருக்கும் (தம் சமுதாயத்தார் தொடர்பாக) ஒரு (விசேஷப் பிரார்த்தனை உண்டு. அதனை அவர்கள் (இம்மையிலேயே) கேட்டு விட்டனர். அது ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது. நான் என்னுடைய பிரார்த்தனையை மறுமை நாளில் என் சமுதாயத்தாருக்காகப் பரிந்துரை செய்ய வைத்துள்ளேன்” (புகாரி)

அல்லாஹ்வுடைய தீன் மேலோங்க வைப்பதற்காகவும் உண்மைக்காகவும் போராடி தன்னுடைய உயிரை இழந்த ஷஹீதுகளுக்கு அல்லாஹ் பரிந்துரை செய்யக்கூடிய வாய்ப்பை அளிக்கின்றான்.

“முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள் (மறுமை நாளில்) தன் குடும்ப அங்கத்தவர்களில் எழுபது நபர்களுக்கு ஒரு ஷஹீதின் பரிந்துரை அமையும்” (அபூதாவூத்)

அல்லாஹ் மறுமைநாளில் ஒருசில மலக்குமார்களுக்கும் பரிந்தரை செய்ய வாய்ப்பு அளிக்கின்றான்.

“அன்றியும் வானங்களில் எத்தனை மலக்குகள் இருக்கின்றனர்? எனினும் அல்லாஹ் விரும்பி எவரைத் பற்றித் திருப்தியடைந்து அவன் அனுமதி கொடுக்கின்றானோ அவரைத் தவிர வேறெவரின் பரிந்துரையும் எந்தப் பயனுமளிக்காது. (அந்நஜ்ம்:26)

அல்லாஹ்வின் வார்த்தையாக குர்ஆன், மறுமை நாளில் நமக்கு பரிந்துரை செய்யும் என முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

“நீங்கள் குர்ஆனை ஓதுங்கள் அது நாளை மறுமையில் அதை ஒதியவருக்கு பரிந்துரை செய்யும்” (முஸ்லிம்)

நாளை மறுமை நாளில் அல்லாஹ் யாருக்கெல்லாம் வாய்ப்பு அளிக்கின்றானோ அவர்களுடைய பரிந்துரை முடிந்தபின் இறுதியாக அல்லாஹ் ......... பரிந்துரை செய்வான். அதுவே இறுதியானது.


இவ்வாறு இறைத் தூதர்கள், வானவர்கள், இறை நம்பிக்கையாளர்கள் ஆகியோர் (தத்தம் தகுதிக்கேற்ப) பரிந்துரை செய்வார்கள். அப்போது சர்வ அதிகாரம் படைத்த (இறை)வன் (இனி) உன் பரிந்துரை (மட்டுமே) எஞ்சியிருக்கிறது


vaigarai velicham official

என்று கூறிவிட்டு, நரகத்திலிருந்து ஏழு கைப்பிடி அளவு மக்களை அள்ளியெடுத்து அவர்களை வெளியேற்றுவான். அவர்கள் கரிந்து போயிருப் பார்கள். எனவே சொர்க்க வாசலிலுள்ள ஒரு நதியில் அவர்கள் போடப்படுவார்கள். அதற்கு ஜீவநீர் (மாவல் ஹயாத்) என்று பெயர். உடனே அவர்கள் சேற்று வெள்ளத்தில் விதைப்பயிர் முளைப்பதைப் போன்று நதியின் இரண்டு மருங்கிலும் முளைத்து (நிறம் மாறி) விடுவார்கள். பாறையில் ஓரத்திலும் மரத்திலும் ஓரத்திலும் இந்தப் பயிரை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதில் வெயில் பக்கமாக இருப்பது பச்சையாகவும், நிழல் பக்கமாக இருப்பது வெள்ளையாக இருக்கும்.

ஆக இவர்கள் (அந்த நதியிலிருந்து) வெளி யேறும்போது, முகத்தைப் போன்று (புதுப் பொலிவுடன்) வெளியேறுவார்கள். அவர்களின் கழுத்தில் (நரகத்திலிருந்து விடுதலை பெற்ற வர்கள் என்பதற்கான) முத்திரை பதிக்கப்படும். பிறகு அவர்கள் சொர்க்கத்தினுள் நுழைவார்கள். அப்போது சொர்க்கவாசிகள் (இவர்களைப் பார்த்து இவர்கள் பேரருளாளனால் விடுதலை செய்யப்பட்டார்கள். இவர்கள் எந்த நற்செயலும் புரியாமல், எந்த நன்மையும் ஏற்கெனவே செய்திராமல் அவனே இவர்களை சொர்க்கத்தினுள் பிரவேசிக்கச் செய்தான் என்று கூறுவர். பிறகு (அவர்களிடம்) நீங்கள் காண்கிறீர்களே இதுவும் உங்களுக்கு உண்டு. இதைப்போன்று இன்னொரு மடங்கும் உங்களுக்கு உண்டு என்று (நற்செய்தி) சொல்லப்படும்.” (புகாரி)

மறுமை நாளில் அல்லாஹ் நம் அனைவ ருடைய கேள்வி கணக்கை எளிதாக்கி சுவனம் செல்லக்கூடிய நற்பாக்கியத்தை தந்தருள் வானாக!





நூலைப்பெற
போன்:
7401213394
7358278146
8148129887
விலை
ரூ.25/-

இந்த சித்திரவதைக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள், தாங்கள் எங்கே அழைத்துச் செல்லப்படுகின்றோம் என்பதை அறிந்திடவே மாட்டார்கள். அவர்களின் கண்களை கட்டித்தான் அழைத்துச் செல்வார்கள். அவர்களை யாரும் சந்திக்க இயலாது. அவர்கள் தங்களை சித்திரவதைப் படுத்துபவர்களை மட்டுமே பார்த்திட இயலும். இவற்றில் முக்கிய சித்திரவதைக் கூடம் மும்பையிலுள்ளது. ஹயசநல – ஆய்ரி வசதி கூடம் என இதற்குப் பெயர். இங்கே நான்கு அறைகள் இருக்கின்றன. இங்கே வைத்துதான் 2006 மாலேகான் குண்டு வெடிப்போடு சம்மந்தப்பட்ட செய்யத் கான் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவர் விசாரிக்கப்பட்டார். சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

- நூலிலிருந்து






அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

“ஹஜ்“ பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குழு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.

தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887

## 13.10.2024 அன்று கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் வக்ஃப் திருத்த மசோதா ஏன் திரும்பப் பெறப்பட வேண்டும்...?

# தாருல் இஸ்லாம் நடத்திய கருத்தரங்கம்...!








வக்ஃப் திருத்த மசோதா ஏன் திரும்பப்பட வேண்டும்...? என்ற கருத்தரங்கம் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் நெல்லித்துறை ரோட்டில் இருக்கும் உஸ்மானிய்யா திருமண மண்டபத்தில் *13/10/2024* ஞாயிற்றுக்கிழமை காலை *11:00* மணி முதல் *2:00* மணி வரை நடைபெற்றது. இதில் முதல் நிகழ்வாக சகோதரர் சிராஜ் அவர்கள் இறைவசனம் (கிராத்) ஓதி துவங்கி வைத்தார்கள்.

அடுத்த நிகழ்வாக வாழ்த்துரைகளை சகோதரர் வழக்கறிஞர் முஹம்மது சுலைமான், தோழர் இனியவன் - CPI(ML)RED STAR (மத்திய குழு உறுப்பினர்) மற்றும் சகோதரர் இளவேனில் - தமிழ்ப்புலிகள் கட்சி (மாநில பொதுச்செயலாலர்) அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இறுதியாக மிகவும் விரிவாக பாஜக அரசின் சதி முஸ்லிம்களின் வருங்கால நிலைமை இந்த மசோதாவுக்கு எதிராக நாம் செயல்பட வேண்டியது என்று விளக்கமாக சகோதரர் வழக்கறிஞர் அஹமத் அவர்கள் (மிஹிவிலி வழக்கறிஞர் பிரிவு மாநில செயளாலர்) கருத்துரை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் *35*க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.


vaigarai velicham official

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்




# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | **சிறையில் எனது நாட்கள்**<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் | - ரூ.350.00 |
| 2. | **ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு**<br>மு. குலாம் முஹம்மது | - ரூ.140.00 |
| 3. | **சாதி ஒழிந்தது** - டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 4. | **End of Casteism** T.M. Mani | - ரூ.50.00 |
| 5. | **அஹமதாபாத் குண்டுவெடிப்புகள்,** மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 6. | **டெல்லி குண்டுவெடிப்புகள்,** மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 7. | **நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 8. | **மால்கம்**-X, மு.குலாம் முஹம்மது | - ரூ.120.00 |
| 9. | **தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்** டி.எம்.மணி | - ரூ.20.00 |
| 10. | **செந்தமிழ்நாட்டுச் சேரிகள்,** டி.எம்.மணி | - ரூ.40.00 |
| 11. | **கர்கரேயை கொலை செய்தது யார்?** | - ரூ.250.00 |
| 12. | **சிந்திப்பீர் செயல்படுவீர்,** நா.கோதண்டபாணி | - ரூ.15.00 |
| 13. | **ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்,** ப.கோபால கிருஷ்ணன் | - ரூ.40.00 |
| 14. | **சாதி ஒழிந்தது** (ஹிந்தி) டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 15. | **நாம் பிரிந்து விடவேண்டாம்,** பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.175.00 |
| 16. | **தாலிபானின் பிடியில்,** மு. குலாம் முஹம்மத் | - ரூ.150.00 |
| 17. | **தீண்டாமைக்குத் தீர்வு** | - ரூ.30.00 |
| 18. | **பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு**<br>மு. குலாம் முஹம்மத் | - ரூ.110.00 |
| 19. | **பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள்,** மு. குலாம் மஹம்மத், | - ரூ.90.00 |
| 20. | **இஸ்லாமிய நாகரிகம்,**<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.130.00 |
| 21. | **கஷ்மீரின் பாதி விதவைகள்,** மு. குலாம் முஹம்மத், | - ரூ.70.00 |

| | | |
|---|---|---|
| 22. | **எது முதலில்?**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.450.00 |
| 23. | **சாதி ஒழிந்தது** (கன்னடம்) | - ரூ.50.00 |
| 24. | **அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?**<br>டி.எம். உமர் ஃபாரூக் | - ரூ.20.00 |
| 25. | **கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?** மு. குலாம் முஹம்மத் | - ரூ.30.00 |
| 26. | **முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம்**<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.15.00 |
| 27. | **இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும்** | - ரூ.50.00 |
| 28. | **இஸ்லாம் வழங்கும் தண்டனைகள்** | - ரூ.40.00 |
| 29. | **இஸ்லாமும் விஞ்ஞானமும்** | - ரூ.30.00 |
| 30. | **இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா?** | - ரூ.50.00 |
| 31. | **இஸ்லாமும் பெண்களும்** | - ரூ.60.00 |
| 32. | **இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா?** | - ரூ.70.00 |
| 33. | **தேசப்பிரிவினைக்கு யார் காரணம்?**<br>விரிவாக்கப்பட்ட பதிப்பு, மு. குலாம் முஹம்மத் | - ரூ.100.00 |
| 34. | **திருக்குர்ஆன் கூறும் பொறுமை**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.80.00 |
| 35. | 26/11- **விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்?** | - ரூ.220.00 |
| 36. | **ஒரு தலித் போராளியின் வாழ்வும்,**<br>**அவர் காட்டிய வழியும்** - அ.மார்க்ஸ் | - ரூ.20.00 |
| 37. | **முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்**<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.10.00 |
| 38. | **நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**<br>தி.லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.10.00 |
| 39. | **குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?**<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் | - ரூ.25.00 |
| 40. | **இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன்**<br>**லேப்டாப்பில் இருந்ததென்ன?** | - ரூ.20.00 |
| 41. | **கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான்**<br>கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | - ரூ.25.00 |
| 42. | **கூரியூர் ஜின்னா ஷஹீத்** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 43. | **முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும்** | - ரூ.20.00 |
| 44. | **இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு,** எஸ்.எம். முஷ்ரிப், | - ரூ.30.00 |
| 45. | **சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்,**<br>**காந்திஜி கொலை ஏன்? எப்படி?** | - ரூ.30.00 |


vaigarai velicham official

46. **பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்** - ரூ.400.00
எஸ்.எம். முஷ்ரிப், IPS, தமிழில் : மு. குலாம் முஹம்மத்

47. **குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள்,** தமிழில்: வளர்மதி - ரூ.150.00

48. **இஸ்லாம் ஒன்றே வழி!** - ரூ.120.00
அனிசுத்தீன் அஹமத், தமிழில் : மு. குலாம் முஹம்மத்

49. **இஸ்லாம் உங்கள் பார்வைக்கு** - ரூ.400.00
ஹமுத அப்த் அல் அத்தி, தமிழில் : மு. குலாம் முஹம்மத்

50. **முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?** - ரூ.300.00
ஹள்ரத் அபுல்ஹஸன் நத்வி (ரஹ்), தமிழில் : மௌலவி அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ

51. **சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள்** - ரூ.20.00

52. **இஸ்லாம் நாங்கள் தேர்தெடுத்த மார்க்கம்** - ரூ.100.00

53. **முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி** - ரூ.20.00
கரன் ஆம்ஸ்ட்ராங்

54. **நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம்** - ரூ.50.00

55. **பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி** - ரூ.50.00

56. **அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்** - ரூ.40.00

57. **எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர்** - ரூ.60.00

58. **சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை** - ரூ.60.00

59. **பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்** - ரூ.25.00

60. **முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்** - ரூ.20.00

61. **அயா சோபியா உருவான வரலாறு** - ரூ.50.00

## எமது விற்பனையில்...

01. **கோவை கலவரத்தில் எனது சாட்சியம்** - ரூ.100.00
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான்

02. **மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்** - ரூ.100.00
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு

03. **குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள்** - ரூ.170.00
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி,

04. **நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா?** - ரூ.140.00
தி.லஜபதி ராய், மூத்த வழக்கறிஞர்

05. **பலி கடாக்கள்** - ரூ.300.00

## BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 1. | **END OF CASTEISM** - T.M. Umar Farooq,<br>English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | **- Rs.50.00** |
| 2. | **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media | **- Rs.695.00** |
| 3. | **MUHAMMED THE PROPHET FOR OUR TIME**<br>Karen Armstrong | **- Rs.325.00** |
| 4. | **KAFKA LAND - PREJUDICE LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi | **- Rs.350.00** |
| 5. | **WHO KILLED KARKARE**<br>The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, | **- Rs.300.00** |
| 6. | **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif | **- Rs.275.00** |
| 7. | **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION**<br>Kamaluddin Ahamed | **- Rs.60.00** |
| 8. | **MUSLIMS AGAINST PARTITION OF INDIA**<br>Shamsul Islam, Pharos Media | **- Rs.280.00** |
| 9. | **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN**<br>(EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed | **- Rs.25.00** |
| 10. | **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE**<br>Nilofar Suhrawardy | **- Rs.150.00** |
| 11. | **Innocent Prisoners** | **- Rs.495.00** |
| 12. | **Brahminists Bombed Muslims Hanged** | **- Rs.350.00** |
| 13. | **Kodikkal- TheLiving Witness of Social Justice** | **- Rs.300.00** |

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது**

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

| | | |
|---|---|---|
| 01. | **ஜாதி ஒழிந்தது** - டி.எம். உமர் பாரூக் | - ரூ.60.00 |
| 02. | **நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி**<br>கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் | - ரூ.30.00 |

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887**
**Vaigarai Velicham Official**

தொடர்புக்கு : **8148129887, 7401213394**
வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

**Vaigarai Velicham Official** **vaigarai velicham official**

**darultrust@yahoo.com** **Website : Darulislam.in**



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002